Downloaded from https:// www.studiestoday.com

# மேனிலை முதலாம் ஆண்டு

# தமிழ்

## வகுப்பு

## XI

**HIGHER SECONDARY COURSE**

**SECOND LANGUAGE - TAMIL**

**First Year**

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

*Prepared by* State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala.
*Website* www.scert.kerala.gov.in *e-mail* scertkerala@gmail.com

*Typeset and design by* SCERT Computer Lab
*To be printed in quality paper - 80gsm map litho (snow-white)*

© Government of Kerala • Department of Education • 2014

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

***மாணவச் செல்வங்களே!***

**மொ**ழி என்பது மனிதனை ஒன்றிணைக்கச் செய்யும் கருவியாக மட்டுமன்றி, மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாகவும் திகழ்கிறது. மொழியின் இனிமையும் ஆற்றலும் அதனைப் பயன்படுத்துவோரின் தன்மையைப் பொறுத்தே அமையும் எனலாம். மொழி வாயிலாகப் பண் பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றைக் கற்று, காலகட்டத்திற்கு ஏற்ப அவற்றைத் திறம்படப் பயன்படுத்த வேண்டும். காலச்சூழலுக்கு ஏற்ப மொழியில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு. அவற்றை அறிந்து மொழி அமைப்பினை நன்கு புரிந்து, அதனைக் கையாளும் திறனை மாணவர்கள் பெற வேண்டும். அத்துடன் வாழ்வியல் மதிப்பீடுகளையும் புரிந்துகொண்டு அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற முயல வேண்டும். இந்நோக்கில் கற்றல் அடைவுகளுக்கு ஏற்பப் பாடப்பகுதிகளும் செயல்பாடு களும் வடிவமைக்கப்பட் டுள்ளன. இவற்றை நன்கு கற்று மாணவர்கள் பயனடைய வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகள்,

**முனைவர். எஸ். இரவீந்திரன் நாயர்**

இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# Textbook Development Team

## Std XI - TAMIL - GENERAL

***Members***

Emile, A., HSST, GHSS, Vagamon, Idukki.

Dr. Jeeva Latha, S., Govt. Model Boys HSS, Thiruvananthapuram.

Dr. Kumar, S., HSST, Govt. CPMHSS, Peermedu, Idukki.

Leema Metilda, A., HSST, GHSS, Kanjikode, Palakkad.

Dr. Nisha Raffi, Asst. Prof., University College, Thiruvananthapuram.

Vijayan, A., Asst. Prof., Govt. College, Chittur, Palakkad.

***Experts***

Dr. Doctor Nazeemdeen, Prof.,(Rtd.), Kerala University, Thiruvananthapuram.

Dr. Gomathy nayagam, E., Guest Lecturer. University of Madras, Chennai.

Dr. Kanchana, Prof. & Head, (Rtd.), University of Kerala, Thiruvananthapuram.

Dr. Nainar. M., Reader., (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Prof., PILC, Pondicherry.

Dr. Rajaram, S., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.

Dr. Sethupandian Prof., M.K. University Madurai.

Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

***Artists***

SHAHRAJ., Artist, Velanthavalam, Palakkad.

Subin, M.S., Artist, Kollam.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas, D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# உள்ளடக்கம்


## அலகு 1 கலையும் பண்பாடும் 7-29

- தமிழர் பண்பாடும் இலக்கியமும் ........ 8
- இந்திரவிழா ........ 13
- யாரடா வெண்மணி தூணிலே நரசிம்மா... ........ 16
- படையணி ........ 24

## அலகு 2 சுவைகளின் கலவை 30-53

- இலக்கியச் சுவைகள் ........ 31
- மருமக்கள் வழி மான்மியம் ........ 40
- வைகுண்ட வைத்தியர் ........ 42

## அலகு 3 புதுவெள்ளம் 54-71

- நவீனத்துவம் ........ 55
- பெண்ணுலகு ........ 58
- மண்மொழி ........ 63

## அலகு 4 வாழ்வு நலமாக... 72-95

- தமிழிலக்கியம் காட்டும் இயற்கை ........ 73
- புனலும் மணலும் ........ 80
- மூன்றாம் உலகப் போர் ........ 84
- நீலகிரி நிலச்சரிவு யார் காரணம்? ........ 88

## அலகு 5 பட்டறிவுப் பெட்டகம் 95-108

- சிம்லாவில் மூன்று நாள் ........ 96
- வாழ்க்கை வரலாறு ........ 100
- ஒரு கிராமத்து நதி ........ 105

## அகரமுதலி 109


Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## அலகு 1

# கலையும் பண்பாடும்

பண்படுதலே பண்பாடு என அடையாளப்படுத்தப்படுகிறது. இது மரபு சார்ந்தது. பண்பாட்டின் படிநிலை வளர்ச்சியே ஒரு மனிதனை – பிற மனிதன், சமூகம், நாடு, உலகம் என்பனவற்றுடன் தொடர்புபடுத்துகிறது கலைகள் பண்பட்ட சமூகத்தின் வெளியீடுகள். இவை செவ்வியல் கலைகள், நாட்டார் கலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. மன இறுக்கத்தைக் களைந்து மனிதனுக்கு இன்ப உணர்வை அளிக்கும் கலைகள் மொத்தம் அறுபத்து நான்கு எனப்படுகின்றன. இத்தகைய கலைகளை வெளிப்படுத்தும் வாயில்களான விழாக்கள் மக்களால் பல வகைகளில் சிறப்பிக்கப்படுகின்றன. மக்களின் பண்பாடு, கலை, விழாக்கள் என்பனவற்றை வெளிக்காட்டும் காலக்கண்ணாடியாக அவர்தம் இலக்கியங்கள் அமைதல் இயல்பு. இந்நோக்கில் தமிழர் பண்பாடு, அவர்தம் கவின்கலைகள், அவற்றைச் சிறப்பிக்கும் விழாக்கள் என்பனவற்றை இவ்வலகு முதன்மைப்படுத்துகின்றது.

## கற்றல் அடைவுகள்

- இலக்கியத்திற்கும் சமூகத்திற்குமுள்ள தொடர்பினை இலக்கியங்களை வாசிப்பதன் வழியாகவும், கலந்துரையாடல்கள் விவாதங்கள் வாயிலாக வும் அறிந்துகொள்ளுதல்.
- வெளியீட்டு உத்திகளைப் பல்வேறு படைப்புகளின் வாயிலாக அறிந்து, அவற்றைத் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்துதல்.
- ஊடக நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு ஊடகப்படைப்புகள் குறித்து அறிந்து, ஊடகங்கள் வாயிலாகப் படைப்புகளை வெளியிடுதல்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# தமிழர் பண்பாடும் இலக்கியமும்

பண்பாட்டிற்கும் பண்பு என்பதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது போல் பலர்க்கும் தோன்றும். பண்படுதல் என்பது திருந் துதல், செம்மைப்படுதல், தகுதியாதல் என்று பொருள்படும். இவ் வினைச்சொல்தான் பண்பாடு என நீண்டு பெயராக அமைந்தி ருக்கிறது. 'தமிழர் பண்பாடு' என்றால் தமிழ் மக்களுக்கே உரிய திருந்திய மனப்பான்மை என்று பொருள்படவேண்டும். தமிழ் மொழியிலேயும் தமிழ் இலக்கியங்களிலேயும் இத்தனிப்பட்ட திருந்திய மனப்பான்மை தெளிவாகவும் சிறப்பாகவும் விளங்கு வதாகும்.

பண்பாடு குறித்து மாத்யூ ஆர்னால்டு கொண்ட கொள் கையையே நாமும் ஒத்துக்கொள்வோம். இவர் கருத்தில், 'கல்ச்சர்' எனப்படுவது ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன் னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்தின் நலன் களைப் பேணுவதிலும் பேரவாக் கொண் டிருக்கும் பக்குவ நிலையே ஆகும். குண நலம் என்பதில் அறிவுநலம் முதலியவும் அடங்கினவாக இவர் கொண்டனர். எனவே அறிவு, குணம் முதலியவை மேன்மேலும் நிரம்பிச் சமுதாய நலத்தை மேன்மேலும் பேணுகிற மனநிலை கல்ச்சர் எனப்படும். மேன்மேலும் ஏற இடங்கொடுத்துக் கொண்டே செல்வதுதான் இதன் இயற்கை. மேன்மேலும் பயிற்சியினால் திருந்திப் பண் பட்டுக் கொண்டே வரும் மனப்பான்மை தான் 'கல்ச்சர்' என்றும் பண்பாடு என்றும் கூறப்படுவதன் இயல்பு.



பண்பாட்டின் தன்மை எவ்வாறு அறியப்படுகின்றது? 'மக் கள் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும்' என்றுதான் பதில் சொல்லவேண்டும் என்பார் மாத்யூ ஆர்னால்டு. ஆகவே, இவையிரண்டும் சிறந்து காணப் படுகின்ற இலக்கியங்களால் பண்பாடு நமக்குப் புலப்படும் என் பது தெளிவாகின்றது. அதாவது ஓர் ஆசிரியனது பண்பாடு அவன் இயற்றிய இலக்கியத்தால் புலனாகுமென்பதே கருத்து.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஒரு சமுதாய மக்களிடத்தில் அல்லது ஒரு தேசத்து மக்களிடத்தில் உள்ள விசேஷமான பல இயல்புகளையும் உணர்வதற்குக் கருவி யாது? இவர்களுடைய பொதுப் பண்பாடு இலக்கியத்தால் விளங்குமா? ஒருவாறு விளங்கும் என்றே நாம் துணிந்து கூறலாம். 'நிலத்தினுடைய இயல்பை அதிலே முளைத்த முளை காட்டும்; இதுபோல, குலத்தின் இயல்பை அதிலே பிறந்தவருடைய சொல் காட்டும்' என்று திருவள்ளுவர் கூறினார்.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல் (குறள் – 959)

என்பது அவர் திருவாக்கு.

இது பண்பாட்டின் விஷயத்திலும் உண்மையேயாம். ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தேசத்து மக்களின் பொதுமையை நிலத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். நடையுடைபாவனை, மொழி, இசை, சிற்பம் முதலிய கலைகள், அவர்கள் மேற்கொண்டுள்ள லட்சியங்கள், சமயக் கொள்கைகள், பிறமதம் பொறுத்துக்கொள்ளும் இயல்பு, அரசியல் கொள்கைகள், அரசியல் வரலாறுகள், சமுதாய நிலைமை, பெண்களின் நிலைமை, அறிவியல் சிறப்பு, கல்வி நிலையங்கள், நூல் நிலயங்கள், விஞ்ஞான நிலையங்கள் முதலியவை சிறப்பாகக் கூறத்தக்கன. இவற்றுள் 'தமிழ்மொழியும் இலக்கியமும்' எவ்வகையான பண்பாடுகளை உணர்த்துகின்றன என்று நோக்குவோம்.

இலக்கிய வரலாற்றை நாம் நோக்கினால், தமிழர்களது பண்பாடு எப்படி வளர்ச்சியுற்று வந்திருக்கிறது என்பது ஒருவாறு விளங்கும். ஆதியில் அவர்கள் உலகப்பற்று உடையவராய், உலக சுகங்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும், கவிஞர்கள் சிலர் தங்கள் கவித்வ திருஷ்டியால் உயர்ந்த லட்சியங்களைக் கண்டு, அவற்றைத் தமிழ்மக்களுக்கு எடுத்துக்காட்டினர்.

### பண்பெனப்படுவது

மா மலர் முண்டகம் தில்லையோடு ஒருங்கு உடன்
கானல் அணிந்த உயர் மணல் எக்கர்மேல்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்மலி கரகம்போல் பழம்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந்தவை போல,புள் அல்கும் துறைவ! கேள்!
'ஆற்றுதல்' என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
'அன்பு' எனப்படுவது தன்கிளை செறாஅமை;
'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை;
'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்;
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;
ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின், என் தோழி
நல்நுதல் நலன்உண்டு துறத்தல் – கொண்க! –
தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்;

**– கலித்தொகை: 133**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உண்டால் அம்ம இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே; முனிவிலர்;
துஞ்சலு மிலர் பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே (புறம். 182)

## குற்றியலுகரம்

ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின மெய்களின் (க், ச், ட், த், ப், ற்) மேல் 'உ'கரம் ஏறி வரும்போது (கு, சு, டு, து, பு, று) அவ்வுகரமானது முழுமையாக ஒலிக்காமல் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறுகி ஒலிப்பதைக் குற்றியலுகரம் என்பர்.

(எ.டு.) பாக்கு, மூச்சு, வீடு, காது, உப்பு, ஆறு

ஆனால் தனிக்குறிலெழுத்தை அடுத்து வரும் வல்லின 'உ'கரங்கள் இவ்வாறு குறுகி ஒலிப்பதில்லை.

(எ.டு.) பசு, மது, வடு

**குற்றியலுகர வகைகள்**

குற்றியலுகர எழுத்தின் முன்னால் எழுத்தின் அடிப் படையில் குற்றியலுகரத்தை ஆறு வகையாகப் பிரிப்பர். அவையாவன,

1) **நெடில்தொடர்க்குற்றியலுகரம்** : தனி நெடிலெழுத்தைத் தொடர்ந்து வருவது (எ.டு.) ஆறு, காசு

2) **உயிர்த்தொடர்க்குற்றியலுகரம்** : உயிரெழுத்தைத் தொடர்ந்து வருவது. (எ.டு.) வரகு, வயிறு

3. **வன்தொடர்க்குற்றியலுகரம்** : வல்லின எழுத்தைத் தொடர்ந்து வருவது. (எ.டு.) பட்டு, முத்து

4. **மென்தொடர்க்குற்றியலுகரம்** : மெல்லின எழுத்தைத் தொடர்ந்து வருவது. (எ.டு.) சங்கு, பந்து

5. **இடைத்தொடர்க்குற்றியலுகரம்** : இடையின எழுத்தைத் தொடர்ந்து வருவது. (எ.டு.) மார்பு, சால்பு

6. **ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்** : ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வருவது. (எ.டு.) கஃசு, எஃகு

என்ற செய்யுள் இதற்குச் சான்று. வேறுசிலர் ஞானிகட்குரிய சமநிலையைத் தங்கள் அறிவுத் திறத்தால் உணர்ந்து அதன்கண் நின்று தம் ஒழுக்கச்சிறப்பைப் புலப்படுத்தினர்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே; முனிவின்
இன்னா தென்றலு மிலமே; மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ஆகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே;
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே
(புறநானூறு: 192)

என்ற செய்யுளால் இது விளங்கும்.

பின்னர், வடநாட்டிலிருந்து தெற்கில் வந்த வைதிக ஆசாரங்களும் கிரியைகளும், வைதிகத் தெய்வங்களும் தமிழர்களது உள்ளத்தில் இடங்கொண்டன. தமிழ் மக்கள் வைதிகமதச் சார்பினராகி, அதன் கொள்கையிலே ஈடுபட்டு, இம்மைப் பயனைப் பெறுவதோடு அமையாது, மறுமைப் பயனையும் அடைவதில் கருத்துக் கொண்டனர். இதன் பின்னர், சமயப்பற்று முதிர்ந்து



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தமிழ் மக்கள் பக்தி பரவசராய் ஒழுகி வந்தனர். பக்தி - ஒழுக்கத்தோடு அமையாது, அதற்கு இன்றியமையா அடிப்படையாக இருக்க வேண்டும். நல்லொழுக்கத்திலேயும் இவர்கள் மனம் நன்கு ஊன்றி நிலைத்தது. இதன் பின்னர் பக்தர்களுடைய அற்புதக் கதைகளில் விருப்பங் கொண்டு, மக்களது இயற்கைக்கு மேற்பட்ட பல இயல்புகளை மனோபாவனையினால் சித்திரிக்கத் தொடங்கினர். இச் சித்திரங்களும் பெரும்பாலும் சமயச்சார்பு பற்றியனவாகவே அமைந்தன. சமயத் தத்துவங்களையும் இவர்கள் ஆராய்ச்சி செய்தனர். இதனால், பொதுப்பட இவர்களுடைய ஆராய்ச்சியின் வன்மை நன்கு உரம்பெறுவதாயிற்று. இவ்வாராய்ச்சி வன்மை இவர்கள் இயற்றிய உரை நூல்களிலும் புலப்படுகின்றன. சமயம் பற்றிய பல துறைகளிலும் இவர்களது அறிவு சென்று பெருமையெய்தியது. ஆதிசங்கராச்சாரியர், ஸ்ரீ இராமாநுஜாச்சாரியர் முதலியோர் இதற்குச் சான்றாவர். இங்ஙனம் அறிவின் பேரெல்லையை அடைந்த பிற்பாடு இவர்களுடைய சமயப்பற்றுச் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று. இவ்வாறு குறைவதற்குப் புலவர்கள் இயற்றிய புராணங்களும் ஒரு முக்கிய காரணம். இவர்களுடைய கவித்வமும் சிறப்பு இன்றி, மதிப்பிழந்து வருவதாயிற்று. ஐரோப்பியர் வரவினாலும், அச்சு யந்திரப் பிரச்சாரத்தினாலும், ஆங்கிலச் செல்வாக்கினாலும் பூர்வ சரித்திர உணர்ச்சி நமக்கு மிகுந்தது. மேனாட்டு அறிவு சிறிது சிறிதாகப் பரவி ஒரு நூதன சக்தியை நமக்கு அளித்தது. பூர்வ இலக்கியங்களில் நமது கருத்துச் சென்றது. ஒரு புது வாழ்வு நிகழ்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.



## மங்கல வாழ்த்து

இருபெருங் குரவரு மொருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்
அவ்வழி
முரசியம்பின முருடதிர்ந்தன பணிலம் வெண்குடை
அரசெழுந்தார் படியெழுந்தன
வகலுண்மங்கல வணியெழுந்தது
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை
விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டினர் றொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
அங்க ணுலகி னருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினர்

(சிலப்பதிகாரம் - 1 : 1 : 41 - 64)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்நிலையே தேசியவுணர்ச்சி நம்மை ஆட்கொண்டது. பாரதியின் பாடல்கள் இத் தேசியவுணர்ச்சியைப் பொங்கியெழச் செய்தன. நமது நாடும் இலக்கியமும் உண்மையிலேயே மறுமலர்ச்சி அடைந்தன. இந்த மறுமலர்ச்சியில் பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை முதலியோரது கவிகளும், சில விஞ்ஞான நூல்களும் பற்பல வசன நூல்களும் தோன்றி அழகுசெய்கின்றன. நாட்டுப் பற்றும் விஞ்ஞான ஆர்வமும் தமிழர்கள் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக இப்போது அமைந்துள்ளன.

தன்னியல்பு கெடாது, காலகதியோடு ஒத்து இனிது செல்வதுதான் இப் பண்பாட்டின் இயற்கை. இந்த இயற்கைக்கு மாறாக நாம் முயன்றால் அது பயன்படுமா?

இலக்கியத்தின் வழியாகவும், மொழியின் வழியாகவும், தமிழ்மக்களுடைய பண்பாடு பலவகையிலும் திருந்தி மேம்பாடுற்றுச் செழித்து வந்திருப்பது மேற்கூறியவற்றால் விளங்கும்.

**– எஸ். வையாபுரிப்பிள்ளை**

**எஸ். வையாபுரிப்பிள்ளை (1891 – 1956)**



திருநெல்வேலியைச் சார்ந்தவர். சிறந்த ஆராய்ச்சியாளரான இவர் சங்க இலக்கியம் முழுமையும் பதிப்பித்தவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் ‘தமிழ் – லெக்ஸிகன்’ என்ற அகராதித் தொகுப்புகளின் பதிப்பாசிரியராகவும், பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவராகவும் பணியாற்றித் தமிழுலகிற்குப் பெருமை சேர்த்தவர், தமிழ்ச்சுடர்மணிகள், தமிழர் பண்பாடு, தமிழின் மறுமலர்ச்சி, காவியகாலம், இலக்கியச் சிந்தனைகள் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இக்கட்டுரை **தமிழர் பண்பாடு** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ‘தமிழர் நாகரிகம் அன்றும் இன்றும்’ எனும் தலைப்பில் குழுவிவாதம் நடத்திக் குறிப்புத் தயார் செய்க.
- கலித்தொகை குறிப்பிடும் பண்பாட்டுக் கூறுகளைக் கலந்துரையாடித் தொகுத்து எழுதுக.
- புதுமனை புகுவிழா, குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா, திருமணவிழா – இது போன்ற மங்கலவிழாக்களில் காணலாகும் பண்பாட்டுக் கூறுகளைத் தொகுக்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# இந்திர விழா

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
அமரர் தலைவ னாங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின்
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறந் தத்த மியல்பினிற் காட்டும்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
அமயக் கணக்கரு மகலா ராகிக்
கரந்துரு வெய்திய கடவு ளாளரும்
பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்
ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுட்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் றுயரம்
விடுத்த பூதம் விழாக்கோண் மறப்பின்
மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
இடிக்குரன் முழக்கத் திடும்பை செய்திடும்
தொடுத்த பாசத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும்
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டும்
ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி

## தமிழரும் அவர்தம் கவின் கலைகளும்

கலைகளில் சிலவற்றைக் கவின்கலைகள் என வழங்குவது மரபு.

ஆங்கிலத்தில் 'Fine Arts' என்று இவற்றை வழங்குவதால் சிலர் இவற்றை நுண்கலைகள் என எழுதி வந்திருக்கின்றனர். 'Fine' எனப்படும் ஆங்கிலச் சொல் இந்நிலையில் நுட்பத்தைக் குறியாது அழகையும் தூய்மையையுமே முதலில் குறிக்கின்றது. பிரெஞ்சு மொழியில் 'less beaux arts' என்றும், இத்தாலிய மொழியில் 'Parti belle' என்றும் கூறப்பெறும் இப்பொருளைத் தமிழ் மொழியில் கவின் கலைகள் என்று வழங்குவது சாலவும் பொருந்தும். பாட்டிலும் இசையிலும், சிற்பத்திலும் ஓவியத்திலும் கூத்திலும் ஏனைய துறைகளிலும் எளிதில் அழகு தோன்றுதற்குத் துணைக் காரணங்கள் துணையாகின்றன. பகுத்தறியும் இன்பத்துடன் இவற்றின்கண் நுகர்ச்சியின் தூய அனுபவத்திற்கோ எல்லையில்லை. எனவே, இவற்றைச் சிறப்பாகக் கவின் கலைகள் எனப் பெயரிட்டுப் போற்றிப் பயனெய்தி வருகின்றோம்.

**- தனிநாயக அடிகள்**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஏற்றுரி போர்த்த விடியுறு முழக்கிற்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை
முரசுகடிப் பிகூஉ முதுக்குடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வானமும் மாரி பொழிக மன்னவன்
கோணிலை திரியாக் கோலோ னாகுக
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
ஆயிரங் கண்ணோன் றன்னோ டாங்குள
நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற்
பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்
இந்நகர் போல்வதோ ரியல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலிற்
றோரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பும் நடுமின்
பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாம முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியு மன்றமும்
பழமணன் மாற்றுமின் புதுமணற் பரப்புமின்
கதலிகைக் கொடியுங் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமின்
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்

**தனிநாயக அடிகள் (1913 – 1980)**



இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர். உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர். மலேசியாவில் முதன்முதலாக உலகத் தமிழ்மாநாட்டை நடத்தித் தமிழக்குப் பெருமை சேர்த்தவர். தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி, இலக்கியம் உலகமெங்கும் ஆராய்வதற்குத் துணையாகும் வகையில் ஆங்கிலத்தில் “Tamil Culture” (தமிழ்ப்பண்பாடு) என்ற முத்திங்கள் இதழை நடத்தியவர். இப்பகுதி **தமிழ்த் தூது** – கட்டுரைக் கொத்து என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபி னறிந்தோர் செய்யுமின்
தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை யறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்க டம்முட னாயினும்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளும்
தேவரு மக்களு மொத்துடன் றிரிதரும்
நாலேழ் நாளினு நன்கறிந் தீரென
ஒளிறுவாண் மறவருந் தேரு மாவும்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென்.

**– மணிமேகலை – விழாவறைக் காதை**

### உவமையணி

ஒன்றை அதன் தன்மை கொண்ட மற்றொன்றோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும். உவமையில் உவமானம், உவமேயம் என இரு பகுதிகள் அமையும். எது உவமிக்கப்படுகிறதோ அது உவமேயம்; எதனுடன் உவமிக்கப்படுகிறதோ அது உவமானம். உவமேயத்தையும் உவமானத்தையும் இணைக்க அவற்றின் இடையே ஒரு இணைப்புச் சொல் இடம்பெறும். இது உவமை உருபு எனப்படும். போல, அன்ன, ஒப்ப, புரைய, மான போன்றவை சில உவம உருபுகள்.

'பால் போன்ற நிலா' என்பதில்
பால் – உவமானம்; நிலா – உவமேயம்;
போன்ற – உவமை உருபு.
உவமையும் ஓர் இலக்கிய அணியாகும்.

## செயல்பாடுகள்

- இந்திரவிழா போன்று நீவிர் கண்டுகளித்த ஏதேனும் விழா குறித்து விளக்கக் குறிப்பு எழுதுக.
- இந்திரவிழாவின் போது காவிரிப்பூம்பட்டினம் அலங்கரிக்கப்பட்டிருந்த விதத்தை அடிப்படையாகக் கொண்டு வருணனைக் குறிப்பு எழுதுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# யாரடா வெண்மணி தூணிலே நரசிம்மா...

முந்தி முதலாக...

தமிழ் நிகழ்த்துகலைகளின் மாபெரும் அடையாளம் தெருக்கூத்து. ஆனால் இக்கலை இன்று அழிவின் விளிம்பில் உள்ளது. தெருக்கூத்துக்கலை வளர்ச்சியை நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறது. மூன்று ஜமாத்துகள் உள்ள இடங்களில் இன்று ஐம்பதிற்கும் மேற்பட்ட ஜமாத்துகள் உள்ளன. "தெருக்கூத்து" என்ற சொல் கொச்சையாக உள்ளது. இதனைக் "கட்டைக்கூத்து" என்றே அழைக்கலாம். தெருக்கூத்து வாத்தியார்கள் ஏக்கர் கணக்கில் விவசாய நிலங்களை வைத்துள்ளார்கள். நடிகர்களாக உள்ள நாங்கள் தான் நலிந்திருக்கிறோம். நலிந்தோருக்கான பென்ஷன்கூட எங்களுக்குக் கிடைப்பதில்லை.



புரிசை சம்பந்த தம்பிரான்

...இனி மறைந்த தெருக்கூத்துக் கலைஞர் புரிசை கண்ணப்பத் தம்பிரானின் மகன் சம்பந்தனின் வார்த்தைகள். . .

***எத்தனை தலைமுறையாகத் தெருக்கூத்தை நிகழ்த்துகிறீர்கள்?***

ஆரம்பத்தில் தாத்தா வீராசாமி தம்பிரான், இராகவ தம்பிரான், நடேசத்தம்பிரான் அடுத்து அப்பா கண்ணப்பத் தம்பிரான். இப்பொழுது நான் (சம்பந்தத் தம்பிரான்) என்று ஐந்து தலைமுறைகளாகத் தொடர்ந்து தெருக்கூத்தை நடத்திக் கொண்டு வருகிறோம். குடும்பத்தைப் பொறுத்த வரையில் எனக்கடுத்து வேறு யாருமே கிடையாது. காரணம் எனக்குப் பெண் பிள்ளைகள் தான். ஆண் பிள்ளை கிடையாது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் "தெருக்கூத்து என்பது ஆண்களால் மட்டுமே நிகழ்த்தப்படுவதாகும்". தெருக்கூத்தில் பெண்கள் நடிப்பதில்லை என்பது அறிந்த செய்தி. ஆண்களே பெண் வேடங்களை ஏற்று நடிப்பார்கள்.



***தெருக்கூத்தை முழுநேரத் தொழிலாகக் கொள்வதற்கு முன் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள்?***

தாத்தா வீராசாமி தம்பிரான் தெருக்கூத்திற்கு முன் விவசாயத்தில் இருந்திருக்கிறார். அப்புறம் பாவைக்கூத்து



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நடத்தியுள்ளார். அதற்குப் பின்தான் தெருக்கூத்திற்கு வந்திருக்கிறார். வீராசாமி தாத்தாவுக்குப் பின்னால் வந்தவர்கள் தெருக்கூத்தை மட்டுமே எடுத்துக்கொண்டார்கள்.

***நீங்கள் நிகழ்த்தும் தெருக்கூத்தின் வடிவம் உங்கள் முன்னோர் நிகழ்த்திய வடிவம் போலவே இருக்கிறதா அல்லது மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதா?***

வடிவமெல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறது. இதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் உடை அலங்காரங்களில் கொஞ்சம் வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்போ கலர் துணியில பாவாடன்னு ஒன்று போடுறோம். முன்னர் சாயம் தோய்த்து போடுவாங்க. இதான் வித்தியாசம். அதே போல மார்புப் பதக்கத்தை இப்போ துணியாலயே தெச்சிக்கிறோம். ஆனா, முன்னயெல்லாம் மரத்தாலான கட்டையிலதான் மார்புப் பதக்கம் இருக்கும். அதேபோல் புஜம், முடி இதெல்லாம் துணியில் மணிகளை வைத்துத் தெச்சி ஆணியில் அடித்திருப்பார்கள். அடுத்து ஒரு கால கட்டத்தில் கண்ணாடியாக இருந்தது. அப்புறம் ஜிகினா போடப்பட்டிருந்தது. ஆனால், இப்போதும் நாங்கள் கண்ணாடியிலேயேதான் போட்டிருக்கிறோம். இம்மாதிரியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

***தெருக்கூத்திற்கு உங்களின் பங்களிப்பாக - சேர்க்கையாக எதைச் சொல்லலாம்?***

நாங்கள் புதுசாக எதையும் சேர்க்கவில்லை. உடை அலங்காரம் மட்டும்தான். அப்புறம் கதையை வேண்டுமானால் மாற்றியிருப்போம். அதாவது எங்கள் பரம்பரையில் மகாபாரதக் கூத்தை மட்டும்தான் நடத்திக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இராமாயணக் கூத்தையும் நடத்தியிருக்கிறோம். அடுத்து தெனாலிராமன் கதையையும் கூத்தாக நிகழ்த்தியிருக்கிறோம். அப்புறம் ஜெர்மன் நாட்டினுடைய சார்க்சர்கில், கொலம்பியாவுடைய சிறுகதை. காஃபிலிபார்க்சை; பெரிய இறகுடைய வயோதிக மனிதன் என்று தமிழில் செய்தோம். அதில் பாட்டெல்லாம் அப்பாவுடையது. இயக்கம் மட்டும் நான் பண்ணினேன்.

## ஒயிலாட்டம்

ஒயிலாட்டம் என்பது ஆண்கள் குழுவாக இணைந்து ஆடும் ஆட்டமாகும். குழுவினர் எல்லாரும் ஒரே நிறத்தில் தலைக்கட்டும் கைக்குட்டையும் கொண்டு விளங்குவதாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது.

இக்கலை ஆண்மைத் தன்மை வெளிப்படும் அடவுகளைக் கொண்ட ஆட்டமாக உள்ளது என்று தொழில்முறையாக இக்கலையை நிகழ்த்துவோர் கூறுகின்றனர். ஒயில் என்ற சொல் அலங்காரம், ஒய்யாரம், அழகு, சாயல் எனப் பொருள் தருகிறது. எனவே ஒயிலாட்டம் என்பதன் பொருள் அழகுள்ள ஆட்டம் என்பதாகும்.

இக்கலை கோவில் திருவிழாவின் போதும் பொது நிகழ்ச்சிகளிலும் நிகழ்த்தப்படுகிறது.

இக்கலை தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உடையார்பட்டி, ஆலங்குளம் வட்டத்தில் இரதமுடையார் குளம், புளியம்பட்டி, நெல்லை சந்திப்பு போன்ற பகுதிகளிலும் மதுரைக்கு வடகிழக்கே அழகர்கோயிலின் அருகே வலையப்பட்டி கிராமத்திலும், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் நிகழ்த்தப்படுகிறது. இலங்கையிலும் இக்கலை நடைபெறுகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



ஆட்டக்காரர்கள் ஐந்தைந்து பேராக இரு வரிசையில் நின்று மொத்தம் பத்து பேர் அல்லது பன்னிரண்டு முதல் இருபது பேர் என இக்கலையை நிகழ்த்துகின்றனர். இக்கலையில் பெண்கள் பங்கேற்பதில்லை. பார்வையாளர்களாகவே உள்ளனர். வாய்ப்பகுதி தோலால் கட்டப்பட்ட குடம் (பானைத்தாளம்), தவில், சிங்கி, டோலக் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. கலைஞர்கள் காலில் கட்டிய கச்சம் எனப்படும் சலங்கையும் இசையைத் தருகிறது. ஒயிலாட்டப் பாடல்களைப் பாடுபவர்களுக்கு ஆடத் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. முன்பு ஒயிலாட்டத்தில் 'தப்பு' என்ற இசைக்கருவியும் பயன்படுத்தப்பட்டது. இப்போது அதற்குப் பதிலாக பானைத்தாளம் இசைக்கப்படுகிறது. இத்தாள ஒலிகளுக்குக் கட்டுப்பாட்டை வழங்குவது சிங்கியாகும்.

**தங்களின் தெருக்கூத்து பாணி குறித்து?**

கூத்தில் வடக்கத்திப் பாணி, தெற்கத்திப் பாணி என்று இரண்டு உள்ளது. எங்களுடையது வடக்கத்திப் பாணி. வடக்கத்திப் பாணியாக இருந்தாலும் எங்களுடைய குழு மட்டும் தனியாகவே தெரியும். காரணம் அந்தக் காலத்திலிருந்தே எங்கள் குழுவிற்கென்றே ஒரு தனியான நிலையினை கதாசிரியர்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிச் சொல்லலாம்: மற்றக் கலைஞர்கள் எங்கள் குழுவில் சேர்ந்தால் அவர்களால் எங்கள் அளவுக்கு ஈடுகொடுக்க முடியாது. அதாவது, பாட்டுப் பாடுவது முதல் அடவுகள்போட்டு ஆடுதல் வரைக்கும் வித்தியாசமாக இருக்கும். அதான் வடக்கத்திப் பாணியிலேயே எங்களுடையது சற்று வித்தியாசமாக இருக்கும் என்றேன்.

**நவீன நாடகத்தினால் கூத்தில் ஏற்பட்ட மாற்றம் அல்லது கூத்திற்கான பயன் என்ன?**

அதாவது, அப்பா சொல்லிக் கொடுத்த பயிற்சி முறைக்கும் இப்பொழுது நான் சொல்லிக்கொடுக்கும் பயிற்சி முறைக்கும் வேறுபாடு இருக்கிறது. இப்பொழுது எப்படி சுலபமாகக் கற்றுத் தரலாம்...? என்பதே நவீன நாடகத்தின் மூலம் எனக்கு ஏற்பட்ட தாக்கம் என்றும் சொல்லலாம். அதாவது முன்பு கிறிக்கி அடிக்கணும்னா என்ன பண்ணுவாங்க. எங்கக் குழுவுல வேதாசலம்னு ஒரு வாத்தியாரு இருந்தாரு. அவரு எனக்கு குரு மாதிரி. அவரு வேகவேகமா கிறிக்கி அடிச்சி அடிச்சி சொல்லிக் கொடுப்பாரு. ஆனா, நான் இப்ப சொல்லிக் கொடுக்கும் போது, எப்படிக் கால வெக்கணும் எப்படி வெச்சா வேகமா கிறிக்கி அடிக்கலாம்னு சொல்லித்தர்றேன். இது நவீன நாடகத்தோட தாக்கம்தான். அதே போல நவீன நாடகத்தோட எல்லாத் தாக்கமும் இருக்கு என்று சொல்ல முடியாது.

**தெருக்கூத்தைக் கட்டைக்கூத்து என்கிறார்களே?**

இல்லை; கட்டைக்கூத்து இல்லை. தெருக்கூத்து தான். சிலர் கட்டைக்கூத்து என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படிச் சொல்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

 லுபவர்களின் அப்பா, தாத்தா எல்லோரும் தெருக் கூத்து என்றுதான் சொல்லியிருப்பார்கள். ஆதிகாலத் திலிருந்தே எங்க அப்பா, அவருடைய அப்பா அவருடைய அப்பா. அதாவது, பாட்டன் முப்பாட் டன் காலத்திலிருந்தே இதற்குத் தெருக்கூத்து என்ப துதான் பெயர். இன்றைக்குத் தெருக்கூத்தை நாடகம், டிராமா, கட்டைக்கூத்து என்று சொன்னாலும் ஆதி முதலிருந்தே இதற்குத் தெருக்கூத்து என்பதுதான் பெயராக உள்ளது.



**உங்கள் குழுவிற்கான கூத்துப் பிரதியை யார் உருவாக்குவது?**

நாங்கள் பரம்பரை பரம்பரையாக மகாபாரதக் கூத்தை நடத் திக்கொண்டு வருகிறோம். இங்கே செங்காட்டில் திருவேங்கட ரமணன் என்று ஒரு கதாசிரியர் இருந்தார். அவரிடம் நானும் அப்பாவும் சென்று மெட்டுக்களைச் சொல்லுவோம். அதாவது, இராமாயணம் என்று வைத்துக்கொண்டால், இந்திரஜித் கதை எப்படி ஆரம்பிக்க வேண்டும். எப்படி முடிக்க வேண்டும் என் பதை நாங்களே சொல்லிவிடுவோம். அவரும் நாங்கள் சொன் னதை வைத்துக்கொண்டு பாடல்களை எழுதிக்கொடுப்பார். இப் படித்தான் நாங்கள் பிரதிகளைக் கொண்டு வருவோம். 1985இல் இராமாயணக் கதையை எழுதினோம். அடுத்து பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை எழுதினோம். அதேபோல் ஜனார்த்தனன் என்று ஒரு கதாசிரியர் இரண்டு கதைகளை எழுதிக் கொடுத் தார். இப்படியாகக் கதாசிரியர்கள் பாடல்களை எழுதித்தருவார் கள். மெட்டெல்லாம் நாங்களே சொல்லுவோம். இப்பொழுது அந்தப் பாடல்களின் முழு உரிமையையும் நாங்களே வாங்கி விட்டோம். விரைவில் நூலாகக் கொண்டு வரப்போகிறோம்.

**கூத்தில் பயன்படுத்தப்படும் ஆடை ஆபரணங்களும் பெயரும் முக ஒப்பனைக்கான வண்ணங்களும் என் னென்ன?**

கிரீடம், புஜம், பட்டம், முத்துச்சரம், காதுக்கட்டை, கன்னப் பூ, மீசை, வாக்குமாலை, தர்பார், மார்புப்பதக்கம், கைக்கட்டு, பாவாடை, சர்ட், பேண்ட், கால் பட்டை இவை யாவும் ஆடை ஆபரணங்கள். முக ஒப்பனையின் வண்ணங் கள் என்று பார்க்கும்பொழுது முத்து வெள்ளை, சிகப்பு, மஞ் சள், பச்சை, நீலம், செந்தூரம்; அடுத்து மை. அவ்வளவுதான்.

## வினைமுற்று

ஒரு வினை அல்லது செயலை உணர்த்துவது வினைச்சொல்லாகும். வினைச்சொற்கள் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூன்று நிலைகளில் அமையும்.

**வினைமுற்று** : ஒரு வினை அல்லது செயல் முடிவு பெற்று வருவதைக் குறிக்கும் சொல் வினைமுற்று எனப்படும்.

(எ.டு) பாடினாள், ஓடினான், எழுதினார், வந்தேன், ஆடினோம், கற்றார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

***நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு வண்ணத்திற்கும் தனித் தனி அர்த்தம் உண்டா?***

ஆமாம் உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் உண்டு. அர்ச்சுனன் என்றால் பச்சை; கண்ணனுக்கு நீலம்; பீமனுக்குக் கருப்பு அல்லது கரும்பச்சை. மஞ்சளும் சிகப்பும் கலந்த வெந்தய வண்ணம் கர்ணனுக்கு. இப்படியாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வண்ணம் இருக்கிறது. இதே போல் அர்ச்சுனன் தபசு என்றால் உடல் முழுதும் விபூதி போட்டுக் கொண்டு வெள்ளையாக இருக்க வேண்டும்.

## வில்லுப்பாட்டு

போர்க் கருவிகளுள் ஒன்றான வில் போன்ற இசைக்கருவியால் நிகழ்த்தப்படும் கலை வில்லுப்பாட்டு. வில்லை இசைத்துக் கொண்டு நாட்டார் தெய்வக் கதைகளை வில்லுப்பாட்டுக் கலைஞர் இசையுடன் பாடி விளக்கம் தருவார். துணைக் கலைஞர்களும் தங்கள் இசைக்கருவிகளை மீட்டித் தலைமைக் கலைஞரின் பாட்டுக்குப் பின்பாட்டுப் பாடுவர்.

வில்லிசையின் தோற்றம் குறித்து ஆராய்ந்தவர்கள் கொல்லும் ஆயுதமான வில்லே இசைக்கருவியாகிய வில்லாக மாறியது என்றும், போர்க்களத்தில் வீரர்கள் களைப்பைத் தீர்க்க வில்லின் நாணைத் தட்டி மகிழ்ந்த நிலையே வில்லிசைக் கருவியானது என்றும் கூறுகின்றனர்.



***தெருக்கூத்தில் 'பெண்வேட' ஒப்பனை குறித்து.***

ஆரம்பத்தில் எப்படி இருந்ததோ அப்படித்தான் இன்றைக்கும் பெண் வேடம் ஒப்பனை இருக்கிறது. ஆரம்பத்தில் தலையில் கிரீடம் அணிந்திருந்தார்கள். தற்பொழுதோ எல்லாப் பெண்களைப் போல சாதாரணமாகவே உள்ளார்கள்.

***கூத்தில் கட்டியக்காரனின் பண்பு குறித்து.***

முன்பெல்லாம் கட்டியக்காரன் இதுவரைக்கும் (இடுப்புக்குக் கீழ்) மடிகட்டிக் கொண்டு வேட்டியைத் தார்ப்பாய்ச்சி கட்டிக்கொண்டு இருப்பான். இப்பொழுதோ பேண்ட் சர்ட் போட்டுக் கொண்டு இருக்கிறான். அவனுடைய பாத்திரம் என்பது ஒவ்வொரு நடிகனையும் அறிமுகப்படுத்துவதாகும். அடுத்து என்ன கூத்து, கூத்து நடக்கும் இடம், கூத்தை நடத்துகிற பெரியவர்கள் யார் யார் என்று சொல்லி அவர்களையெல்லாம் அறிமுகப்படுத்தி, நகைச்சுவையாக உரையாடுவது கட்டியக்காரனின் பண்பாகும்.

***தெருக்கூத்தில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் குறித்து.***

ஆரம்பத்தில் தோல் கருவிகள் இருந்ததென்று அப்பா சொல்லுவார். அதாவது சுருதி – கைப்பெட்டி இப்பொழுது ஆர்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மோனியம் (காலில் மிதிக்கிற பெடல்), மிருதங்கம், டோலக்கு, முகவீணை, தாளம் போன்றன. இதே முகவீணை திண்டிவனம் பக்கம் போனால் இருக்காது. ஏனென்றால் அங்கே தெற்கத்திப் பாணி. தெற்கத்திப் பாணியில் முகவீணையைப் பயன்படுத்த மாட்டார்கள். இதுதான் இரண்டு பாணிகளுக்கும் உள்ள வேறுபாடு. அதேபோல் நாம் மேடைக்குப் பின்னாலேயே மேக்கப் ரூமை வைத்திருப்போம். ஆனால், அவர்களோ (தெற்கத்திகாரர்கள்) கொஞ்சம் தூரமான இடத்தில் மேக்கப் ரூமை வைத்திருப்பார்கள்.

***கூத்தில் ஒவ்வொரு நேரத்திற்கும் ஒவ்வொரு ராகம் வரவேண்டும் என்கிற வரையறை ஏதும் உள்ளதா?***

இப்பொழுது, இரணிய பிரகலாதன் என்கிற கதையை எடுத்துக்கொண்டால், அதில் எந்த நேரத்தில் எந்த இராகம் வரவேண்டுமோ அந்த இராகத்தில்தான் கதாசிரியர் எழுதியிருப்பார். இப்பொழுது பூபாளம் என்றால் அது விடியக்காலைக்கும் வரும் சண்டைக்கும் வரும். ரொம்பவும் சாந்தமான சூழலிலும் வரும். அதாவது பிரகலாதனைப் பார்த்து

“யாரடா . . . உலகங்கள் அறிந்தவன் படைத்தவன்! நேராக நிறுத்துவாய் மைந்தா . . . ஆ . . . ஆ . . . இது கோபத்தோடு பாடுகிற பூபாளம். இதே போல்

யாரடா வெண்மணி தூணிலே நரசிம்மா . . . ” என்பதும் பூபாளம் தான். இப்படியும் எந்தெந்த நேரத்திற்கு எப்படி எப்படி வர வேண்டும் என்றும் ஆசிரியர் எழுதியிருப்பார்.

***நீங்கள் தெருக்கூத்து நிகழ்த்தும் சூழல்கள்?***

கோவில் விசேஷங்களுக்கும் இறந்தவர்களின் காரிய சடங்கிற்கும் நடத்துகிறோம். இப்பொழுது கல்லூரி விழாக்களிலும் அடுத்து வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சிகளின்போதும் நடத்துகிறோம். ஆனால், தெருக்கூத்தில் கிடைக்கும் வருமானம் ஓரளவிற்குத்தான் போதுமானதாக உள்ளது.

இக்கருத்துகளுக்கு அரண் சேர்க்கும் வலுவான பிற சான்றுகளை இவ்வறிஞர்கள் தரவில்லை. ‘வில்’ என்ற போர்க்கருவியும், இந்த இசைக்கருவியும் அமைப்பில் ஒன்றாக இருப்பதாலும், இரண்டும் ஒரே பெயரைப் பெற்றிருப்பதாலும் இம்முடிவுகளுக்கு வருகின்றனர் என்றே கருத முடிகிறது.

வில்லிசையை உருவாக்கியவர் 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசப் புலவர் என்று சோமலெயும், அருதக்குட்டிப் புலவரே என்று மு. அருணாசலமும் கூறுகின்றனர். இதற்கு வலுவான ஆதாரக் கருத்துகள் ஏதும் இல்லை.

முக்கூடல் பள்ளு, தெய்வச்சிலையார் விறலிவிடு தூது போன்ற இலக்கிய நூல்கள் வில்லிசைக்கலை நாட்டார் தெய்வக் கோவில்களில் நிகழ்த்தப் பட்டதைக் குறிப்பிடுகின்றன. இந்நூல்களின் காலத்தைக் கொண்டு இதனைக் கி.பி. 1550–ஆம் ஆண்டுக்கு முற்பட்டது எனலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**கூத்தில் திரைபிடித்தலின் தேவை என்ன?**

ஒவ்வொரு வேடமும் வரும்போது திரை பிடிக்கப்படுகிறது. அந்தத் திரைக்குள் நடிகன் தனக்கு விருப்பப்பட்ட தேவதை யையோ அல்லது சாமியையோ நினைத்து சத்த மாகப் பாடல்பாடித் தன்னைத் தானே தயார்படுத் திக்கொள்கிறான். இப்பொழுது நாம் ‘வார்ம்அப்’ (warmup) செய்கிறோம் இல்லையா? அப்படித்தான் அது. சில கம்பெனிகளில் சிறிய துண்டு அல்லது டவலை வைத்துக்கூட திரைபோல் இரண்டு பேர் பிடிப்பது வழக்கம்.

**தெருக்கூத்தில் நடிகருக்கும் பார்வையாளருக் கும் உள்ள உறவு?**

எங்களுக்கும் பார்வையாளருக்கும் நெருக்க மான உறவுதான். நாங்கள் பார்வையாளர்களின் நடு வில் போவதும் அவர்கள் கூத்திற்குள் வருவதும் இயல்பே. அதேபோல் பார்வையாளர்கள் யாராவது தொடர்ந்து பேசினால் நாங்கள் கூத்தை நிறுத்தி விட்டுப் பார்ப்போம். அவர்கள் பேச்சை நிறுத்தி னால் மட்டுமே மீண்டும் தொடர்வோம். சில நேரங் களில் நாங்கள் ஏதாவது பாட்டை விட்டுவிட்டால் அவர்கள் நடுவில் வந்து, "யாம்பா சம்பந்தம், ஏம்பா அந்தப் பாட்ட வுட்டுட்ட. நீ நாலு வரியாச்சும் பாடி யிருக்கணும்பா" என்று உரிமையாகச் சொல்லுவார் கள்.

**தெருக்கூத்தின் இன்றைய நிலை?**

தெருக்கூத்து நன்றாக வளர்ந்து பின்னாளில் தேய்ந்து இன்றைக்கு மீண்டும் வளர்ச்சியை நோக் கித்தான் போய்கொண்டிருக்கிறது. அதே போல் நடி கனும். அதாவது, எங்கள் தாத்தா காலத்தில் இந்தச் செய்யாறு பகுதியில் வெறுமனே மூன்றே கம்பெ னிகள்தான் இருந்தன. ஆனால் இன்றோ, ஐம்பதிற் கும் மேற்பட்ட கம்பெனிகள் உருவாகியிருப்பது வளர்ச்சிதானே. இப்பொழுது ஒரு நாடகப் பள்ளியை ஆரம்பிப்பதற்காக எங் கள் மன்றத்தின் மூலமாக ஓர் இடத்தினை வாங்கியிருக்கிறோம். இதுவரை கோயில்களிலும் வீடுகளிலுமே பயிற்சியை மேற்

திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் தென் பகுதியிலும் காணப்படும் நாட்டார் தெய்வக் கோவில்களில் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. இக்கலை தமிழகத்தின் பிற பகுதிகளில் கோவில் சாராத மேடைகளில் எப்போதாவது நிகழ்வதுண்டு. மேலும் கேரளத்தில் திருவனந்தபுரம், கழக்கூட்டம், நெடுமங்காடு, கொல்லம் ஆகிய இடங்களில் உள்ள நாட்டார் தெய்வக் கோவில்களிலும் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. ‘வில்லுப்பாட்டு’, ‘வில்லு’, ‘வில்லடி’, ‘வில்லடிச்சான் பாட்டு’, ‘விற்பாட்டு’ எனப் பல பெயர்களால் மக்கள் இக்கலையை அழைக்கின்றனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கொண்ட நாங்கள் இனி இந்த இடத்தில்தான் பயிற்சியை மேற்கொள்வோம். இந்த இடம் எல்லா வகையான கலைப் பயிற்சிகளுக்கும் இடமளிக்கும் தளமாக விளங்கும். தற்போது போதிய பொருளாதார வசதி இல்லாமையால் வேகமாக நடந்த கட்டடப் பணிகள் பாதியிலேயே நிற்கின்றன.

**– சி. முத்துகந்தன்**



**சி. முத்துகந்தன்**

சென்னையில் 1981–ல் பிறந்தவர். பட்டதாரியான இவர் கவிதை, சிறுகதை, கட்டுரைத் தொகுப்புகள் என பல நூற்களை ஆக்கியுள்ளார். 'செந்தலைக் குருவி' காலாண்டிதழின் ஆசிரியர். '**கிறிக்கி**' நூலிலிருந்து இப்பாடப்பகுதி இடம்பெறுகிறது.

## செயல்பாடுகள்

- தெருக்கூத்துக் கலைஞருடனான நேர்காணல் மூலமாக நீங்கள் அறிந்த தெருக்கூத்தின் முக்கியக் கூறுகளைத் தொகுக்க.
- தொகுத்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பத்திரிகைக்கு ஒரு தலையங்கம் எழுதுக.
- நீங்கள் அறிந்த ஏதேனும் ஒரு நிகழ்த்துக் கலைஞருடன் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# படையணி

கேரளத்துக் கோவில்களில் உற்சவ காலங்களில் நடன வழிபாடாக நடத்தப்படும் ஒரு கிராமியக் கலைவடிவம் படையணி. இது கேரளத்திலுள்ள பலரும் அதிகம் பார்த்திராத – மிகவும் ஆவலுடன் பார்க்க விரும்பும் கலை வடிவமாகும்.



வெகு அபூர்வமான இந்தக் கலை வடிவம், கேரளத்தில் உள்ள பத்தனந்திட்டை, ஆலப்புழை போன்ற இடங்களில் அதிகமாகவும்; கொல்லம், கோட்டயம் போன்ற மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் திருவிழாக் காலங்களில் நடத்தப் படுகிறது. படையணி நிகழ்ச்சி நடத்தப்படுவதை அறிந்து கேரளத்தின் இதர பாகங்களில் இருந்து இதைப் பார்ப்பதற்கென்றே பலரும் வருகிறார் கள்.

இந்தக் கிராமிய நடன வழிபாடு கேரளத் திலுள்ள பகவதி கோவில்களில் நிகழ்த்தப்படு கிறது. சில கோவில்களில் ஏழு நாட்களும், சில கோவில்களில் பதினாறு நாட்களும், இன்னும் சில கோவில்களில் இருபத்தி எட்டு நாட்களும் இந்த நடன வழிபாடு நடக்கிறது.

படையணி என்றால் அணிவகுத்துச் செல்லும் படை என்று அர்த்தம். ஆனால் இந்தப் படையணி நடன வழிபாட்டில் கோலம் என்று மலையாளத்தில் கூறப்படும் ஒரு உருவத்தைத் தன் தலையில் பெரிய, உயரமான கிரீடம் போன்று அணிந்துகொண்டு, பல ஆட்கள் அணிவகுத்துப் போவதையே பார்க்கிறோம்.

இந்தக் 'கோலம்' என்பது, வழிபடும் தெய்வத் தின் உருவத்தை கமுகு(பாக்கு) மரத்தின் பாளை களைக் கொண்டு செய்து, அதன்மேல் பல வண் ணங்களைத் தீட்டி உருவாக்குவதாகும். கேரளத்தில் தென்னை மரங்களைப் போலவே கமுகு மரங் களும் அதிகம். அதிலும் படையணி நடத்தப் படும் இடங்களில் மிக அதிகமாகக் காணப்

## அறிவியலும் கலையும்

ஒரு மரத்தைப் பார்த்து இது நாற்பது அடி உயரம் உள்ளது என்பது அறிவியல்; இது வானளாவி உயர்ந்தது என்பது கலை. ஒரு கூட்டத்தைப் பார்த்து, இது ஏறக்குறைய நாற்பதாயிரம் மக்களைக் கொண்டது என்பது அறிவியல்; எள்விழ இடம் இல்லாமல் கூடிய கூட்டம் என்பது கலை.

உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை. அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு வளர்வது அறிவியல். உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வது கலை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

படும் இந்தக் கமுகு மரத்திலிருந்து எடுக்கப்பட்ட பாளைகளால் அற்புதமான கலை வடிவங்களைத் தயாரிக்கிறார்கள். இந்தக் கோலங்களைக் கமுகு மரத்தின் பாளைகளையும் தென்னை மரத்தின் குருத்தோலைகளையும் கொண்டு தயாரிக்கிறார்கள். உபயோகப்படுத்தப்பட்ட பாளைகளின் எண்ணிக் கையைப் பொறுத்தே கோலத்தின் அளவைக் குறிக்கிறார்கள். உதாரணமாக 101 கோலம் என்றால், இதில் 101 பாளைகள் உபயோகப்படுத்தப்பட்டிருக் கின்றன என்று அர்த்தம். இவை அதிகபட்சமாக சுமார் 25 அடி உயரம் வரை செய்யப்படுகின்றன. மலையின் அமைப்பைக் குறிக்கும்படி முக்கோண வடிவத்தில் இவை செய்யப்படுகின்றன.

பத்தனந்திட்டை மலைகள் நிறைந்த பிரதேசம் (சபரிமலைக்குச் செல்பவர்கள் பலரும் பத்தனந் திட்டை வழியாகச் செல்கிறார்கள்). ஆலப்புழையில் கால்வாய்களும் ஆறுகளும் பல உண்டு.

இந்த இரண்டு இடங்களிலும் காணப்படும் இயற்கையின் வடிவங்களை - அழகை இந்தப் படையணி வழிபாட்டில் காணலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். மலையின் உச்சியிலும் வானத் திலும் தேவர்களும், தெய்வங்களும் உறைவதாக நம்பப்படுகிறது. பூமியில் வசிப்பவர்கள் மனிதர்கள்.

உயரமான கோலங்கள் அணிந்து படையணி நடனம் ஆடுபவர் பூமியிலிருந்து வானத்தைத் தொட முயற்சி செய்கிறார் என்றும் வானத்திலும் மலையின் உச்சிகளிலும் உறையும் தெய்வங்களின் அருகில் சென்று அனுக்கிரகம் பெற்று வருகிறார் என்றும் நம்பப்படுகிறது.

தங்களை வாழவைப்பதும் பாதுகாப்பதும் இந்த இயற்கை சக்திகளே என்றும்; அவற்றிற்கு நன்றி தெரிவிக்கவே இந்தப் படையணி நடன வழிபாடு என்றும் கூறுகிறார்கள். பெரும்பாலும் அறுவடை முடிந்ததும் பல கோவில்களில் இந்த வழிபாடு நடக்கிறது.

அறிவியலில் ஓர் உண்மையை விளக்க அதற்கு வடிவம் உண்டு. உண்மை விளங்கிய பிறகு அந்த வடிவம் தேவையற்றுப் போகின்றது. கலையிலோ, உணர்த்தப்படும் அனுபவமும் அதற்கு அமைந்த வடிவமும் பிரிக்க முடியாதவை.

ஒருமுறை ஆராய்ந்து அறிந்த பிறகு, மீண்டும் அதையே அறிவதில் ஆர்வம் இல்லாமல் செய்வது அறிவியல். ஒருமுறை உணர்ந்ததையே திரும்பத் திரும்ப உணர்ந்து இன்புறுமாறு தூண்டுவது கலை.

அறிவியல் பொருள்களை அவற்றின் தன்மைக்கு ஏற்பக் காணச் செய்கிறது. கலையோ அப் பொருள்கள் நம் உள்ளத்தே எழுப்பும் அழகுணர்ச்சியைக் கொண்டு காணச் செய்கிறது.

இலக்கியத்திறன்

**மு. வரதராசனார் (1912–1974)**



வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் பிறந்தவர். புதினங்கள் பல படைத்து புதின இலக்கியப் பெருவேந்தராகத் திகழ்ந்த தமிழ்ப் பேராசிரியர். இவரது அகல்விளக்கு என்ற நூல் சாகித்திய அகாடமி பரிசு பெற்றமை சிறப்பாகும். இவரது ஓவச் செய்தி என்ற நூல் இலக்கியத் திறனாய்வு நூலாகப் போற்றப்படுகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

படையணியைப் பற்றிய தெய்வ நம்பிக்கை ஒருபுறம் இருக்க, கோலம் (உருவம்) அணிந்து படையணி நடனம் ஆடுபவர் நிகழ்த்தும் நடன அசைவுகள், கிராமங்களில் அறுவடை முடிந்து, தலையில் கட்டுக்கட்டாக அறுவடை செய்த நெற்கதிர்களைச் சுமந்துகொண்டு மெல்ல மெல்ல அங்கும் இங்கும் சாய்ந்து சாய்ந்து நடப்பதை நினைவுபடுத்துவது போலவும், இன்னும் சில நடன அசைவுகள் ஆலப்புழைக் காயல்களில் ஒரு கழையில் கட்டப்பட்டுக் காணப்படும் படகு ஒன்று காற்றில் அங்கும் இங்கும் அசைவதைப் போலவும் தோன்றும் என்றும் கலாரசிகர்கள் தெரிவிக்கிறார்கள். படையணி நடனத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஆராய்ச்சியாளர்களும் இந்தக் கருத்தை உறுதிப்படுத் துகிறார்கள்.

சிலருக்கு இந்தக் கோலங்களின் வடிவம் ‘தெய்யம்’ போன்று தோன்றினாலும் தெய்யமும் இந்தக் கோலங்களும் வித்தியாசமானவை. தெய்ய வடிவங்களைப் பார்த்தால் மனதில் பய உணர்வு உண்டாகும். இந்தக் கோல வடிவங்களைப் பார்த்தால் நமது முகத்தில் ஒரு புன்சிரிப்புத் தோன்றும். இந்தக் கோலங்களில் யக்ஷி, பக்ஷி, காலன், பைரவி, மருதா, ஆனமருதா, அந்தராயக்ஷி, சுந்தரயக்ஷி போன்று பல உருவங்கள் உண்டு.

மேலே குறிப்பிடப்பட்ட பல கோலங்களிலும் ஏராளமான முகங்கள் சித்திரமாக வரையப்பட்டிருக்கும். இதைக் கண்டால் நமக்குச் சிரிப்புத்தான் உண்டாகும். வால்ட் டிஸ்னியின் கார்ட்டூன் படங்களில் காணப்படும் கதாபாத்திரங்களின் முகங்கள் போன்று காணப்படும்.

முட்டை வடிவ விழிகள், அவற்றின் ஓரத்தில் செருகிக் காணப்படும் பெரிய கருவிழிகள், கோரைப் பற்கள் போன்று காணப்பட்டாலும் சிரிக்கும் பற்கள், விசித்திரமான வடிவத்தில் இருக்கும். மூக்கு, நெற்றியின் நடுவிலும் விழி போன்ற ஒன்று. பொருத்தமான இடங்களில் மஞ்சள், கருப்பு, வெள்ளை, காவி வண்ணங்கள் தீட்டப்பட்டிருக்கும். அசல் மஞ்சள் பொடியையும், கரித்துண்டு பொடியையும் செங்கல் பொடியையும் சுண்ணாம்பையும் வண்ணங்களாக உபயோகிக்கிறார்கள்.



முக்கோண வடிவத்தில் உள்ள அமைப்பின் வெளிப் பக்கத்தில் சந்தன நிறத்தில் காணப்படும் இளம் குருத்தோலை களைச் (தென்னையிலிருந்து) செவ்வக வடிவில் நீளமாக வெட்டி, ஒரே அளவில், காட்சியளிக்கும்படி பொருத்துவார்கள். இந்தக்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குருத்தோலைகள் பார்ப்பவர்களின் கண்களுக்கு விருந்தாக அமையும். அவை காற்றில் அசையும் அழகே அழகு! தீப்பந்தங்களின் ஒளியில் பொன்னென மின்னும்.

இதன் கீழே சிவப்பும், மஞ்சள் நிறமும் கலந்த வட்டங்கள். அதன் கீழே சுற்றிலும் ஏராளமான சிறிய முகங்கள். நடுவிலும் ஒன்றன்மேல் ஒன்றாகச் சற்று இடைவெளிவிட்டு முகங்கள். உயரத்திற்குத் தகுந்த மாதிரி, முகங்களின் எண்ணிக்கையும் கூடும்.

வெயிலில் வாடிப்போகாமல் இருக்க, நிகழ்ச்சி நடத்தப்படும் தினத்தின் காலை நேரத்தில்தான் இதைச் செய்யத் தொடங்குவார்கள். இவர்கள் செய்வதை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம் காணப்படும்.

இந்தக் கோலங்களை வடிவமைப்பவர்கள் காளகா என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள். இதனைத் தயாரிப்பதில் கிராமத்தில் உள்ள அத்தனை கலைஞர்களும் பங்கு கொள்வார்கள்.

படையணி நடனத்தை நிகழ்த்துவது ஒரு குறிப்பிட்ட நாயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். கோலங்களைத் தனது தலையில் அணிந்து தூக்கி வருபவர் அதை அணிவதற்கு முன்பு கடுமையான விரதங்களை மேற்கொள்ளுவார்.

பிறகு கோலத்தை அணிந்து மெல்ல மெல்ல நடந்து வருவார். சில இடங்களில் நடனம் ஆடுவார். தப்பு, தாளம் வாசிக்கப்படுகிறது. சில இடங்களில் செண்டையும் வாசிக்கப்படுகிறது.

இந்த நடனத்தின்போது வாசிக்கப்படும் தாளங்கள் ஏற்படுத்தும் ஓசைகளை இதர கலைவடிவங்களில் கேட்க முடியாது என்கிறார்கள். நடனம் ஆடுபவரும் சில சமயங்களில் தன் வாயினாலேயே ஜதி போன்று சில வற்றைச் சொல்லிக்கொண்டு ஆடுகிறார். படையணி பற்றிய பல பாடல்கள் பாடப்படுகின்றன.

கோலங்களைத் தாங்கி வருபவரின் அருகில் ஒருசிலர் சில சிரிப்பூட்டும் முகங்களை மட்டும் முகங்களில் அணிந்து கொண்டு பார்வையாளர்களிடம் நகைச் சுவையாகப் பேசி, அவர்களைச் சிரிக்க வைக்கிறார்கள்.



## தெய்யம்

கேரள மாநிலத்தின் வடக்குப் பகுதிகளான கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களில் நடத்தப்படும் பண்பாட்டுக் கலைவடிவம் தெய்யம். இக்கலை பாரம்பரிய மரபையும், கிராமியப் பண்பையும் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. பேய், பூதம், வீர மரணமடைந்தோர், சமூக சீர்திருத் தவாதிகள் போன்றோரை நினைவுகூரும் விதமாக அவர்களைப் போலவே வேடமிட்டு ஆடுதலே தெய்யம். அதாவது நாட்டார் தெய்வங்களாக அடையாளப்படுத்தப்படுகின்ற சில சிறுதெய்வங்களின் வேடங்களைப் புனைந்து ஆடுதல். 'தெய்வம்' என்னும் சொல் உருமாறி 'தெய்யம்' என்று கூறப்படுகிறது. பகவதி (அம்மன்) கோயில்கள், காவு குல தெய்வக் கோயில்கள் (தரவாட்டு தெய்வக் கோயில்கள்) போன்ற இடங்களில் இக்கலை ஆண்டுகொருமுறை நடத்தப் படுகிறது.

தெய்வத் தோற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் வேடம் அணிபவன் மிகையான ஒப்பனை, ஆடை மற்றும் அணிகலன்களை அணிகிறான். அலங்காரத்தில் அதிக அளவில் சிவப்பு வண்ணமும் சிறிய அளவில் கறுப்பு, வெள்ளை வண்ணங்களும் பயன்படுத்தப்படுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முக ஒப்பனையை 'பிராக்கெழுத்து' என்றும் 'சங்கெழுத்து' என்றும் கூறுவர். இடையில் அணியும் ஆபரணம் 'வெட்டோடை' எனப்படுகிறது. காலில் சிலம்பு அணிவர். பெண் தெய்வ வேடங்களின்போது மட்டும் மார்பில் கச்சை அணியப்படுகிறது. தலையில் தெச்சிப் பூ, தென்னை ஓலை போன்றவற்றால் ஆன மிகப்பெரிய தலையணி (கிரீடம்) வைக்கப்பட்டிருக்கும். இவ்வகையான அலங்காரம் பார்வையாளர்களுக்கு தெய்வத்தின் தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

தெய்வத்தின் அருள் பெறுவதற்காக முதலில் தோற்றப்பாட்டு பாடப்படுகிறது. தோற்றப்பாட்டு முடிந்து மூன்று அல்லது நான்கு மணிநேர இடைவெளிக்குப் பிறகு தெய்ய ஆட்டம் தொடங்கும். இந்த இடைப்பட்ட நேரத்தில் தெய்வ அருள் பெற்றதற்கேற்ப (ஆண் – பெண் தெய்வம்) அலங்காரம் செய்யப்படுகிறது. முச்சிலோட்டு பகவதி, கண்ணங்காட்டு பகவதி, பராளியம்மா, கதியனூர் வீரன், குறத்தி என்பன தெய்யத்தில் காணலாகும் சில வகைகள்.



பல நகைச்சுவைக் கதைகள் கூறப்படுகின்றன. இவற்றில் ஜாதி சம்பந்தப்பட்ட நகைச்சுவை சம்பவங்களும் கள் குடிப்போர் நடந்துகொள்ளும் விதம் பற்றியும் பெரிய மனிதர்களாக மதிக்கப்படுபவர்கள் வைத்திருக்கும் ரகசியத் தொடர் புகள் அம்பலமாவதைத் தெரிவித்தும் நகைச்சுவைக் கதைகள் கூறப்படுகின்றன.

சில படையணி நிகழ்ச்சிகளில் தெய்வ சம்பந்தமான கதைகளும், ஆதியும் அந்தமும் இல்லாத (தோற்றமும் முடிவும் இல்லாத) நிலை பற்றியும் கதைகள் கூறப்படு கின்றன; பாடல்கள் பாடப்படுகின்றன.

ஒரு சில இடங்களில் இந்தப் படையணி தாரிகனை வதம் செய்துவிட்டு ஆவேசத்துடன் தோன்றும் பத்ர காளியைச் சாந்தப்படுத்தி மகிழ்விக்க நடத்தப்படும் நடனவழிபாடே என்றும் கூறுகிறார்கள். கோலங்கள் அதிகமாகக் காணப்படுவது பெரும்பாலும் உற்சவம் முடியும் தினத்தில்தான். இதனை வலிய படையணி என்று கூறுகிறார்கள்.

பைரவி போன்ற கோலங்கள் மிகவும் அதிகமான உயரங்களில் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் படையணி நடன வழிபாடு சில நோய்களைத் தீர்க்கவும் உதவு கிறது என்று நம்புகிறார்கள். இந்த நடன வழிபாடு நிகழ்ச்சி யால் காக்காய் வலிப்பு நோய் தீரும் என்று நம்பப்படுகிறது. இயற்கைக்கும். மனிதனுக்கும் உள்ள உறவை வலுப் படுத்துவது படையணி நடன வழிபாடு. சுற்றுப்புறச் சூழல் களுக்கு நன்றி தெரிவிக்கும் வழிபாடு படையணி. மனிதனின் மனத்தை மேம்படுத்தும் வழிபாடு படையணி. அற்புதமான – வித்தியாசமான – மனதைக் கவரும் கலை வடிவம் படையணி. பத்தனந்திட்டையைச் சேர்ந்த கடம்மனிட்டா, காடாலி மங்கலம் போன்ற இடங்களில் உள்ள பல பகவதி கோவில்களில் பிப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரை இந்தப் படையணி நடன வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. வாய்ப்புக் கிடைக்கும்போது நேரில் சென்று பார்த்து மகிழுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**கமலநாதன்**



திருவனந்தபுரத் தமிழரான இவரது இயற்பெயர் இரவீந்திரன். இவர் ஒரு சுற்றுலாப் பிரியர். இமயம் முதல் குமரி வரை சுற்றியவர். கலைக்குடும்பத்தில் பிறந்த இவரது கேரளத்து கோவில் கலைகள் என்ற நூலில் படையணியும் ஒன்று. பயனுள்ள கட்டுரைகள், பக்திக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், சிறுகதைகள் என்று பலவிதமான படைப்புகளைப் பிரபல பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தவர். இக்கட்டுரை **கேரளத்து கோவில் கலைகள்** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ஊடகங்களின் உதவியுடன் மறையும் நிலையில் இருக்கும் கலைகளின் புகைப்படங்களைத் திரட்டி வகுப்பறையில் ஒரு புகைப்படக் கண்காட்சி நடத்துங்கள்.
- தெய்யம், படையணி எனும் கலைகளை ஒப்பிட்டு 'நாட்டுப்புறவியல்' என்னும் சிற்றிதழில் வெளியிடுவதற்கான விமர்சனக் கட்டுரை ஒன்று தயார் செய்க.
- பண்பாட்டுத்துறை சார்பாக நடைபெறும் கருத்தரங்கில் பங்கேற்க 'பண்பாட்டின் பிரதிபலிப்பே கலைகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## அலகு 2

# சுவைகளின் கலவை

இலக்கியம், மனித மனங்களுக்கு இன்பத்தை ஊட்டுவன. ஒவ்வொரு இலக்கியத்தை வாசிக்கும்போதும் வாசகன் மனத்தில் ஏதாவது ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. அவ்வகையில் அமைபவையே சிறந்த இலக் கியங்கள் எனக் கொள்ளலாம். மெய்யில் தோன்றும் உணர்ச்சிகளே மெய்ப்பாடுகள் என்று வரையறுக்கப்படுகின்றன. தொல்காப்பியரும் மனிதனில் காணலாகும் எண்வகை மெய்ப்பாடுகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இம்மெய்ப்பாடுகள் தோன்றப் படைக்கப்பட்ட பல்வேறு இலக்கியங்களைத் தமிழ்மொழி தன்னகத்தே கொண்டுள்ளது. இன்பம், அவலம், வீரம், கோபம் என்னும் பல்வேறு சுவைகளை உள்ளடக்கிப் படைக்கப்பட்ட இலக்கியங்களையும், அவற்றைப் படைத்தளித்த படைப்பாளிகளின் படைப்பாற்றலையும் அறிய உதவும் நோக்கில் பல்வேறு சுவைகளை உடைய இலக்கியப் பகுதிகள் இவ்வலகில் தரப் பட்டுள்ளன.

### கற்றல் அடைவுகள்

- இலக்கியச் சுவையை அறிந்துகொள்ளுதல்.
- இலக்கிய வகைகளைப் பகுப்பாய்வு செய்து விளக்கக்கட்டுரைகள் தயாரித்தல்.
- இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பினை இலக்கியங் களைக் கற்பதன் வாயிலாக ஒப்பிடல்.
- மொழியியல் கூறுகளை அடையாளம் காணுதல்.
- நாடகம், திரைப்படம் போன்றவற்றைத் திறனாய்வு செய்தல்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# இலக்கியச் சுவைகள்

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அவற்றுள் மிகச் சிறந்தது இலக்கியக் கலையே என்பது சான்றோர் கூற்று. மனிதன் படைத்துக் கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது அது. பேசுவதற்கும் எழுதுவதற்கும் உரியதாக மனிதன் படைத்துக் கொண்டது தான் மொழி என்றாலும், மொழி இல்லையாயின் இன்றைய நாகரிக வளர்ச்சியே இல்லை எனலாம். மன்பதையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடிப்படையானது மொழியே. அத்தகைய மொழியின் சொற்களையே ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம். ஆகையால் அது கலைகளில் சிறந்தது என்பார் மூதறிஞர் மு. வரதராசனார்.

கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகிய நான்கும் இலக்கியத்திற்கு இன்றியமையாதவை. எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் அதில் ஒரு கருத்து இருந்தே ஆகவேண்டும். எனவே கருத்தினை இலக்கியத்தின் உயிர் என்றே கூறலாம். கருத்தில்லா இலக்கிய வடிவம் என்பது உயிரில்லா உடம்பைப் போன்றது.

## எண்வகை மெய்ப்பாடுகள்

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

– தொல். பொருள். மெய் : 3

காதல், வீரம், அறம், பக்தி, பாசம் முதலானவற்றை உணர்த்துபவை பண்டை இலக்கியங்கள் என்றால், இன்றைய இலக்கியங்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையே பெரும்பாலும் முன்வைக்கின்றன. எப்படி வாழவேண்டும் என வாழ்க்கைக்கு வழிகாட்டியவை அன்றைய இலக்கியங்கள். இப்படியும் வாழ்கிறார்களே என்று வருந்துபவை இன்றைய இலக்கியங்கள். அவரவர் மன ஏக்கங்களின் தாக்கங்களே இன்றைய இலக்கியங்களின் பாடுபொருள்களாக அமைகின்றன. கருத்து அல்லது பாடுபொருள் காலந்தோறும் மாறிக்கொண்டே இருக்கும்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

"புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் – பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்"

"செல்வத்துப் பயனே ஈதல் – துய்ப்போம்
எனினே தப்புந பலவே."

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

'மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிது'

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

'அறம் செய்ய விரும்பு
ஆறுவது சினம்'

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லால் வேறொன்றும் அறியேன்"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில் ஒற்றுமை
நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"

என்றெல்லாம் உன்னதமான கருத்துகளை எடுத்தோதியவை நம் இலக்கியங்கள்.

இலக்கியத்தில் அமையவேண்டிய இன்னொரு முக்கியமான கூறு உணர்ச்சி என்பதாகும். ஏனெனில் மனிதன் உணர்ச்சி வடிவானவன். உணர்ச்சிகள் இல்லாமல் மனிதனால் வாழ இயலாது. உணர்வில்லா மனிதன் நடைப் பிணமாகத்தான் இருப்பான். உணர்ச்சிகள் உடம்பெனும் மெய்யின் வழியாக வெளிப்படுவதால் இலக்கணிகள் இவற்றை மெய்ப்பாடுகள் என்று குறிப்பிட்டனர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எண்வகை மெய்ப்பாடுகளை அதாவது உணர்ச்சிகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இலக்கியமும் உணர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. உணர்ச்சிகள் இலக்கியப் படைப்புக்கு மூலகாரணமாக விளங்கும். நல்ல இலக்கியப் படைப்புகள் நல்ல உணர்ச்சிகளைத் தூண்டிவிடும். இன்பம், துன்பம், கோபம், வீரம், காதல், இரக்கம், பக்தி, பாசம் போன்றவை மனிதனுக்கு ஏற்படும் சில அடிப்படையான உணர்ச்சிகள்.

## நட்பு

குவளை நாறும் குவை இருங் கூந்தல்
ஆம்பல் நாறும் தேம் பொதி துவர் வாய்
குண்டு நீர்த் தாமரைக் கொங்கின் அன்ன
நுண் பல் தித்தி மாஅயோயே
நீயே, அஞ்சல் என்ற என் சொல் அஞ்சலையே
யானே, குறுங் கால் அன்னம் குவவு மணற் சேக்கும்
கடல் சூழ் மண்டிலம் பெறினும்
விடல் சூழலன் யான், நின்னுடை நட்பே

**குறுந்தொகை – 300**

"கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்
களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்"

என்பார் நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம். இந்நிலையில் அன்று முதல் இன்றுவரை தமிழ் இலக்கியங்களில் வெளிப்படும் சில அடிப்படை உணர்ச்சிகளை இனிக் காண்போம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### இன்பம்

இலக்கியத்தின் நோக்கமே இன்பம் பயப்பதுதான். இன்ப உணர்ச்சியையே கற்போர் பெரிதும் விரும்புவர்.

சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுரம் ஒலியெழ ஒலியெழப்
பனிமொழி யவர்கடை திறமினோ (கலிங்: 23)

என்னும் பரணிப் பாடல் இன்பச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

“பின்னிக் கிடக்கும் முல்லைக் கொடியைப்
பிரிக்க முடியுமா - அன்பைப்
பிரிக்க முடியுமா?
கண்ணும் கண்ணும் கட்டின கூட்டைக்
கலைக்க முடியுமா?”

எனச் சுவையூறும் தமிழில் இன்பத்தைப் பாடுகிறார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

### காதல்

காதலைப் பாடாத புலவர்களே இல்லை எனலாம். காதல் காதல் காதல்; காதல் போயின் காதல் போயின் சாதல், சாதல், சாதல் என்று பாடியவர் பாரதியார்.

“அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே“

(குறுந்தொகை: 49)

என்னும் சங்கப்பாடலில், இப்பிறப்பில் மட்டுமல்ல அடுத்த பிறவியிலும் நீ என் கணவனாகவும் நான் உன் மனைவியாகவும் இருக்கவேண்டுமென்று தம் தலைவனை நினைத்துப் பாடுகின்றாள் தலைவி. தலைவி தன் தலைவனிடம் காட்டும் அன்புக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு இல்லை. இதைப்போன்றே, இன்னொரு தலைவன், உயர்ந்த சிறப்பினையும் செல்வத்தையும் வளத்தினையும் உடைய காவிரிப்பூம்பட்டினத்தையே பரிசாகத் தந்தாலும் நான் என் தலைவியைப் பிரியமாட்டேன் என்கிறான்.

## எச்சம்

ஒரு வினை அல்லது செயல் முற்றுப் பெறாமல் அமைந்தால் அது எச்சம் எனப்படும். (எ.டு) வந்து, எழுந்து, பாடிய, படித்த

எச்சம் வினையெச்சம், பெயரெச்சம் என இருவகைப்படும்.

## வினையெச்சம்

முடிவு பெறாத ஒரு எச்சச் சொல்லின் பின்னால் வினை எஞ்சி நின்றால் அது வினையெச்சம் எனப்படும். அது தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும்.

(எ.டு) கமலா <u>எழுந்து</u> நின்றாள்
தம்பி <u>தூங்கி</u> எழுந்தான்
ஆசிரியர் <u>விளக்கிச்</u> சொன்னார்

இங்கு எழுந்து, தூங்கி, விளக்கி என்னும் எச்சச் சொற்களின் பின்னே நின்றாள், எழுந்தான், சொன்னார் என்னும் வினை எஞ்சி நிற்பதால் இவை வினையெச்சச் சொற்கள் ஆயிற்ன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார் இருங்கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன்"

எனும் இப்பாடலடிகள் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பட்டினப் பாலையின் இறுதியில் இடம்பெறுகின்றது.

### வீரம்

காதலையும் வீரத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டவை சங்க இலக்கியங்கள். சங்க காலத்தை வீரயுகக் காலம் என்றே கூறுவர். சங்க இலக்கியப் பாடல்களில் புறப்பாடல்கள் பெரும் பான்மையும் வீரச்சுவை மிக்கவை.

"நகுதக்கனரே நாடு மீக்கூறுநர்
இளையவன் இவன் என உளையக்கூறி
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படை அமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கி
சிறுசொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின் பொருந்திய
என்னிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"

(புறநானூறு: 72)

என்னும் பாடலில், பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் வீரமுழக்கத்தைக் கேட்கலாம்.

"பொருதடக்கை வாளெங்கே மணிமார்பெங்கே
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்"

(கலிங்கத்துப்பரணி: 483)

என்ற பாடலில் ஒரு தாயின் வீரம் வெளிப்படுவதை அறிய இயலும்.

சுந்தரனாரின் மனோன்மணீயம் நாடகத்தில் ஜீவகன் தம் படைவீரர்களை நோக்கிக் கூறும் கூற்றாக அமையும்,

## பெயரெச்சம்

முடிவு பெறாத ஓர் எச்சச் சொல்லின் பின்னால் பெயர் எஞ்சி நின்றால் அதனைப் பெயரெச்சம் என்பர். பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

(எ.டு) நேற்று வந்த நல்லவர்

அன்று பாடிய பெண் நேற்று வந்தாள்

இந்தப் படம் வரைந்த ஓவியன் என் நண்பன்

இங்கு, வந்த, பாடிய, வரைந்த என்னும் எச்சச்சொற்களின் பின்னர் நல்லவர், பெண், ஓவியர் என்னும் பெயர்கள் எஞ்சி நிற்பதால் இவை பெயரெச்சச் சொற்கள் ஆயின.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

“இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் காயம்
சித்தங் களித்து ஐயமா துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை ஆகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்!
போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும் ஆ! ஆ! நோக்குமின்”

(அங்கம் : 4, களம் : 1 148 - 153)

என்ற பகுதியும் வீரச்சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

பாரதத்தில் தர்மபுத்திரன் சகுனியுடன் சூதாடி நாட்டை மட்டுமல்ல, தன் சகோதரர்களையும் மனைவியையும் இழக்கின்றான். அத்தகைய ஒரு சூழ்நிலையில்,

“நாட்டை யெல்லாந் தொலைத்தாய் - அண்ணே
நாங்கள் பொறுத் திருந்தோம்
மீட்டும் எமை யடிமை செய்தாய்
மேலும் பொறுத் திருந்தோம்
துருபதன் மகளைத் - திட்டத்
துய்ந னுடற் பிறப்பை
இரு பகடை யென்றாய் - ஐயோ
இவர்க் கடிமை யென்றாய்
இனி பொறுப்ப தில்லை - தம்பி
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித் திடுவோம்” (பாஞ்சாலிசபதம்)

எனக் கோபத்தின் உச்சியை அடையும் வீமனின் மொழிகள் அன்னியருக்கு எதிரான பாரதியின் கோபக்கனல்கள் என்றே கூறலாம்.

### அவலம்

சங்க அகப்பாடல்கள் காதலையே பாடுபொருளாகக் கொண்டாலும், காதலின்பத்தைவிடக் காதல் வயப்படுவதால் ஏற்படும் அவலங்களையே மிகுதியாகப் பாடுகின்றன. அகப்பாடல்கள் ‘பெண்களின் கண்ணீர்த் துளிகள்’ என்று கூறினாலும் தவறு இல்லை. தற்காலத்திலும் நல்ல படைப்புகள் பலவும் அவலச் சுவையையே முன்வைக்கின்றன.

கடையெழு வள்ளல்களில் ஒருவன் பறம்புமலைத் தலைவன் பாரி. ஒரு முல்லைக் கொடியின் வருத்தத்தைக் கூடத் தாங்கமுடியா



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## சிலேடை

**ஊசியும் திங்களும்**

மெல்லக் கலையேறும் மேவுமிரு பக்கமுமாம்
சொல்லத் தகுதாரம் சூழ்தலால் – தொல்லுலகில்
பூசிக்குஞ் சங்கரனைப் போற்றும் முருகப்பா
ஊசிக்குச் சந்திரனேர் ஒது.

– அங்கப்பபிள்ளை

### அங்கப்பபிள்ளை

இவர் பவானி என்னும் ஊரில் நாகப்பபிள்ளை என்பவரின் அருமைப் புதல்வராகத் தோன்றினார். சிறந்த புலவராகத் திகழ்ந்த இவர் நூல்கள் சில செய்துள்ளார். தம்முடைய அருமை மனைவி காலஞ்சென்றபோது நாற்பது இரங்கற்பாக்கள் பாடி வருந்தினார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர். இப்பாடல் தனிப்பாடல் திரட்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

மல் தான் ஏறி வந்த தேரை ஈந்து கொடைமடம் பட்டவன். அத்தகைய வள்ளல் பெருமானை மூவேந்தரும் ஒன்றுகூடிக் கொன்றுவிடுகின்றனர். இதனால் அரண்மனை வாழ்க்கை வாழ்ந்த அவனது பெண்மக்கள் அனாதைகளாகி விடுகின்றனர். அச்சூழ் நிலையில் அவர்கள் பாடும்,

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"
(புறநானூறு: 112)

என்னும் புறப்பாடல் அவலச் சுவைக்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு. சங்கப் பாடல்களில் கையறுநிலைப் பாடல்கள் எல்லாமே அவலச் சுவைப்பாடல்கள்தாம்.

பெண்ணொருத்தித் தான் விரும்பிய ஆடவனுடன் சென்றுவிடுகிறாள். இதனை அறிந்த தாய் பெரிதும் கவலைக்குள்ளாகிறாள். அந்நேரம் அயல்வீட்டார் வந்து அவளுக்கு ஆறுதல் கூறுகின்றனர். ஆனால் அந்தத் தாயால் தன் ஒரே மகளின் பிரிவைத் தாங்க முடியவில்லை. அப்போது அவள் பாடும்,

"ஒருமகள் உடையேன் மன்னே அவளும்
செருமிகு மொய்ம்பின் கூர்வேற் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநல் சென்றனள்
இனியே தாங்கு நின் அவலம் என்றிர் ஆதுமற்று
யாங்கனம் ஒல்லுமோ அறிவுடையீரே
உள்ளின் உள்ளம் வேமே – உண்கண்
மணிவாழ் பாவை நடை கற்றன்ன என்
அணி இயற் குறுமகள் ஆடிய
மணி ஏர் நொச்சியும் தெற்றியும் கண்டே" (நற்றிணை : 184)

என்னும் பாடல் தாய்ப்பாசத்தின் ஏக்கத்தின் வெளிப்பாடாக அமைகின்றது.

பெற்ற குழந்தை பாம்பு தீண்டி இறந்துவிடுகிறது.அதைக் கண்டு மனம் பொறாத தாய் நெஞ்சம் நெக்குருகிப் பாடும்,

"பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூ சூடிடம்மா
என்னும் மொழிகள் இனி எக்காலம் கேட்பன் ஐயா"



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"வாய்முத்தம் தாராமல் மழலையுரை யாடாமல்
சேய் கிடத்தல் கண்டெனக்குச் சிந்தை தடுமாறுதையா"

(ஆசியஜோதி)

முதலான பாடல்கள் கல்நெஞ்சையும் கரைத்துவிடும்; கற்போரைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்தும். அவலச்சுவை விஞ்சி நிற்கும் இப்பாடல்களைத் தந்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்.

### நகைச்சுவை

கற்போரும் காண்போரும் பெரிதும் விரும்புவது நகைச்சுவைதான். காலந்தோறும் தோன்றிய தமிழ்ப்பாடல்களில் நகைச்சுவை உணர்வு நன்றாகவே அமைந்திருக்கக் காண இயலும். அறநெறிபாட வந்த வள்ளுவரும் ஆங்காங்கே நகைச்சுவையை அள்ளித் தெளித்துச் சென்றுள்ளார்.

ஆடவன் ஒருவனுக்குத் தும்மல் வருகின்றது. உடனே யாரை நினைத்துத் தும்மினீர் என்று கேட்கின்றாள் அவனது மனைவி. யாரையேனும் நினைத்தால் தும்மல் வரும் என்பது நம்பிக்கை. ஆனால் அந்த ஆடவனோ உண்மையில் யாரையும் நினைக்கவில்லை. உள்ளதைச் சொன்னால் மனைவி நம்ப மாட்டாள் என்பதால், அவளை நோக்கி, 'உன்னை நினைத்துத்தான் தும்மினேன்' என்கிறான். அதைக் கேட்ட அப்பெண், அப்படியானால் இவ்வளவு நேரம் என்னை மறந்துதானே இருந்தீர்கள்? என்று சொல்லி அவனிடம் ஊடல் கொண்டுவிட்டாளாம்.

"உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்" (திருக்குறள் : 1316)

என்பது அக்குறட்பா.

கலிங்கப் போருக்குப்பின் கூழ் அடுகின்றன பேய்கள். பின்னர் அக்கூழ் எல்லோருக்குமாக விளம்பப்படுகிறது. ஒரு பேய் கூழ் வாங்கிய பாத்திரம் கீழே ஓட்டையாக இருந்ததால் ஒழுகுகிறது. எங்கிருந்து ஒழுகுகிறது என்பதைப் பார்க்க அது பாத்திரத்தைக் கவிழ்த்திப் பார்க்கிறது. அப்போது கூழ் முழுமையாகக் கீழே சிந்திவிடுகிறது. அதைக் கண்டு வருந்துகிறதாம் அப்பேய்.

#### அங்கதம்

நகை உணர்ச்சியும் இகழ்ந்துரையாடலும் மக்களிடையே இயல்பாகக் காணப்படுபவை. இலக்கண நூலார் நகைச்சுவை இன்னின்ன காரணங்களால் பிறக்கும் என்று அறுதியிட்டுக் கூறியுள்ளனர். கம்பராமாயணம் முதலிய காவியங்களில் அங்கங்கே நகைச்சுவை குமிழிட்டெழக் காணலாம். வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதையில் நகைச்சுவை ததும்புகிறது. இன்று தமிழ்நாட்டில் நகைச்சுவை நிகழ்ச்சிகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய நகைச்சுவைப் பகுதிகளில் ஆழ்ந்த உணர்ச்சி இல்லை; ஆழ்ந்த பொருளில்லை; நிலைத்த பயனில்லை. கணநேர மகிழ்ச்சியையே நமக்குத் தந்து அதனோடு ஒழிகிறது.

வெறுப்பின் உருவ வேறுபாடே இகழ்ச்சி என்பது. இலக்கியங்களிலும் இது மிகுதியாகக் காணப்படுகின்றது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

“பொல்லா வோட்டைக் கலத்துக் கூழ்
புறத்தே யொழுக மறித்துப் பார்த்து
எல்லாம் கவிழ்த்தூத திகைத்திருக்கும்

இழுதைப் பேய்க்கு வாரீரோ”

(கலிங்கத்துப்பரணி: 570)

என்பது அப்பாடல்.

இகழ்ந்து பாடுதலையே தம் தொழிலாகக் கொண்டு அவ்வகைப் பாடலில் சிறந்து விளங்கியவர் காளமேகம் என்னும் புலவர். இகழ்ச்சியுரை வசையாக மாத்திரம் அமையாதபடி, குற்றத்தைக் கண்டித்து நீக்குதலையே உண்மையான நோக்கமாகக் கொண்டதாயின், அப்போது அவ் இகழ்ச்சி ஒருபடி உயர்ந்து விடுகிறது. இவ்வாறாகக் கண்டிக்க வேண்டியவற்றை அல்லது விமர்சிக்க வேண்டியவற்றை நகைச்சுவைப் பாணியில் சுட்டிக்காட்டுவதை ஆங்கிலத்தில் ஸட்டயர் (Satire) என்பார்கள். இதுதான் தொல்காப்பியத்தில் அங்கதம் எனக் குறிப்பிடப்படுகின்றது. **வகையொடும் நகையொடும் கூடியதே அங்கதம்.**

## பக்தி

பக்திச் சுவை, தமிழ் இலக்கியத்தின் தனிச்சுவை. நாயன்மார்களும் ஆழ்வார்களும் கம்பரும் சேக்கிழாரும் மட்டுமல்லர்; அருணகிரியாரும் வள்ளலாரும் குமரகுருபரரும் தாயுமான வரும் எல்லாம் தம் பக்திப் பாடல்களால் படிப்போரைப் பரவச மூட்டியவர்கள்.

“மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே”

(சிலம்பு 17 : 35)

எனத் திருமாலின் பெருமையைப் பாடியவர் இளங்கோவடிகள்.

“பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனிஅல்லேன் எனலாமே”

என சுந்தரத்தமிழில் ஐந்தெழுத்தானை அகமுருகப் பாடியவர் சுந்தரர்.

“ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே”



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எனத் தன் பக்தியின் பெருக்கைப் பாடியவர் சேரர்குலப் பெருமான் குலசேகரப் பெருமாள்.

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும் மறவாமை வேண்டும்"

எனப் பாடியவர் காரைக்கால் அம்மையார்.

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா உன்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா"

என இன்னொரு நிலையில் பக்தி உணர்வைப் பாடியவர் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

நமது இலக்கியங்கள் சுவை மிக்கவை; உணர்ச்சி மிக்கவை. அவற்றைத் தேர்ந்தெடுத்துப் படித்து இன்புறுவோம்.

"எத்தனையோ இன்பம் இந்த நாட்டிலே உண்டு
அத்தனைக்கும் பெரிய இன்பம் பாட்டிலே உண்டு" – (ஜீவா)

**– பணிமனையில் உருவாக்கப்பட்டது**

## செயல்பாடுகள்

- 'விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்தமைப்பின்
  ஒட்டன்றோ வன்க ணவர்க்கு" (வீரம் – 775)

  "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
  மக்கட்பண் பில்லா தவர்" (இழிவு – 997)

  இதுபோன்று பல்வேறு சுவைகளில் அமைந்த குறள்களைத் தொகுக்க.
- அச்சம், நகைச்சுவை, பெருமிதம் எனும் சுவைகளின் அடிப்படையில் ஒரு சிறுகதை எழுதுக.
- 'காலந்தோறும் தமிழிலக்கியத்தில் சுவைகளின் போக்கு' எனும் தலைப்பில் ஒரு சொற்பொழிவு தயார் செய்க.
- அங்கதச் சுவையில் அமைந்த பழமொழிகளைத் திரட்டுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# மருமக்கள்வழி மான்மியம்

கோர்ட்டுக் காரியம் கொஞ்சமும் தெரியுமோ?
பாரப் படிகளும் பட்டிகைப் படிகளும்
சாக்ஷிப் படிகளும் சமன்ஸுப் படிகளும்
கணக்கி லடங்காக் கமிஷன் படிகளும்
ஜப்திப் படிகளும் லேலப் படிகளும்
வாரண்டுப் படிகளும் வாசற் படிகளும்
ஏணிப் படிகளும், இப்படி அப்படி

எல்லாப் படிகளும் ஏறி இறங்கி,
வாணாள் கொடுத்து வாண தீர்த்தம்
ஆட ஆளும் நீரோ? ஐயோ!
கோர்ட்டு பீஸு குமாஸ்தா பீஸு
கூடிக் காப்பி குடிக்கப் பீஸு

வெற்றிலை வாங்கிட வேறொரு பீஸு
வக்கீல் பீஸு மகமைப் பீஸு
வக்கா லத்து வகைக்கொரு பீஸு
எழுதப் பீஸு சொல்லப் பீஸு
எழுதிய தாளை எடுக்கப் பீஸு

நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
நீட்டின கையை மடக்கப் பீஸு
பாரப் பீஸு கீரப் பீஸு
பரா இழவு பயிற்றுப் பீஸு
கண்டு பீஸு காணாப் பீஸு

## *புணர்ச்சி*

இரண்டு சொற்கள் சேரும் பொழுது அச்சொற்களில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிக் கூறும் இலக்கணம் புணர்ச்சி இலக்கணம் எனப்படும்.

**நிலைமொழியும் வருமொழியும்**

இரண்டு சொற்கள் ஒன்றோடொன்று இணைவது புணர்ச்சி எனப்படும். இவ்வாறு இணையும் சொற்களில் முதலில் நிற்பதை 'நிலைமொழி' எனவும் இரண்டாவது வரும் சொல்லை 'வருமொழி' எனவும் குறிப்பிடுவர் இலக்கண நூலார்.

வாழை + தண்டு = வாழைத்தண்டு

வாழை – நிலைமொழி

தண்டு – வருமொழி

வாழை – (ஐ) – நிலைமொழி ஈறு

தண்டு – (த்) – வருமொழி முதல்

உயிர்முதல் : உயிர் எழுத்தை முதலில் உடைய சொல்

எ.டு. அணி (அ)

மெய்முதல் : மெய் எழுத்தை முதலில் உடைய சொல்

எ.டு. பொன் (ப் + ஒ)

உயிர் ஈறு: உயிர் எழுத்தை இறுதியில் உடைய சொல்

எ.டு. அணி (ண் + இ)

மெய் ஈறு: மெய் எழுத்தை இறுதியில் உடைய சொல்

எ.டு. பொன் (ன்)

**இயல்பு புணர்ச்சி**

நிலைமொழியும் வருமொழியும் இணையும் பொழுது அவற்றினிடையே எவ்வித மாற்றமும் இல்லாமல் இயல்பாக இணைவது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

எ.டு. வாழை + மரம் = வாழைமரம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முண்டுத் துணிக்கொரு முழுமல் பீஸு
அந்தப் பீஸு இந்தப் பீஸு
ஆனைப் பீஸு பூனைப் பீஸு
ஏறப் பீஸு இறங்கப் பீஸு
இப்படி யாக என்றென் றைக்கும்

பீஸு பீஸாகப் பிச்சுப் பிடுங்கும்
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்.
குதித்துக் குடியை முடித்திட வேண்டாம்;
மூவுல கேத்து மூவரும் நாணப்
பொதுரிக் கார்ட்டுப் புரையில் தனியாய்
ஓர், மூலையில் இருந்து முத்தொழில் இயற்றும்
தெய்வத் தின் இருசேவடி நிதமும்
கண்டு தொழுது காணிக்கை யிட்டு
வணங்கா தவர்க்கு வருந்தோ ஷங்கள்
இத்தனை யென்றிட யாரால் முடியும்?

**-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**விகாரப்புணர்ச்சி**

சொற்கள் இணையும் பொழுது இடையே மாற்றங்கள் உண்டானால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப்புணர்ச்சி மூன்று நிலைகளில் அமையும்.

அ) *தோன்றல்:* நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது.
எ.டு. வாழை + பழம் = வாழைப்பழம் (ப்)

ஆ) *திரிதல்:* நிலைமொழி வருமொழிகளுக்கு இடையே வரும் ஓர் எழுத்து வேறொரு எழுத்தாக மாறி வருவது.
எ.டு. மண் + குடம் = மட்குடம் (ண் → ட்)

இ) *கெடுதல்* : நிலைமொழி வருமொழிகளிலுள்ள எழுத்துகளில் ஒன்று விடுபட்டு வருவது.
எ.டு. மரம் + வேர் = மரவேர் (ம் – விடுபட்டது)

**வேற்றுமைப்புணர்ச்சி**

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் வேற்றுமை உருபு மறைந்தோ வெளிப்பட்டோ நிற்க, நிலைமொழியும் வருமொழியும் சேர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

எ.டு. மோர் + குடித்தேன் = மோர்குடித்தேன்
வேற்றுமையுருபு 'ஐ' மறைந்து வந்துள்ளது.
கண்ணன் + கண்டேன் = கண்ணனைக் கண்டேன்
(ஐ உருபு வந்துள்ளது).

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (1876 – 1956)**



நாகர்கோவிலை அடுத்த தேரூரைச் சார்ந்த பேரூரில் பிறந்தவர். இவர் எளிய இனிய பாடல்களைப் பாடுவதில் வல்லவர். கோட்டாறு பள்ளியிலும், திருவனந்தபுரம் மகாராசா பெண்கள் கல்லூரியிலும் தமிழாசிரியராக இருந்தவர். ஆசியஜோதி என்னும் புத்தரின் வரலாற்றைக் கூறும் மொழிபெயர்ப்பு நூலைத் தந்தவர். இவர் மலரும் மாலையும், உமர்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம் முதலிய அரிய படைப்புகளைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- இப்பாடலில் காணலாகும் சுவை குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு வரைக.
- உங்கள் வாழ்வில் நிகழ்ந்த மறக்கமுடியாத நகைச்சுவைத் தருணங்களைக் கவிதை வடிவில் தருக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# வைகுண்ட வைத்தியர்

*நாடகப் பாத்திரங்கள்*

வைகுண்ட வைத்தியர் (தமிழ் வைத்தியர்)
வீரம்பூரன் (அவரது வேலையாள்)
ஆலவாய்ப்பிள்ளை (ஒரு நோயாளி)

**முதல் அங்கம்**
**முதற் காட்சி**

**இடம்:** வைகுண்ட வைத்தியர் வீட்டில் நோயாளிகளைப் பார்க்கும் அறை

**காலம்:** காலை

**வைகுண்ட வைத்தியர் மேஜை அருகில் உட்கார்ந்து கொண்டு சில ஓலைப் புத்தகங்களைத் திருப்பிக் கொண்டிருக்கிறார். வீட்டிற்குள்ளிருந்து வீரம்பூரன் வருகிறான்.**

**வீ** : எஜமான்! அந்தப் பூனைக்குட்டி பாலில்லாமல் கத்துகிறது. ஒரு அரையணா இருந்தால் பால் வாங்கி...

**வை** : சத்! தப்பு அது! நன்றாகக் கத்தட்டும். “லங்கணம் பரம ஔஷதம்” என்று சொல்லியிருக்கிறது வைத்திய சாஸ்திரத்தில். ஆகவே அதற்கு லங்கணம் போட்டால், அதற்கிருக்கும் வியாதியெல்லாம் போய் சுகமடையும்.

*(வீரம்பூரன் உள்ளே போகிறான்.)*

**ஆலவாய்ப்பிள்ளை வருகிறான்.**

**ஆ**: ஐயா! வைத்தியரே! எலி எலி!

**வை** : யாரப்பா நீ? என்ன சமாச்சாரம்?

**ஆ** : எலி! எலி!

**வை** : எலியா? நான் என்ன எலி வியாபாரமா செய்கிறேன்?

**ஆ** : அப்படியல்லங்க! எலி உபத்திரவம் பொறுக்க முடியவில்லை!

**வை** : அதற்கு என்னிடம் வருவானேன்? கடைக்குப் போய் ஒரு எலிப்பொறி வாங்கி வீட்டிற்குக் கொண்டுபோய் வை. எலி உபத்திரவம் நீங்கிவிடும்.

**ஆ** : வீட்டிலே அல்லங்க! என் வயிற்றிலே!

*(வயிற்றைத் தடவுகிறான்)*

## நாடகம்

ஆடல், பாடல் சார்ந்த நிகழ்த்தல் முறை என்பது உலகம் முழுவதும் பழமரபாகக் கொள்ளப்படுகிறது. தமிழ் நாடகம் அதற்கு விதிவிலக்கல்ல. கதை தழுவிய கூத்து, நாடகம் என்பதாக சங்ககாலம் தொடங்கி தமிழ் மரபில் நிகழ்ந்து வந்துள்ளது. பிற்காலத்தில் கூத்து வேறாகவும் நாடகம் வேறாகவும் உருக்கொண்டுள்ளன. தமிழில், நாடகம் வேறான வடிவமாக ஆன போதிலும் அது ஆடல், பாடலைத் தவிர்த்துவிடவில்லை. தொடக்க காலத்தில் தன்னுடன் சொற்பமான வசனங்களை இணைத்துக் கொண்டது. தெருக்கூத்தில் ஆடல், பாடல், வசனம் என்கிற முறையை இன்றளவும் காணலாம். இதன் தொடர்ச்சியை ஸ்பெஷல் நாடக (இசை நாடகம் மரபிலும் கண்டு கொள்ளலாம். சமகால ஸ்பெஷல் நாடகம், ஆட்டத்தை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**வை** : வயிற்றிலேயா? உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிற தா என்ன? அடே வீரம்பூரன், இங்கே வாடா!

**வீரம்பூரன் வருகிறான்.**

இந்த ஆளை வீட்டை விட்டு அப்புறப்படுத்து!

**ஆ** : ஐயா! வைத்தியரே! அப்படிச் சொல்லாதீர்கள். முதலில் என் வயிற்றிலிருந்து எலியை அப்புறப்படுத்துங்கள். உங்களுக்கு வேண்டிய ரூபாய் தருகிறேன்.

**வை** : அடே வீரம்பூரம்! கொஞ்சம் பொறு! ஏனப்பா? உன் வயிற்றில் எப்படி எலி போச்சுது?

**ஆ** : அப்படிக் கொஞ்சம் கேளுங்கள் சொல்லுகிறேன். நான் நேற்று மத்தியானம் வழக்கம் போல் தூங்கிக் கொண்டி ருந்தேன். வாயைத்திறந்துகொண்டு குறட்டைவிட்டுக் கொண்டு தூங்குகிறது வழக்கம். அந்தச் சமயம் பார்த்து ஒரு எலி எப்படியோ உள்ளே நுழைந்து விட்டது. உள்ளே போனதும் அங்கிருந்த சாப்பாட்டையெல்லாம் சாப்பிட்டுக் கொண்டு சவுக்கியமாய் உட்கார்ந்து கொண்டி ருக்கிறது. நான் எவ்வளவோ யுக்தி செய்து பார்த்தும் வெளியே வரமாட்டேன் என்கிறது.

**வை** : (அவனது தொப்பையைத் தடவிப் பார்த்து) ஓ! இது மிகவும் அபாயகரமான விஷயமாச்சுதே! உம்! உம்! உன் வயிற்றிற்குள் நுழைந்தது எலிதானா? நிச்சயமாய்த் தெரியுமா? ஒரு வேளை பெருச்சாளியாயிருக்குமா?

**ஆ** : இல்லை வைத்தியரே, எலிதான்.

**வை** : இல்லை... வயிறு மிகவும் பெரிதாயிருக்கிறதே என்று கேட்டேன்... உம்! இப்பொழுது அந்த எலி என்ன செய்கிறது வயிற்றிற்குள்ளே?

**ஆ** : என்ன செய்கிறதா? ஒரு நிமிஷம் சும்மாயிருக்க மாட்டேன் என்கிறது. இங்கும் அங்கும் ஓடிக்கொண்டேயிருக்கிறது. பீபில்ஸ் பார்க்கில் ஓட்டப்பந்தயத்தில் முதற் பரிசு பெற வேண்டுமென்று அப்யாசம் செய்வது போலிருக்கிறது. ஒரு நிமிஷம் எனக்குத் தூக்கமில்லை. அன்றியும் அகோர பசியாயிருக்கிறது.

**வை** : ஏன் அப்படி? நீ சாப்பிடுகிறதுதானே?

**ஆ** : எதைச் சாப்பிட்டு என்ன பிரயோசனம்? நான் எதைச் சாப்பிட்டாலும் வயிற்றுக்குள்ளிருந்து அதையெல்லாம்

நிகழ்த்தல் கூறுகளான: நிகழ்த்து வெளி (மேடை/நிகழிடம்) இசை (கருவி இசை, வர்ணமெட்டுக்கள்). ஒப்பனை (முக ஒப்பனை, ஆடை ஆபரணங்கள்). மேடை அமைப்பு (set). மேடைப்பயன்படு பொருட்கள் (props) ஆகியன காலத்திற்குக் காலம் அரசியல், பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப மாற்றம் அடைகின்றன. இம்மாறுபாடுகள் அந்தந்த நிகழ்த்துகலை வடிவத்தில் இருத்தல் சார்ந்தன. மாறுபாடுகளை ஏற்காதவை; உள்வாங்காதவை அழிந்துபோகும். அப்படி அழிந்து பட்டவை ஏராளம் என்பதை கலைவரலாறு நமக்குக் காட்டுகின்றது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்த எலிப்பிசாசு சாப்பிட்டு விடுகிறது. என் உடம்புக்கு என்ன பிரயோசனம்? எனக்குள் ஒன்றும் தங்குவதேயில்லை! ஐயா வைத்தியரே, உங்களுக்கு என்ன வேண்டுமென் றாலும் தருகிறேன். இந்த எலி உபாதையை நீக்கிவிடும், தயவு செய்து.

**வை** : உம்! இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன... ஒன்று சீக்கிரமாய் முடியும். அதாவது ஏதாவது பாஷாணத்தைக் கொடுத்து இந்த எலியைக் கொன்றுவிடலாம்.

**ஆ** : ஐயா! அது வேண்டாம். பாஷாணத்தைச் சாப்பிட்டால் அந்த எலி சாகுமுன் நான் செத்துப் போய்விடுவேன். இன்னொரு மார்க்கமென்ன?

**வை** : இன்னொரு மார்க்கம், கொஞ்சம் நாளாகும். “லங்கணம் பரம ஔஷதம்” என்று வைத்திய சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது. பத்து நாள் லங்கணம் போட்டால் இந்த எலி ஆகாரமின்றி இறந்து போய்விடும்.

**ஆ** : அதற்கு முன் நான் போய்விடுவேனே! அதற்கு என்ன செய்கிறது? வைத்தியரே, வேறு ஏதாவது சிகிச்சை செய்யுங்கள். உபாதை பொறுக்க முடியவில்லை.

**வை** : சற்றும் பயப்படாதே அப்பா, அப்படியே செய்கிறேன். முதலில் வயிற்றிற்குள் இருப்பதை எக்ஸ்ரே படம் (X ray Photo) எடுக்க வேண்டும். அதற்குப் பீசு மூன்று ரூபாய் ஆகிறது.



**ஆ** : இந்தாருங்கள். (மூன்று ரூபாய் கொடுக்கிறான்.) எதையாவது செய்யுங்கள். இந்த எலிப் பிசாசை மாத்திரம் வயிற்றிலிருந்து அப்புறப்படுத்தி விடுங்கள்.

**வை** : அடே! வீரம்பூரன்!

**வீரம்பூரன் வருகிறான்.**

**வீ** : எஜமான்.

**வை** : இந்த நோயாளியை உள்ளே அழைத்துக் கொண்டுபோய், இவர் வயிற்றிலிருப்பதற்கு ஒரு எக்ஸ்ரே படம் எடுத்து சீக்கிரம் டெவலப் (develop) பண்ணிக்கொண்டு வா.

**வீ** : வாருங்களையா.

***(ஆலவாய்ப்பிள்ளையை உள்ளே***



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*அழைத்துக்கொண்டு போகிறான்.)*

**வை** : உம்! மூன்று ரூபாய் லாபந்தான்: ஆனாலும் இதற்கு ஏதாவது சிகிச்சை செய்யவேண்டுமே! நம்முடைய ஆயுர்வேத சாஸ்திரங்களில் இதைப் பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறதா பார்ப்போம்!

**(ஓலைப் புத்தகங்களைப் பரிசோதித்துப் பார்க்கிறார்.)**

ஒன்றையும் காணோம்! எலி கடிக்கு மருந்து சொல்லியிருக்கிறதேயொழிய வயிற்றிற்குள் எலி புகுந்துகொண்டால் என்ன செய்வது என்று சொல்லவில்லை! ஆ! எனக்கு ஒரு யுக்தி தோன்று கிறது! 'மார்ஜாலோ மூஷி கரிபு' என்று சொல்லியி ருக்கிறது அதுதான் சரி.

***(ஆலவாய்ப்பிள்ளை உள்ளிருந்து வருகிறான்)***

என்ன? படம் எடுத்தாயிற்றா?

**ஆ** : படம் எடுத்தாச்சுங்கோ. அதை என்னமோ டெவலப் (develop) பண்ண வேண்டுமாம்.

**வை** : இதோ சீக்கிரம் வந்துவிடும். உட்காரப்பா... உம், உன் பெயர் என்ன?

**ஆ** : ஆலவாய்ப்பிள்ளை.

**வை** : ஓ! உன் வாயைக் காட்டு பார்ப்போம்.

***(அதைப் பரிசோதித்து)***

சரிதான்! இப்பொழுது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. இந்த வியாதிக்குக் காரணம். நம்முடைய வைத்திய சாஸ்திரங்களில், பகலில் தூங்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறது; அப்படித் தூங்குவதனாலும் வாயைத் திறந்து கொண்டு தூங்கலாகாது, இதோ பார்.

***(ஒரு ஓலைக்கட்டைப் பிரித்து படிப்பதுபோல் பாசாங்கு செய்கிறார்.)***

" அப்பனே ஆளிவாயா
ஆந்தைபோல் விழித்த கண்ணா
செப்பினேன் பகலில் நீயும்
சிறிதுமே தூங்கிடாதே."

இனிமேலாவது பகலில் வாயைத் திறந்துகொண்டு தூங்காதே.

## அரங்கு

நாடக சாலையின் முகனே யரங்கஃ
துயர்ந்த சமதல முடைத்தாய்ப் பல்வகைக்
களங்களுங் காட்டுங் கவினுறு திரைபல
வேண்டிய போது வீழுந் தகைத்தாய்க்
காண்பவர் நெஞ்ச மாண்பொடு கவரு
மோவியத் தொழினல மாவியப் புறுநவும்
தாழ்ச்சியி லெந்திரச் சூழ்ச்சியுஞ் சான்றதாய்
பாயிருள் கடிந்து ஞாயி றெழுந்ததோ
வென்ன வொளிதவ மன்னி விளங்குந்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து
நிலவிளக் கேற்றியு நலமுறப் பாத்திர
நடிப்பிட மாகி நனியியல் வதுவே.

– பரிதிமாற்கலைஞர்

**பரிதிமாற்கலைஞர்** (1870 – 1903)



இவரது இயற்பெயர் சூரிய நாராயணசாஸ்திரி. தமிழ்ப் பற்றின் காரணமாக அப் பெயரைப் பரிதிமாற் கலை ஞர் என மாற்றிக் கொண்டார். இவர் மதுரையை அடுத்த விளாச்சேரியில் பிறந்தவர். 19ஆம் நூற்றாண்டின் இறுதி யில் தமிழுக்குத் தொண் டாற் றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர். மதுரையில் 4ஆம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர் களுள் ஒருவர். ரூபாவதி, கலாவதி போன்ற நாடகங்களை எழுதியுள்ளார். ஞானபோதினி இதழை நடத்தியுள்ளார். **'நாடகவியல்'** என்ற நூலிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## கம்பெனி நாடகம்

சினிமாவின் வருகைக்கு முன், சென்னை மாகாணத்தின் முதன்மையான வெகுசன ஊடகம் நாடகக் கம்பெனிகள்தான். புதிய பண்பாட்டு நிகழ்வாக இருந்த அந்த நாடகங்கள் முகிழ்த்துச் சில பத்தாண்டுகளே கடந்திருந்தன.

இந்நாடகக் கம்பெனிகள் குடும்பம்போல் இயங்கின. வாத்தியார், நடிகர்கள், இசைக்கலைஞர்கள் ஆகியோர் ஒன்றாக வாழ்ந்தனர். ஊர் ஊராகப் பயணம் செய்தனர். குறிப்பிட்ட சில இடத்தில் ஒரு மாத காலமோ அதற்குமேலே கூடத் தங்கி நிகழ்ச்சிகளை நடத்தினர். இக்கம்பெனி நாடகங்களைக் காண்பது முக்கியமான வெகுசன பொழுதுபோக்காக உருவானது. பல சிறு நகரங்களில் நிரந்தர நாடகக் கொட்டகைகள் கட்டப்பட்டன. பிறகு இக்கம்பெனிகளின் மாறுபட்ட வடிவங்களும் தோன்றத் தொடங்கின. பாய்ஸ் கம்பெனி எனப்படும் சிறுவர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழ் சினிமாவின் மிக முக்கியமான கலைஞர்கள் பாய்ஸ் கம்பெனிகளில் உருவாக்கப்பட்டவர்களே. 1910ல் சங்கரதாஸ் சுவாமிகள் சமரச சன்மார்க்க சபா என்ற பாய்ஸ் கம்பெனியைத் தொடங்கினார். அவர் நாடக ஆசிரியர் மற்றும் வாத்தியார் ஆவார். வெகு சிலரே ஆனாலும் முழுவதும் பெண்களால் ஆன சில குழுக்களும் இயங்கத் தொடங்கின.

*(வீரம்பூரன் ஒரு படத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறான்.)*

அப்பனே! ஆளிவாயா! பார்த்தாயா! நான் நினைத்தபடியே யிருக்கிறது. உன் வயிற்றிற்குள் நுழைந்த பிறகு இரண்டு குட்டிகள் போட்டிருக்கிறது! படத்தில் மூன்று எலிகள் இருக்கின்றன பார்!

*(காட்டுகிறார்.)*

**ஆ** : ஐயா! வைத்தியரே! இந்தக் குட்டிகளும் பெரிதாகிக் குட்டி போடுவதற்கு முன்பாக ஏதாவது சிகிச்சை செய்யுங்கள்!

**வை** : அப்படியே ஆகட்டும், அதற்கு 36 ரூபாய் பீசாயிற்று. முப்பது ரூபாய் பெரிய எலிக்கும், ஆறு ரூபாய் அதன் இரண்டு குட்டிகளுக்கும்.

**ஆ** : ஐயா, வைத்தியரே கொஞ்சம் குறைத்துக் கொள்ளக் கூடாதா?

**வை** : முடியவே முடியாது.

**ஆ** : ஆனால் சரிதான். இந்தாருங்கள்.

*(ரூபாயைக் கொடுக்கிறான்.)*

**வை** : (அதைப் பையில் போட்டுக்கொண்டு) அப்பனே, உன் வியாதி சீக்கிரம் குணமாக வேண்டுமென்றால், நான் சொல்கிறபடியே செய்யவேண்டும். குறுக்கே வாயைத் திறந்து, ஒன்றும் பேசலாகாது தெரியுமா?

**ஆ** : இல்லைங்க.

**வை** : அடே! வீரம்பூரன், அந்த பசித்திருக்கிற பூனைக்குட்டியை இங்கே கொண்டுவாடா!

*(வீரம்பூரன் ஒரு பூனைக்குட்டியைக் கொண்டு வருகிறான்.)*

அப்பனே, ஆளிவாயா! இந்தப் பூனைக்குட்டியை எடுத்துக்கொண்டு போ. இன்றிரவு தூங்கும்பொழுது வாயைத் திறந்துகொண்டு தூங்கு. இந்தப் பூனைக்குட்டியை உன் மார்பின் மீது படுக்க வைத்துக்கொள். எல்லாம் சரியாகப் போய்விடும். நாளை காலை என்னை வந்து பார்.

**ஆ** : ஒரு வேளை...

**வை** : அதுதான் வேண்டாமென்றேன்! வைத்தியர் வாக்குக் குக்குக் குறுக்காக ஒன்றும் சொல்லக்கூடாது. சொன்னால் மருந்து பலிக்காது. போய் வா.

*(ஆலவாய்ப்பிள்ளை பூனைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியே போகிறான்.)*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**காட்சி முடிகிறது.**

**இரண்டாவது காட்சி**

**இடம்: அதே இடம். காலம் : மறுநாள் காலை.**

*வைகுண்ட வைத்தியர் முன்புபோல் மேஜை அருகில் உட்கார்ந்திருக்கிறார். உள்ளிருந்து வீரம்பூரன் வருகிறான்.*

**வீ** : என்னாங்க! இந்த எலிகள் தொந்திரவு பெரிசாப்போச்சு! நேற்று ராத்திரி என் துணியெல்லாங்கிழிச்சூட்டுதுங்க! இப்பவும் உக்கிராண அறையில் இரண்டு மூன்று சேர்ந்து கொண்டு காபுரா பண்ணிக் கொண்டிருக்குதுங்கள்! அந்த பூனையே நீங்க கொடுத்தூட்டது தப்புங்க. அது இருந்தா இந்த எலிங்கல்லாம் கிட்ட நாடாதுங்க... வேறொரு பூனையாவது வாங்கிகினு வரட்டுமா?

**வை** : சீ! பூனைக்குட்டியை விலை போட்டு வாங்குவதாவது! யாராவது கேட்டால் சிரிப்பார்கள். உம்! கொஞ்சம் பொறு சொல்கிறேன். ஒருவேளை! நம்முடைய பூனைக்குட்டி நம்மிடமே திரும்பி வந்தாலும் வரும் என்று எனக்குத் தோன்றுகிறது. சாயங்காலம் வரைக்கும் பார்ப்போம். நீ போய் உள்ளே உன் வேலையைப் பார்... அடடே கொஞ்சம் இரு. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. உக்கிராணத் திலே எலிகள் இருக்கிறது என்றாயே, அந்த எலிகளில் இரண்டு மூன்று பெரிய எலிகளை எலிப்பொறி வைத்துப் பிடித்து வை. ஒரு வேளை நமக்கு இன்று உபயோகப் பட்டாலும் படும்.

**வீ** : அப்படியே.

**(உள்ளே போகிறான்.)**

**வை** : இன்றைக்கு வழக்கமாய் வரும் நோயாளிகள் கூட வரவில்லை! மருந்தே சாப்பிடாமலிருந்தால் சுபாவத்தினால் எல்லா வியாதிகளும் நீங்கும் என்று ஒரு மடையன் எழுதினாலும் எழுதினான், வைத்தியர்களாகிய எங்கள் பாடு கஷ்டகாலமாய்ப் போய்விட்டது; இன்னும் கொஞ்ச நாள் பார்க்கிறேன். இந்த வைத்தியத்தில் சரியான வரும்படி வராவிட்டால் இதை விட்டு ஜோஸ்யம் சொல்ல ஆரம்பித்து விடுகிறேன். அதற்கு மருந்து சிலவு, வேலையாள் சிலவு ஒன்றும் வேண்டியதில்லை. இந்த ஓலைப்புத்தகங்களே போதும்.

**(ஆலவாய்ப்பிள்ளை வருகிறான்.)**

**ஆ** : ஐயா! வைத்தியரே! என்ன இப்படிச் செய்து விட்டீர்களே! முன்பிருந்ததைவிட வயிறு பெருத்துப் போய்விட்டதே!

## உடம்படுமெய்

உயிரெழுத்தை இறுதியாகக் கொண்ட ஒரு சொல், உயிரெழுத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு சொல்லுடன் இணையும்போது, அவ் உயிரெழுத்துகளுக்கு இடையே 'ய்' அல்லது 'வ்' என்னும் மெய்யெழுத்து மிகுந்து வரும். இவ்வாறு வருவதை உடம்படுமெய் என்பர்.

நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ ஆகிய உயிரெழுத்துகளில் ஏதேனும் ஒன்று வந்து, வருமொழி முதலில் ஏதேனும் உயிரெழுத்து வந்தால் இடையே 'ய்' என்னும் மெய் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணியழகு
தீ + இல்லை = தீயில்லை
மலை + ஏறு = மலையேறு

நிலைமொழி இறுதியில் அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துகளில் ஒன்று வந்து, வருமொழி முதலில் ஏதேனும் உயிரெழுத்து வந்தால் 'வ்' என்னும் மெய் உடம்படுமெய்யாக வரும். (எ.டு.)

பலா + இலை = பலாவிலை
அது + அல்ல = அதுவல்ல
பூ + அழகு = பூவழகு
கோ = இல் = கோவில்

நிலைமொழி இறுதியில் 'ஏ' எனும் உயிர்வந்தால் ய், வ் ஆகிய மெய்யெழுத்துகளில் எதுவேண்டுமானாலும் உடம்படுமெய்யாக வரலாம்.
ஊரே + அல்ல = ஊரேயல்ல
ஊரேவல்ல



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## சபா நாடகங்கள்

மராத்தி மற்றும் பார்சி நாடகக் கம்பெனிகளின் சென்னை வருகை ஆங்கிலம் கற்றவரிடையே தாக்கம் ஏற்படுத்தியது.

நீதித்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த பம்மல் சம்பந்த முதலியார் 1891இல் சுகுண விலாச சபா என்ற அமெச்சூர் குழுவைச் சென்னையில் நிறுவினார். இக்குழு சமூகத்தின் உயர்மட்டத்தினரைக் கவர்ந்தது. மேலைக் கல்வி பெற்றவர்கள், கலையில் பங்கேற்பதற்கான அங்கீகாரத்தை நாடகத்துறை பெற்றது. சுகுணவிலாச சபா போன்ற நிறுவனங்கள் அத்தேவையைப் பூர்த்தி செய்தன. அதைத் தொடர்ந்து சிறு நகரங்களிலும் பல சபாக்கள் உருவாகின. தஞ்சை சுதர்சன சபா, திருச்சி ரசிக ரஞ்சனி சபா ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். இந்தச் சபாக்கள் அமெச்சூர் கம்பெனிகள் ஆகும். நாடகத்தின்பால் உள்ள ஈடுபாட்டின் காரணமாகப் பலர் உறுப்பினர்களாக இந்தச் சபாக்களில் சேர்ந்தனர். பணம் சம்பாதிக்க இவற்றை நம்பி இருக்கவில்லை. வணிக ரீதியிலான கம்பெனிகள் போலன்றி, இச்சபாக்களின் நாடகங்கள் மிகக் குறைவாக, சில நகரங்களில் மட்டும் நிகழ்த்தப்பட்டன. இந்த மேல்தட்டு சபாக்களின் நாடகங்கள் பெரும்பாலும் காளிதாசர், ஷேக்ஸ்பியர் நாடகங்களின் தமிழ் வடிவங்களாக இருந்தன. கம்பெனி நாடகங்களைப் போலன்றி இந்தச் சபா நாடகங்கள் வசனத்திற்கு முக்கியத்துவம் அளித்தன. இசை மற்றும் பாடல்களுக்கு அதிக அழுத்தம் தரவில்லை.

காலையில் எழுந்தது முதல் மூச்சு விடுவதற்கும் கஷ்டமா யிருக்கிறதே!

**வை** : நான் சொன்னபடியே செய்தாயா அப்பா? எங்கே அந்த பூனைக்குட்டி?

**ஆ** : அதைத்தான் கேளுங்கள்! நேற்றிரவு நீங்கள் சொன்னபடியே படுத்துக்கொள்ளும் பொழுது அந்த பூனைக்குட்டியை என் மார்பில் வைத்துக்கொண்டு என் வாயைத் திறந்து கொண்டு தூங்கினேன். காலையில் எழுந்து பார்க்கிறேன் பூனைக்குட்டியைக் காணோம்! என் வயிறு மாத்திரம் முன்பைவிட பெருத்துப் போயிருக்கிறது. வேண்டுமென்றால் பரிசோதித்துப் பாருங்கள்.

**வை** : (அவன் வயிற்றைப் பரிசோதித்துப் பார்த்து) ஓ! தெரிகிறது, இருந்தாலும் எதற்கும் இதற்கு ஒரு படம் எடுத்துப் பார்க்கவேண்டும்!

**ஆ** : அதற்கு வேறு மூன்று ரூபாய் கொடுக்க வேண்டுமா என்ன?

**வை** : பயப்படாதே! இரண்டாம் முறை படம் எடுப்பதற்கு இரண்டு ரூபாய் போதும்.

**ஆ** : அம்மட்டும் சந்தோஷம்! இந்தாருங்கள் இரண்டு ரூபாய்.

***(கொடுக்கிறான்.)***

**வை** : அடே! வீரம்பூரன்!

**வீரம்பூரன் உள்ளிருந்து வருகிறான்.**

**வீ** : ஏன்?

**வை** : இதோ இந்த பிள்ளையாண்டானை அழைத்துக் கொண்டு போய் வயிற்றினுள்ளிருப்பதற்கு ஒரு எக்ஸ்ரே படம் சீக்கிரம் எடுத்துக்கொண்டு வா.

**(வீரம்பூரன் ஆலவாய்ப்பிள்ளையை உள்ளே அழைத்துக் கொண்டு போகிறான்.)**

**வை** : தற்காலத்தில் அட்வொகேட்டுகளைப்போல், வைத்தியர்கள் ஒரு வீதிக்கு ஒன்பது பெயர்கள் இருக்கிறார்கள். ஆகவே ஏதாவது ஸ்பெஷல் (Special) வைத்தியன் என்று பெயர் வைத்துக்கொண்டால்தான் பணம் சம்பாதிக்கலாம். இன்றைக்கே வெளியிலிருக்கும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

என் பெயர் போர்டில் (Board) "இணையில்லாத எலி வைத்தியர்" என்னும் பெயரை எழுதிவைக்கிறேன்.

**ஆலவாய்ப்பிள்ளை உள்ளிருந்து வருகிறான்.**

ஆ : வைத்தியரே! படம் எடுத்தாயிற்று. அங்கே மாட்டியிருக்கும் மற்றப் படங்களைப் பார்க்க எனக்கு பயமாயிருந்தது, வந்து விட்டேன்! வைத்தியரே இன்று காலை முதல் வயிற்றுக் குள்ளிருந்து முன்பு போலல்லாமல் வேறுவிதமான சப்தம் உண்டாகிறது. அதை கவனித்தீர்களா?

**வை** : (வயிற்றில் ஸ்டேதாஸ்கோப் Stethoscope வைத்துப் பார்த்து) ஆம் ஆம்! இது நேற்றிருந்த சப்தமல்ல. நேற்று எலி சப்தம் கேட்டது. இப்பொழுது பூனை சப்தம் கேட்கிறது!

**ஆ** : ஐயையோ! அந்தப் பூனைக்குட்டியும் வயிற்றிற்குள் போய் விட்டதா என்ன?

**வை** : ஆம்!

**வீரம்பூரன் ஒரு படத்தைக் கொண்டு வருகிறான்.**

இதோ பார்த்தாயா படத்தை! பூனைக்குட்டி உன் வயிற்றிற்குள் உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

**ஆ** : ஐயையோ! வைத்தியரே! இது தானா நீங்கள் என்னை சொஸ்தப்படுத்துகிறது?

**ஆ** : அப்பனே! ஆளிவாயா! நீ இவ்வாறு புத்தியில்லாதவன் போல் பேசலாமா? அந்த எலிகளின் உபத்திரவத்தினின் றும் உன்னைக் காப்பாற்றும்படி கேட்டாய். அதைச் செய்து முடித்தேனோ இல்லையோ?

**ஆ** : எங்கே அந்த எலிகள்?

**வை** : அதைத்தான் நான் உன்னைக் கேட்கிறேன்? எங்கே அந்த எலிகள்?

**ஆ** : என் வயிற்றில் (படத்தைக் காட்டி) காணோமே.

**வை** : ஆம் உன் வயிற்றிலில்லை. இந்தப் பூனைக்குட்டியின் வயிற்றிலிருக்கின்றன! இந்தப் பூனைக்குட்டி, அந்த பெரிய எலி ஒன்று. சின்ன எலிகள் இரண்டு, ஆக மூன்றையும் புசித்து விட்டது. அதன் வயிறுகூட உப்பியிருக்கிறது பார்... அந்த எலி பயம் இனி உனக்கு வேண்டாம். அந்த எலிகள் எல்லாம் இந்நேரம் பூனை வயிற்றில் ஜீரணமாய்ப் போயிருக்கும்.

**ஆ** : ஆமாம் வைத்தியரே! 'வாலு போயி கத்தி வந்தது டும்டும்'

## உடை - ஒப்பனை

கம்பெனி நாடகங்களில் புராணப் பாத்திரங்கள், தெய்வங்கள், இராஜாக்கள் போன்றவை இராஜா ரவிவர்மா ஓவியங்களின் தாக்கத்தினால் உருவான உடை ஒப்பனை முறையைப் பயன்படுத்துகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் அவரது ஓவியங்கள் பல பத்திரிகைகளிலும் காலண்டர்களிலும் வெளியாகி, பம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களில் உள்ள நாடகக் கம்பெனிகளில் தாக்கம் செலுத்தின.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

என்பதுபோல எலி போயி பூனை வந்திருக்கிறதே என் வயிற்றில்!

**வை** : அதற்கு வேறு சிகிச்சை செய்ய வேண்டும்.

**ஆ** : (பயந்து எழுந்து) என்ன! இந்தப் பூனைக்குட்டியைக் கொல்ல ஏதாவது ஒன்றை நாளை என் வயிற்றிற்குள்விடப் போகிறீர்களா என்ன! வேண்டாம் வேண்டாம்! உங்கள் வைத்தியம் வேண்டாமெனக்கு!

*(ஓடப் பார்க்கிறான்.)*

**வை** : (அவன் கையைப் பிடித்து தடுத்து) அப்பனே ஆளிவாயா! அப்படி ஒன்றும் செய்யமாட்டேன் பயப்படாதே! இந்தப் பூனைக்குட்டியை வெளியில் அகற்றிவிடுகிறேன் பயப் படாதே!

**ஆ** : ஆ! அப்படிச் செய்யுங்கள் உங்களுக்குப் பீசு கொடுக் கிறேன்.

**வை** : அதற்கு 50 ரூபாய் பீசாகும்.

**ஆ** : என்ன வைத்தியரே! அதிகமாய்க் கேட்டீர்கள்! ஒரு பெரிய எலிக்கும் இரண்டு குட்டி எலிகளுக்கும் 36 ரூபாய் கொடுத்தேன். இது ஒரே பூனைதானே, 12 ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்.

**வை** : அதெல்லாம் உதவாது. ஒரே பூனையாயிருந்தாலும் இது எலியைவிட எவ்வளவு பெரிய ஜந்து; யோசித்துப் பார்.

**ஆ** : அதெல்லாம் உதவாது. நான் சொல்லுகிறதைக் கேளுங்கள். என்னிடம் இருபது ரூபாய்தானிருக்கிறது. அதை வாங்கிக்கொண்டு இந்தப் பூனையை என் வயிற்றி லிருந்து அப்புறப் படுத்துவதானால் செய்யுங்கள். இல்லாவிட்டால் நான் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போய் என் வயிற்றை அறுத்து இந்தப் பூனைக்குட்டியை வெளிப்படுத்தச் சொல்லிவிடுகிறேன். அதற்காக ஒரு சார்ஜும் கேட்கமாட்டார்கள்.

*(எழுந்திருக்கிறான்.)*

**வை** : வேண்டாம் அப்பா உட்கார். நீ நல்ல பிள்ளையாயிருக் கிறாய்; உனக்காக என் சார்ஜை குறைக்கிறேன். அந்த இருபது ரூபாயும் என்னிடம் கொடுத்துவிடு.

*(ரூபாயை வாங்கிக்கொண்டு)*

ஆபரேஷன் (Operation) இல்லாமல் அரை நிமிஷத்தில் அந்தப் பூனைக்குட்டியை வெளிப்படுத்து விடுகிறேன் பார்.

## இடைவேளை

இந்தியாவின் திரைப்படக் காட்சிகளில் ஒன்றிப்போன அம்சம் இடைவேளை ஆகும். இதுவும் கம்பெனி நாடகங்கள் தந்த கொடையாகும். மிக நீண்ட நாடகங்கள், சில சமயம் அதிகாலை வரை நடக்கும் சூழல் இருந்தது. எனவே இடைவேளை, நிகழ்ச்சியின் அவசியமான கூறாக இருந்தது, மேடை அமைப்பு மாற்றப்படுவதற்கும் பார்வையாளர்கள், புத்துணர்வு பெறுவதற்கும் இந்த இடைவேளை தேவைப்பட்டது.

நாடகம் பற்றிய இக்குறிப்புகள் அனைத்தும் **கட்டியம்** காலாண்டு ஆய்விதழிலிருந்து எடுக்கப்பட்டவை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**ஆ** : வாஸ்தவமாய்?

**வை** : அப்படிக்குச் செய்யாவிட்டால் இந்த இருபது ரூபாயை யும் வாபஸ் செய்துவிடுகிறேன். இப்படி வா. இதோ இந்த ஸ்கிரீன் (Screen) பின்னாலிருக்கும் மேஜையின் மீது படுத்துக்கொள். (அப்படியே செய்கிறான்.) கண்ணை மூடிக்கொள். வாயை ஆளிவாயைப் போல்திற... உனக்கு ஆளிவாயன் என்று சரியான பெயர் வைத்தார்கள் உன் தாய் தந்தையர். அடெ! வீரம்பூரன் (உள்ளிருந்து ஏன்?) அந்த எலி போனை இப்படிக் கொண்டு வா.

**வீரம்பூரன் எலியொன்றடைபட்டிருக்கும் எலிபோனைக் கொண்டு வருகிறான்.**

**வீ** : இதோ!

**வை** : இதை அப்படியே திறவாமல் பிள்ளையாண்டான் வாயருகில் காட்டு. (வீரம்பூரன் அப்படியே செய்ய ஸ்கிரீனுக்குப் பின்னாலிருந்து ஒரு பூனைக்கட்டி வெளியே குதிக்கிறது.)

அப்பனே ஆளிவாயா! சட்டென்று உன் வாயை மூடிக் கொள்! ஆ! அப்படி. இல்லாவிட்டால் அந்தப் பூனைக் குட்டி மறுபடியும் வாய்க்குள் நுழையப் போகிறது! இப்பொழுது எப்படியிருக்கிறது?

**ஆ** : அப்பா! வைத்தியரே! (எழுந்திருந்து வெளியில் வந்து) உங்களுக்குக் கோடி நமஸ்காரம்! வயிற்றிலிருந்து உபாதையெல்லாம் நீங்கிவிட்டது அப்பா!

**வை** : அப்பனே, உனக்கென்ன வேலை?

**ஆ** : நான் போர்டுகள் பெயின்ட்(Board paint) பண்ணுகிறது.

**வை** : ஓ! நிரம்பசரி! அப்படியானால் எனக்கொரு உபகாரம் செய்யவேண்டும்.

**ஆ** : என்ன சொல்லுங்கள்; உடனே செய்கிறேன்.

**வை** : என் பெயரைப் போட்டு, அதன் கீழ் “எலி வைத்தியத்தில் இணையில்லாதவர்” என்று எழுதின போர்டு ஒன்று தயார் செய்துகொடு.

**ஆ** : அதற்கென்ன? அப்படியே ஆகட்டும். நீங்கள் எனக்குச் செய்ததற்கு. அது கூடவா நான் செய்யக்கூடாது? உம், உங்கள் பெயரென்ன?

**வை** : வைகுண்ட வைத்தியர், என்று என்னை எல்லோரும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கூறுவார்கள்.

**ஆ** : வைகுண்ட வைத்தியரா! அது ஏன் அப்படி பெயர் வந்தது?

**வை** : ஏனென்றால், என்னிடம் வரும் நோயாளிகள் நான்கொடுக்கும் மருந்தினால் குணப்படாவிட்டால், அவர்களை வைகுண் டத்திற்கு அனுப்புவது வழக்கம். அங்கே என் தமையனார் போயிருக்கிறார். அவர் அங்கே அவர்களையெல்லாம் சொஸ்தப்படுத்தி விடுவார்.

**ஆ** : அவர் பெயர் என்ன?

**வை** : பரமபத வைத்தியர்.

**ஆ** : அப்பொழுது அவருக்குக்கூட ஒரு போர்டு எழுதிக்கொண்டு வருகிறேன்.

*(புறப்படப் பார்க்கிறான்.)*

**வை** : உம்! ஆமாமப்பா... அதை நான் அவரிடம் எப்படி அனுப்புவது?

**ஆ** : நீங்கள் நேராக எடுத்துக்கொண்டு போய் உடனே கொடுத்து விடுங்களேன்!

*(போகிறான்.)*

**பம்மல் சம்பந்த முதலியார் (1873–1967)**



பம்மல் என்ற ஊரில் பிறந்த இவர் சட்டம் பயின்றவராவார். நடிப்புத்துறையின்மீதுகொண்ட ஆர்வத்தால் சுகுண விலாச சபை என்ற நாடகக் குழுவைத் தொடங்கினார். ராவ்சாகிப் பட்டத்தையும் ராவ் பகதூர் பட்டத்தையும் ஆங்கில அரசிடம் பெற்றவர். நடுவண் அரசு இவரைப் பாராட்டி பத்மபூஷண் விருது வழங்கியது. தொண்ணூற்றிற்கும் மேற்பட்ட நாடகப் பனுவல்களைப் படைத்துள்ளார். தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்பட்டவர். நாடகமேடை நினைவுகள், நாடகத்தமிழ் என்னும் அரிய நூல்களைப் படைத்து பிற்கால நாடக வரலாற்று ஆய்விற்கு உறுதுணையாக இருந்தவர்.

## செயல்பாடுகள்

- வைகுண்ட வைத்தியர் என்ற நாடகத்தினைச் சுவைமிக்க கதையாக வடிமாற்றம் செய்க.
- பள்ளிக் கலைவிழாவில் நடிக்கத்தக்க வகையில் ஏதேனும் ஒரு சுவையடிப்படையில் நாடகம் எழுதுக.
- வைகுண்ட வைத்தியர் நாடகத்தினை நடித்துக் காட்டுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- | ஆங்கிலம் | மலையாளம் | தமிழ் |
  |---|---|---|
  | ஷேக்ஸ்பியர் | வி. டி. பட்டதிரிப்பாடு | சங்கரதாஸ் சுவாமிகள் |
  | பெர்னாட்ஷா | என். என். பிள்ளை | சே. ராமானுஜம் |

  இவர்கள் பல்வேறு மொழிகளின் நாடகத்துறைகளில் சிறந்து விளங்கியவர்கள். இவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளை உள்ளடக்கி ஒரு குறும்படம் தயாரிக்க.

- மெய்ப்பாட்டிற்கும் நடிப்பிற்கும் இடையேயான தொடர்பினை இலக்கியங்கள், ஊடகங்களின் (திரைப்படம், நாடகம், தொலைக்காட்சி) துணைகொண்டு கலந்துரையாடி உரைக் குறிப்புத் தயார்செய்க.

- எண் வகை மெய்ப்பாடுகளைப் பட்டியலிடுக.
- நும் பாடப்பகுதியில் வரும் பெயர்ச்சொல், வினைச்சொற்களைத் தொகுத்துப் பட்டியலிடுக.
- நும் பாடப்பகுதியில் வந்துள்ள பத்து உடம்படுமெய் சொற்களைக் கண்டுபிடித்து விளக்குக.
- இவ்வலகில் இடம்பெற்றுள்ள இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி (தோன்றல், திரிதல், கெடுதல்) சொற்களைக் கண்டுபிடித்து விளக்குக.
- இணைத்து எழுதி அட்டவணைப்படுத்துக.

  பல + பொடி, கல் + விளக்கு, யானை + கண், கல் + தூண், மணி + அழகு, மரம் + வீடு, மலை + ஏற்றம், பொன் + தாமரை, பழம் + கடை, புது + உலகம்

  | இயல்பு | தோன்றல் | திரிதல் | கெடுதல் |
  |---|---|---|---|
  | | | | |

❋❋❋❋❋



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## அலகு 3

# புதுவெள்ளம்

மாற்றம் என்னும் சொல்லைத் தவிர, எல்லாத் துறைகளிலும் மாற்றங்கள் காலச்சூழலுக்கு ஏற்ப நிகழ்ந்துகொண்டே தான் இருக்கின்றன. காலமும் வெளியும் (Time and Space) மாற்றங்களுக்கு அடிப்படை. தமிழ் இலக்கியப் பரப்பில் வடிவ மாற்றங்கள் என்பன காலந்தோறும் நிகழ்ந்து வந்துள்ளன. பொருண்மை அடிப்படையிலான இம்மாற்றங் களைத் தமிழ் இலக்கிய வரலாற்று நூற்கள் சங்க காலம், சங்கம் மருவிய காலம், காப்பிய காலம், பக்திக்காலம், சிற்றிலக்கியக்காலம், உரைநடைக் காலம், புத்திலக்கிய காலம் (நவீன காலம்) எனப் பாகு படுத்துகின்றன. தற்கால/நவீன இலக்கியங்கள் இசங்கள் அடிப்படை யில் சமூகப் பிரச்சினைகளை அணுகுகின்றன. நவீன இலக்கியப் போக்குகள் குறித்து அறிய இவ்வலகு உதவுகின்றது.

### கற்றல் அடைவுகள்

- பல்வேறு இலக்கியப் படைப்புகளைப் பகுப்பாய்வு செய்தல். பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களில் வெளியிடுதல்.
- சமூக ஏற்றத்தாழ்வுகளை நவீன இலக்கியங்கள் வழியாகப் புரிந்து கொண்டு ஊடகங்கள் வாயிலாக வெளியிடுதல்.
- இலக்கியங்களை இயக்கங்கள் இசங்கள், நோக்கில் வாசித்துப் பகுப்பாய்வு செய்து அறிமுகப்படுத்தல், விமர்சித்தல்.
- சுய படைப்புகளில் ஈடுபடுதல்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# நவீனத்துவம்

நவீனத்துவம் என்பது கலை - இலக்கியம் பற்றிய ஒரு கொள்கை அல்லது வெளிப்பாடு என்று சொல்லப்பட்டாலும், பரந்த அளவில், அது ஒரு வாழ்க்கைமுறையை/மனநிலையையே குறிக்கின்றது. தொழில் நுணுக்கப் புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியின் காரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில், வாழ்க்கைமுறையிலும் அது பற்றிய கண்ணோட்டத்திலும் கணிசமான மாறுதல் ஏற்பட்டது. இது, முக்கியமாகப் பிரான்சை மையமாகவும் இத்தாலி, இங்கிலாந்து முதலிய பிற ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தும் ஏற்பட்டது. அதுகாறும் ஆதிக்கம் செலுத்தி வந்த பழைய பொருளாதார உற்பத்தியுறவுகளும் பண்பாட்டு மதிப்புகளும் தமது இடத்தை இழந்துவிட்டபோது, மரபுகளைப் பற்றிய கண்ணோட்டம் மாறியது. பழசுகளுக்கு மாறானவை, புதுசு என்ற தகுதியோடு மக்களின் வாழ்நிலைகளிலும் சிந்தனை முறைகளிலும் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியது. நவீனத்துவம் முன்வைக்கின்ற கருத்துநிலைகளைச் சாராம்சமாக இங்கே குறிப்பிடலாம்.

1. புதிய கலை, புதிய இலக்கியம், புதிய வடிவம்.
2. கலை, இலக்கியம் சுதந்திரமானது; சுயாதிக்கமானது.
3. சமகாலத்துவமும் அதன் பிரச்சினைகளும் கலை இலக்கியத்திற் குரிய பிரச்சினைகளாகலாம்.
4. அரசியல் அற்ற மற்றும் உயர்மேட்டிமைத்தனமான மனப்போக்கு.
5. தனித்துவம், தரம், புனிதம் முதலியவற்றை முன்னிறுத்துவது.
6. சோதனைகளிலும் சாதனைகளிலும் ஈடுபாடு.
7. தாராளத்துவமான மனித நேயம்.
8. பழைமைக்கு எதிர்ப்பு, மறுப்பு, அதற்கெதிரான தேடுதல்.

நவீனத்துவம் படைப்புலகிலும் திறனாய்வு உலகிலும் அளப்பரிய பல சாதனைகளைச் செய்திருக்கிறது. உண்மையில், இது படைப்புத்தன்மை அல்லது உற்பத்தித்திறன் அதிகம் உடையது. வேறு எந்தக் காலங்களையும் விட, நவீனத்துவக் காலப்பகுதியில் தான், அதிகமான திறனாய்வுகளும் இலக் கியங்களும் வந்திருக்கின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவற்றின் பல வகைப்பாடுகளும் வந்திருக்கின்றன. மேலும், இது தனியானதாகவும் வரவில்லை. இதனோடு ஒன்றுகிற விதத்தில் உடனுறைகிற சில முக்கியமான கருத்து நிலைகளும் தோன்றின. இவற்றில் எதிரும் புதிருமான நிலைப்பாடுகள் உண்டெனினும், விவாதங்களுக்கும் வளர்ச்சிக்கும் இவை இடம் தந்தன. இந்தக் கருத்துநிலைகள், யதார்த்தவியல், ஃப்ராய்டியம், இருத்தலியம், மீமெய்மையியல், இருண்மைவாதம், இளிநிலைவாதம் முதலியனவாகும். மேலும், அமைப்பியல் என்பதும், நவீனத்துவ காலத்தில், ஆனால், அதன் பிற்பகுதியில் தோன்றியதேயாகும்.

## புனைவியல் (ரொமான்டிசிசம்)

உணர்தல், கற்பனை, அனுபவம், ஏக்கம் போன்றவை ரொமான்டிக் யுகத்தின் முதன்மைச் சொற்கள். தனிமனிதன் என்பவன் பகுத்தறிவுக்கு உட்படாதவன்; கற்பனாவாதி; தனிப் பட்டவன்; தன்னிச்சையாக இயங்குபவன்; உணர்ச்சிப் பிழம்பால் ஆனவன்; மனக்கோட்டைகளைக் கட்டுபவன்.

இயற்கையை ஆழமான ஈடுபாட்டுடன் ஆராதிக்க வேண்டும். காரண காரியங்களை விட உணர்ச்சிப் பெருக்கே மேலானது. ஒரு தனி மனித ஆளுமையின் மனநிலையும் திறமைகளும் போற்றப்பட வேண்டும்.

தமிழில் நவீனத்துவம் 1925க்குப் பிறகு தோன்றியதாகக் கருதலாம். இதனுடைய தலைமையான பிரதிநிதி, தம்முடைய பல கதைகளில் சோதனைகள் நிகழ்த்தியவரும், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல்ல என்று (தெருவிளக்கு) கதை சொன்னவருமான புதுமைப்பித்தனே. ஆனால் தொடர்ந்து மிகப் பல எழுத்தாளர்கள், தத்தமக்குரிய பிரத்தியேகமான மனப்போக்குடனும் வழிமுறைகளுடனும் இலக்கியத்தை அணுகியிருக்கிறார்கள். தமிழில் புதுக்கவிதை நவீனத்துவத்தின் குழந்தை எனலாம்.

நவீனத்துவத் திறனாய்வு, இலக்கியத்தின் புது வடிவங்களை இனங்கண்டறிகிறது. பழைய வடிவங்களுக்கெதிரான புது முயற்சிகளைக் கண்டு விமரிசிக்கிறது. கலை – இலக்கியம், உயர்மேட்டிமை மக்களுடைய, அதாவது உயர்ந்தோர் சிலருடைய சொத்து என்று நவீனத்துவம் கூறுவதைத் திறனாய்வு, இலக்கியத்தைக் களமாகக் கொண்டு விவாதிக்கிறது. தமிழில், நவீனத்துவ மனப்பான்மை கொண்ட திறனாய்வாளர்கள், இலக்கியத்தை ஒரு சிறுபான்மை நிகழ்வாகவே சித்திரித்தார்கள். இதனைக் க. நா. சுப்பிரமணியன், சி. சு. செல்லப்பா, தருமு சிவராமு, வெங்கட் சுவாமிநாதன் முதலியவர்களின் எழுத்துகளில் பார்க்கலாம். மணிக்கொடி, இலக்கிய வெளிவட்டம், எழுத்து, கசடதபற முதலிய இலக்கியப் பத்திரிகைகள் நவீனத்துவத்தின் குரலாக இருந்தன. இன்று நவீனத்துவத்திற்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றதென்றாலும் தமிழ்ச்சூழலில் பிரதானமாக இருப்பது நவீனத்துவமே ஆகும்.

**–தி. சு. நடராசன்**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**தி.சு. நடராசன்**

இவர் 1941 இல் சிவகாசியை அடுத்துள்ள திருத்தங்கல் என்ற ஊரில் பிறந்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் போன்றவற்றின் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி ஒய்வு பெற்றவர். சிறந்த இலக்கிய விமர்சகர். தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள், கவிதை எனும் மொழி போன்ற நூற்களை எழுதியுள்ளார். இக்கட்டுரை **திறனாய்வுக்கலை** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- “பழையன கழிதலும் புதியன புகுதலும்
  வழுவல கால வகையினானே” – நன்னூல்

  இந்நூற்பா குறித்த உங்கள் கருத்துகளைக் (இலக்கியங்களிலும் சமூகத்திலும்) கலந்துரையாடிக் குறிப்பு தயார் செய்க.

- இக்கட்டுரையின் மூலம் நவீனத்துவம் முன்வைக்கும் கருத்துநிலைகளைப் பற்றி வானொலி உரை தயாரிக்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# பெண்ணுலகு

## எதிர்ப்பின் வடிவம்

மிக நெருங்கிய பரிச்சயமுண்டெனினும்
ஒரு நாளும் அது என்னிடம்
தன் முகத்தோடு வந்ததில்லை
ஒவ்வொருமுறையும் என்னை நோக்கி
வருகிறது ஒரு முகமூடியுடன்

சமயங்களில்
விலகி நின்றென்னை வேவு பார்த்துப்
புதிரென வந்து
சிறிய காத்திருத்தலுக்குப் பிறகாக
என்னிடம் தன்னை விடுவித்துக்கொள்கிறது
கருணையின் வேடம் தரித்தென்
தசை கவ்விப் பற்றுகிறது

எல்லாமும் என் நன்மைக்கே எனப்
பிரியத்தின் நிறம்பூசிக்
கூசாமல் மடியில் விழுந்து
புரள்கிறது இன்னும்
துரோகங்களிலிருந்தென்னை ரட்சிப்பதாய்
ஒரு சொல்லாய்க் கண்ணீராய்
எங்கெங்கிருந்தோ வந்து
என் ஒவ்வொரு செயலிலும் குறுக்கிட்டு
கலந்து நிறைகிறது
என் தேம்புதலை விழுங்கிச் செரித்தபடி

**– சல்மா**

## பெண்ணியம்

Feminism என்ற ஆங்கிலச் சொல் தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. இது Femina என்ற இலத்தீன் மொழிச்சொல்லின் அடியாகப் பிறந்தது. சமூகத்திலும் வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண்ணை ஒடுக்குவது மற்றும் சுரண்டுவது பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியம் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் என்றும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு பெண்ணியம் இயங்குகிறது.

**சல்மா**



இவர் திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் 1967-ம் ஆண்டு பிறந்தார். இவர் பல கவிதை நூல்களை எழுதியுள்ளார். இவரது நூற்கள்: ஒரு மாலையும் இன்னொரு மாலையும், பச்சைதேவதை, இரண்டாம் ஜாமங்களின் கதை (நாவல்) போன்றவையாகும். இக்கவிதை **பச்சை தேவதை** கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## யாருக்கு வேண்டும் அஞ்சலிகள்

சுடுகின்ற யதார்த்தங்கள்
சுவாரஷ்யங்களுக்கென்றே
சூடு பறக்கத் தின்னும் மனிதர்

எப்பவும் இரத்தமும் சதையுமாய்
உணர்வும் உயிர்ப்புமாய்
இருந்திருந்த அருந்ததிகள்
தினம் தினம்
உடல் சிதறி வீழும்
கல்பனா சாவ்லாக்களாய்
உலகம் முழுவதும்

இன்றும் கல்பனாக்களுக்கும்
அங்கீகாரங்கள் சிதறிய பிறகு தானா

பூக்களுக்கு மட்டுமேன் புகழாரங்கள்
இதழ்கள் உதிர வாழ்வைத் தொலைத்து
விதையாய்ப் புதைந்த பிறகு

சிதறினாலும் சிதறதல்களும்
கோள்களாகி
வீழ்ந்தும் மீண்டும்
பிய்ந்த சதைகள் ஒட்டி
தழும்பு மறைத்துத் திரியும்
வாழும் கல்பனாக்களுக்கு
தேவையில்லை
அங்கீகாரம் தரத் தயாராயில்லாத
உங்கள் அஞ்சலிகள்

**– திலக பாமா**



### திலக பாமா

திலகபாமா பட்டிவீரன்பட்டியில் பிறந்தவர். தற்போது சிவகாசியில் வசித்து வருகிறார். மருத்துவ நிர்வாகியாக, பாரதி இலக்கியச்சங்கச் செயலாளாராகவும் இருக்கிறார். சூரியனுக்கும் கிழக்கே சூரியாள், சிறகுகளோடு அக்னிப் பூக்களாய் எனக் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இக்கவிதை **எட்டாவது பிறவி** என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## தற்குறிப்பேற்ற அணி

உலகில் இயல்பாய் நிகழும் ஒரு நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை அல்லது எண்ணத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

எ.டு. "செம்பொற் கொடியனையாள் கண்டாளைத்தான் காணான்

மல்லல்மா ஞாலம் இருளூட்டி மாமலைமேல்
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப"

**விளக்கம்**

மாலை நேரத்தில் செங்கதிரோன் மலையில் மறைவது இயல்பான நிகழ்ச்சி. கண்ணகியின் துன்பத்தைக் காணப் பொறுக்காத கதிரவன் தன் செங்கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மலையில் மறைந்தான் என ஆசிரியர் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளதால் இது தற்குறிப்பேற்ற அணியாகும்.

❖ துண்டொன்றைக்
கட்டிக் கொண்டு
அம்மாவாக முடிகிறது
குழந்தைகளால்.
குழந்தையாக முடியாமல்
அல்லற்பட்டுக் கொண்டிருப்பது
அம்மாக்கள் தான்.

❖ பல்லு தேய்ச்சியா
பால் குடிச்சிட்டயா
ஹோம் ஒர்க் எழுதிட்டியா
யூனிபார்ம் போட்டாச்சா
ரிக்ஷா வந்திடுச்சா
பென்சில் எடுத்துக்கிட்டியா
விளையாட மாட்டதானே
அடிக்காம வந்தியா யாரையும்
கை, கால் கழுவிக் கிட்டியா
சாப்பிட்டியா
தூங்கப் போ நேரமாச்சு...
கேள்விகளால்
சுழற்றி விடப்படுகின்றன
குழந்தைகளின்
உலகம்.

**-அ. வெண்ணிலா**

### அ. வெண்ணிலா

இவர் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் 1971 இல் பிறந்தவர். பெண்ணியக் கவிஞர். பட்டதாரியான இவர் பல நூல்களைப் படைத்தும் தொகுத்தும் வெளியிட்டுள்ளார். நீரில் அலையும் முகம், கனவைப் போலொரு மரணம், இரவு வரைந்த ஓவியம், கனவும் விடியும் என்பன அவற்றுள் சில. இக்கவிதை **ஆதியில் சொற்கள் இருந்தன** என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# சொல்லாக் கதை

வீட்டின் நிலைப்படியே
கதவினை
நிர்மாணிக்கிறது

நிலையின் சட்டங்களுடன்
இணைந்திருப்பதாகவே
அதன் இயக்கம்
கணிக்கப்படுகிறது

சட்டங்களைத் துறந்தால்
கதவென்பதன் பொருளென்ன
வெறும் மரம்தானே எனக்
கற்பிக்கப்படுகிறது

எப்பொழுதேனும் பிணங்கிச்
சிலிர்த்துத் துருத்திக் கொண்டால்
அவசரமாய் அழைக்கப்பட்ட
ஆசாரியின் நேரிழைக்கும்
நிலைப்படியின் பொருத்தலின்
பின்னரே வீடு நிம்மதியாகிறது



சற்றுச் சுணங்கிக்
கிரீச்சிட்டாலோ
எழமுடியாதபடி
எண்ணெய்
இடப்படுகிறது.

சுவர்களுடனான
சிறுமுனகல் கூட
சிமெண்ட் பூசி
மெழுகப்படுகின்றது.
விழாக்காலங்களில்
தோரணமும்
சந்தனப் பூச்சும்
உண்டுதான்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இருந்தாலும்
சிற்ப நேர்த்தியுடன்
இழைக்கப்பட்ட அதற்கு
இரும்புக் கீல்களுடான
பொருந்தாச் சேர்க்கை பற்றிப்
பொருமிட அனுமதியில்லை

..............................................................

இப்படியாய்
நீளும் கவிதைகள்
அவளின் கதவுகளில்லா
வீடுகளைப் பற்றிய
கனவின் மடிப்புக்களோடு
அஞ்சல் செய்யப்படாமலே
மட்கிப் போயிருக்கின்றன
அந்தக் கதவிடுக்குகளில்

**– தமிழச்சி**

### தமிழச்சி



இவரது இயற்பெயர் த. சுமதி. விருதுநகர் மல்லாங்கிணறு எனும் கிராமத்தில் 1963 இல் பிறந்தவர். நவீன நாடகங்களில் நடித்தல், கவிதை படைத்தல், ஆய்வுக் கட்டுரைகள் எழுதுதல் எனப் பல துறைகளில் இவர் செயல்பட்டு வருகிறார். வனப்பேச்சி, காற்று கொணர்ந்த கடிதங்கள், பாம்பாட்டி, மஞ்சணத்தி போன்றவை இவரது நூற்களுள் சில. இவரது 'எஞ்சோட்டுப் பெண்' கவிதை நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- பெண்களின் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் குறித்து ஒரு தலையங்கம் தயார்செய்க.
- இக்கவிதைகள் முன்வைக்கும் பிரச்சினைகள் குறித்துக் கலைந்துரையாடிக் குறிப்பு தயாரிக்க.
- • கல்பனா சாவ்லா
  • அன்னைத் தெரேசா
  இவர்களைப் போன்று பல்வேறு துறைகளில் புகழ்பெற்ற பெண்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுக்க.
- குழந்தைகள் அன்றாட வாழ்வில் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். அது போல் நீங்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு புதுக்கவிதை படைக்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



தாய் மண்ணைப் பாதம் தொட்டவுடன் உடல் சிலிர்த்துக் கொண்டது. உள்ளம் நெகிழ்ந்தான் வெள்ளையன். கதகதவென்று கண்ணீர் திரண்டு கன்னங்களில் உதிர்ந்தது. மேல் துண்டினால் கண்களைத் துடைத்துக் கொண்டபடியே சுற்றிலும் பார்த்தான். ஊர் முன்புபோல இல்லை. பதினைந்து வருடங்களுக்கு முன் இருந்தவை எதுவுமே இல்லாமல் எல்லாம் புதிதாய் இருப்பதுபோல் தோற்றமளித்தது பேருந்து நிலையம். ஆனால், ஆயிரம் மனிதர்களின் இடையிலேயும் அன்னியோன்யமாய் உருகி நிற்கும் மனிதரைப் போல அவன் பாதங்களுடன் அந்த மண் மட்டுமே பேசியது. பழகிய பாதங்களுக்கே அந்த மொழி புரியும். அது மண்மொழி.

ஆவலுடன் சுற்றிலும் பார்த்தபடியே நின்றவன் பின் மெதுவாய்ப் போய் ஒரு டீ குடித்தான். உடம்பும் மனதும் கிளர்ந்து அடங்கியது. வீட்டுச் சாப்பாடு போன்ற சுவை. நகரத்திலும் தான் இருக்கிறது 'டீ'. இப்படியா. கசாயம் குடிக்கிற மாதிரிதான். குவளையின் அடியில் தங்கிய சர்க்கரையையும் அவன் விடவில்லை. நன்றாய் சொலவி வாயில் ஊற்றிக் கொண்டான்.

மெதுவாக அவன் நடக்கத் தொடங்கிவிட்டான். ஊரிலே இருந்த காலங்களில் இருந்த பழைய கட்டிடங்களை இப்போது அதிகம் பார்க்க முடியவில்லை. பெரும்பாலானவை இடிக்கப்பட்டோ அல்லது மாற்றம் செய்யப்பட்டோ, புதிய கட்டிடங்களாகவோ இருந்தன. என்ன பெரிய புது கட்டிடங்கள். அந்தக் காலக் கட்டிடங்களைப் போல வருமா? வீட்டைப் பார்த்தாலே பாசம் பொங்கும். அந்தக் கட்டிடமே புன்னகை செய்து வரவேற்கிற மாதிரி இருக்கும். இப்போது கட்டுகின்றவை அட்டைப் பெட்டிகள்போல இருந்துகொண்டு முறைக்கின்றன. நகரத்தில் எல்லாக் கட்டிடங்களுமே அதுபோலத்தான் இருக்கின்றன. நகரத்து மனிதர்களைப் போலவே அவைகளும் உறுத்தும் கண்களுடன் முறைக்கின்றன. மனிதர்களின் முகத்திலும், வீடுகளின் முகத்திலும் இருந்த ஜீவ களை போய்விட்டது போலத் தெரிகிறது.

வண்டி மேட்டிலே வரிசையாக வண்டிகள் நின்றன. மாட்டுச் சாணமும், புல் குப்பைகளுமாக சகதியாய் இருந்தது அந்த இடம். அந்த இடம் மட்டுமே பழமை மாறாமல் இருந்தது. அங்கே சாலையின்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தலித்தியம்

தலித் என்ற சொல் தல் என்ற எபிரேய மொழிச் சொல்லில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. தல் என்ற சொல் தமிழ் விவிலியத்தில் ஏழைகள் என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தலித் என்ற சொல்லிற்கு மராட்டிய மொழியில் பள்ளம் என்பது பொருளாகும். ஆங்கிலேயர்கள் இந்தியச் சமூகத்தில் ஓரத்திற்குத் தள்ளப்பட்டவர்களை Depressed என்ற சொல்லால் குறித்தது போல, தலித் என்ற சொல் மூலம் பள்ளத்தில் வீழ்த்தப் பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் எனக் கருதப்படும் மக்களைக் குறித்தனர் மராட்டியர். தலித் என்பது சாதி வரிசையில் கடைக்கோடியில் இருக்கும் மக்களைக் குறிக்கிறது. தலித்தியம் என்பது அம்மக்கள் சாதிக் கொடுமையிலிருந்து விடுதலை அடைய முதல் நிபந்தனையாக அமையும் சாதி ஒழிப்பிற்கான நடைமுறைப் போராட்டங்களையும் அப்போராட்டங்களுக்குத் தேவையான தத்துவத் தளத்தையும் (அதாவது கருத்தாக்கத் தளத்தையும்) சுட்டி நிற்கிறது எனலாம். தலித் இலக்கியம் அடிப்படையில் சமூக நீதிகோரும் கலை இலக்கியமாகும். அதிகாரத் திற்கு எதிரான கருத்தாக்கங்களைக் கட்டமைக்கிற தொடர் முயற்சி.

இருபுறமும் எதிரெதிராய் நின்றிருந்த கட்டிடங்களும் அப்படியே இப்போதும் நிற்கின்றன. சம்சுதீன்பாய் வீடும் அவர் அண்ணன் அமீர் வீடும். அந்தக் காலத்தில் அந்த இரண்டு வீடுகளின் மேலே, அவர்கள் போய் வரவேண்டிய மேம்பாலம் கட்டியிருந்தார்களாம் சாலையின் குறுக்கே.

சுண்ணாம்பை அரைத்து, முட்டையும் வெல்லப்பாகும் ஊற்றிய கலவையைக் கொண்டு பால்போல மழுக்கிய கட்டி டங்கள். இப்போதும் அதே கம்பீரத்துடன் ஆனால் கொஞ்சம் சோகையாய் நிற்கின்றன. மேல் மாடங்களிலிருந்து புறாக்கள் பறந்து போவதைப் பார்த்துக் கொண்டு நடந்தான் அவன். அங்கே சாலை ஓரத்திலே வெட்டப்படாமல் விட்டு வைக்கப்பட்டிருந்த பூவரசு இலைகளை அசைத்துக் கொண்டிருந்தது.

பொழுது ஏறிக்கொண்டு வந்தது. முதலில் போய் எஜமானைப் பார்க்க வேண்டும். எப்படி இருக்கிறாரோ. ஒடுங்கித்தான் போயி ருப்பார். அப்போதே அந்த வாட்ட சாட்டமான உடம்பு மெலிந்தது, ஒரு சுற்று வாங்கித்தான் இருந்தார். முனிசிபாலிடி அலுவலகம் அருகிலே சங்கு ஊதும் இடத்தில் சின்னராஜைப் பார்த்தான் வெள்ளையன். கொஞ்சம் தடுமாறிப் பின்பு சுதாரித்துக் கொண்டு அடடடா! என்னாடா வெள்ளையா? என்றான் சின்னராஜ். வெள்ளை யனுக்கு கண்களின் ஓரத்தில் நீர் சேர்ந்து கொண்டது. மக்க மனுசரைப் பார்த்து எவ்வளவு நாளானது! அவனிடம் பீடி வாங்கிப் புகைத்துக் கொண்டே வீட்டார் முதற்கொண்டு எல்லாவற்றையும் விசாரித்தான் வெள்ளையன்.

எங்க எஜமான் நல்லாகீறாரா? வெள்ளையன் கேள்வி யிலே ஆவல் பொங்கியது. சின்னராஜின் முகத்தையே பிரகாச முடன் பார்த்தான்.

தெரியாதா உனுக்கு. ரெண்டு மூணு வருசமாயிடுச்சேடா அவரு காலமாகி.

அய்யோ எஞ்சாமியே தலைமீது கை வைத்துக் கொண்டு சாலை ஓரத்திலேயே அப்படியே உட்கார்ந்துகொண்டான் வெள்ளையன். அவன் மீசையும், கன்னங்களும் அதிர்ந்தன. கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அரண்மனைபோல நின்றிருந்த அவ்வீட்டின் படியேறி, விசாலமான திண்ணைமேல் வாழைக்காய் சீப்புகளையும் தேங்காய் களையும் இறக்கி வைத்தான். வெள்ளையன், மூட்டையிலே கொஞ்சம் காய்கறிகளும் இருந்தன. எந்தெந்த காலத்துக்கு எப்பொருள் கிடைக் கிறதோ அதைத் தவறாமல் எஜமானன் வீட்டுக்கு எடுத்து வந்து விடுவான் வெள்ளையன். எம்மோவ் உள்கதவின் பின்னிருந்து ஆரு ஒணும்? என்றது ஒரு பெண் குரல். நான்தான் வெள்ளையன், எஜமானியம்மா என்றதும் உள்ளுக்கு வா வெள்ளை என்றபடி மறைந்துவிட்டது குரல்.



நடையை ஒட்டியிருக்கும் விசாலமான முன்னறையிலே உட்கார்ந்து கொண்டான். தரை குளுமையுடன் இருந்தது. வேலைக் காரக் கிழவி காபி கொடுத்துவிட்டு, அவன் கொண்டு வந்த பொருட் களை எடுத்துப் போனாள். ஒவ்வோர் முறையும் இப்பெரிய அறையிலே உட்காரும்பொழுது வெள்ளையனுக்கு பிரமிப்புதான். சின்னவயதிலே அந்த வீட்டின் உள்ளே போயிருக்கிறான். இதைவிடவும் பெரிய விசாலமான அறைகள் உண்டு. இப்போதெல்லாம் அவன் உள்ளே போவதில்லை. அவன் மனைவி கிளியம்மாள் மட்டும் நேராக உள்ளே நுழைந்துவிடுவாள். சில சமயங்களில் வீட்டின் புறக்கடைப் பக்கமாக இருக்கும் பெரிய பண்டக சாலைக்கு மட்டும் இவன் போய் வருவதுண்டு. ஜலால் பாயின் வீடு என்றால் ஊரிலே தெரியாதவர்கள் இல்லை. அவருக்கு அவ்வூரிலும், அதைச் சுற்றிலும் பல நிலங்கள் இருந்தன. எதையும் அவர்கள் நேரடியாக உழுவதில்லை. எல்லாமே குத்தகையில்தான் இருந்தன. தலைமுறை யாகக்கூட சிலர் அந்த நிலங்களிலே வெள்ளாமை செய்து வந்தனர். அப்படி ஒரு நிலத்திலேதான் வெள்ளையனும் கூட குத்தகைக்கு இருந்தான். அவன் அப்பன்கூட அதில் உழுது கொண்டிருந்தவன்தான்.

ஜலால்பாய் இலேசாய் இருமிக்கொண்டே உள்ளே வந்தவுடன் வெள்ளையன் விருட்டென்று எழுந்து நின்று கொண்டான். உன்ன நானே வரச் சொல்லலாம்னுட்டு இருந்தேன் வெள்ளை.

“எஜமான்.”

“எனக்கு வயசாயிடுச்சி. மின்ன மாதிரி ஓடியாட முடியல. புள்ளைங்களுக்கும் வெள்ளாமபத்தி ஒண்ணும் தெரியாது. பெரியவன் ஏதோ தோல் பாக்டரி கட்டப் போறானாம். ரோட்டோரமா, தண்ணீ வசதியோட உள்ள நம்ம நெலந்தான் அதுக்கு தோதுபடும்னு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## மனிதனும் பறவையும்

சாலையோரம் கிடக்கிறது
அந்தக் காக்கை
அனாதைப் பிணமாக

சற்று முன்தான்
நிகழ்ந்திருக்க வேண்டும்
அதன் மரணம்
விபத்தா?
எதிரிகளின் தாக்குதலா?
இயற்கை மரணமா?
எதுவென்று தெரியவில்லை.

மரக்கிளைகளில் மதில்சுவர்களில்
கரைந்திரங்கல் தெரிவித்துக்
கலைந்து போயிற்று
உறவுக்கூட்டம்
அனாதையாகக் கிடக்கிறது அது

சற்று முன்னதாக
ஏதேனும் வீட்டு வாசலில்
அல்லது கொல்லை மரக்கிளையில்
உறவின் வருகையறிவித்து
அதற்கான உணவை
யாசித்திருக்கலாம்.

செத்துக்கிடந்த எலியை
இனத்துடன் சேர்ந்து
கொத்திக் குதறியிருக்கலாம்
மைனாக் குருவியை
விரட்டிச் சென்றிருக்கலாம்.

கருங்குருவியால் துரத்தப் பட்டிருக்கலாம்
தன் ஜோடியுடன்
முத்தமிட்டுக் கொஞ்சியிருக்கலாம்
கூடுகட்ட நினைத்திருக்கலாம்
இப்போது அனாதையாய்
இந்தச் சாலையோரம்

சொல்றான். நெல்லு அறுப்பு முடிஞ்சதும் அளவுபோட வருவானுங்க. கூடமாட இருந்துசெய்யீ.

எஜமான். இப்படி திடீர்னு...

ஏன் பதட்டப்படற வெள்ளையா. நீ போ நா பின்னுக்குப் பேசறேன்.

வெள்ளையனுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. பேச்சு எழவில்லை. சரி எஜமான். ஆவட்டும் என்றே அவனால் சொல்ல முடிந்தது. வீட்டுக்கு வந்த பின்பு அவனால் உட்காரவே முடியவில்லை. சாப்பிடவும் பிடிக்காமல், படுக்கவும் கூடாமல், வேலையும் ஓடாமல் தவித்தான். புத்தி தெரிந்த நாள் முதலாய் இந்நிலம்தான் அவன் சொந்தமென இருந்தது. அவனின் அப்பாவுக்குப்பின் இவன் பொறுப்பறிந்து நிலத்தைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டிருந்தார் ஜலால்பாய். இப்போது வெள்ளையனுக்கு நரைகூடப் போட்டுவிட்டது. மரம், செடி என்று பார்த்துப் பார்த்து வளர்த்த நிலம். இனி என்ன ஆகும். இனி இந்த மாவும், பலாவும், தென்னையும் போகும் கதி? பச்சைச் செடிபோல படபடவென பொறிந்து எரிந்தது அவன் வயிறு.

என்னா ஆச்சி உனுக்கு என்றாள் கிளியம்மா.

எஜமான் நெலத்தை உடச் சொல்லிட்டாரு.

நான் கேள்விப்பட்டது சரிதான். நாம்ப என்னா பண்றது. உட்டுட வேண்டியதுதான். இன்னும் மம்புட்டி புடிக்க நீ கொமரனா என்னா. இருந்தவரீக்கும் லாபம்னுட்டு நஸ்ட ஈடு எதனாச்சும் வாங்கினு போயிடலாம்.

வெள்ளையனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை.

அப்புறம் நல்லா வந்துடும் என் வாயில?

எம்மேல என்னாத்துக்கு மொறன்டிக்கிறே. உனுக்குப் புடிச்ச இந்த மண்ணுலயே இருந்து பொறளு.

வெள்ளையனுக்கு இரவில் உறக்கம் வரவில்லை. எண்ணங்கள் அலைமோதின. தெரிந்ததெல்லாம் இந்த ஊரும், இந்த நிலமும், விவசாயமும்தான். இது இல்லையென்றால் என்ன செய்வது. மூன்று பிள்ளைகளையும் எப்படிக் கரையேற்றுவது. ஆண் பிள்ளைகள் இரண்டும் எப்படியோ போகும். ஆனால்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பெண் பிள்ளைய எப்படிக் கரையேற்றுவது. பெரும் காற்று வீசி மரங்களெல்லாம் ஆடின. எதுவோ ஒன்று கதவைத் தட்டி அவனை வெளியே வரச் சொல்வது போலிருந்தது. பட்டியிலிருந்து மாடுகள் அம்மா என்று பரிதாபமாய்க் கத்தின. இவைகளை என்ன செய்வதென்று விளங்காமல் அங்கலாய்த்தான் வெள்ளையன்.

நெல் அறுப்பு முடிந்தபிறகு நிலத்தை அளக்க வந்தார்கள். ஜலால்பாயும் அவரின் மகனும் வந்தபோது வெள்ளையன் குனிந்துநின்று கொண்டான். அளவு முடிந்தபின், எந்தெந்த மரங்களை யெல்லாம் வெட்டவேண்டும் என ஒருவர் சொல்லிக் கொண்டிருந் தார். வடக்கு மூலையில் இருந்து வேலையைத் தொடங்கிவிட்டார் கள். பறவைகளுடன் எப்போதும் ஆர்ப்பாட்டமாய் இருக்கும் வேம்பு முதலில் சாய்ந்தது. படபடவென பறவைகள் சிதறின. ஏக்கமுடன் பார்த்தான் வெள்ளையன் அதை. சாமீ மூலையில் இருக்கிற பச்சமரத்த மட்டும் வெட்ட வேணாம்னு சொல்லுங்க எஜமான் என்று கெஞ்சும் குரலில் சொன்னான் வெள்ளையன். ஜலால் பாயும் அவன் மகனும் உட்கார்ந்திருந்த புங்கமரத்தடியில் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தாள் கிளியம்மாள்.

இந்த நாள் வரைக்கும் இந்த மண்ண நம்பியே இருந்துட்டோம் எஜமான். இத விட்டா வேற வேலையும் தெரியாது. அவரும் வாயில் லாத பூச்சி. இனிமே எம் மூணு புள்ளையங்களையும் கரையேத்தனும். இதுநாள் வரை ஒளச்சதுக்கு ஏதோ நீங்களே பாத்து நஷ்டஈடு மாதிரி ஏதாவது குடுத்தா உங்க கண்ணு பார்வையிலேயே கெடந்து பொளச் சிக்குவோம்.

வெள்ளையன் கிளியம்மாவை அடிக்க ஓடினான்.

உனுக்குப் பயித்தியமா புடுச்சிருச்சி, நஷ்டஈடாம் நஷ்டஈடு. நம்ப ஒடம்ப வளத்ததே இந்த மண்ணுதாண்டி.

எஜமான் உங்ககிட்ட போயி நஷ்ட ஈடு கேட்டா என் வாயி அளுகிடும். அவ தெரியாம பேசிட்டா. அவ சொல்றமாதிரி நானும் கைநீட்டிட்டா, மத்த சம்சாரிங்க என்னை என்னா நெனைப்பாங்க. காறித் துப்ப மாட்டாங்க? இன்னொரு நிலம் கிடைக்குமா உளுரதுக்கு?

வெள்ளையனை வாயடக்கி ஜலால் பாய் பத்தாயிரம் ரூபாய் தந்தார். மாடுகளையும் அவனையே வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டார். எஜமான் என அவன் பேச வாயெடுத்தபோது முந்திக்

மனிதன் இறந்துகிடந்தால்
காவலர் தூக்கிச்செல்வர்
அற்பப் பறவையிது
கவனிப்பாரில்லை

சற்று நேரத்தில்
நாயோ பூனையோ
கவ்விச் செல்லலாம்.
குப்பையோடு குப்பையாய்
மாநகராட்சி வாகனத்தில்
இறுதிப்பயணம் செய்யலாம்.

அற்பப் பறவையன்றோ அது.

**–ராஜமார்த்தாண்டன்**

**ராஜமார்த்தாண்டன்**
(1948 – 2009)



இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் சந்தையடி கிராமத்தில் பிறந்தவர். கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் படிப்பை முடித்தவர். சிறந்த கவிதை விமர்சகர். புதுமைப்பித்தனும் கயிற்றரவும் – ராஜமார்த்தாண்டன் கவிதைகள், புதுக்கவிதை வரலாறு, சுந்தர ராமசாமியின் கவிதைக்கலை போன்ற நூல்களைப் படைத்தவர். இப்பகுதி **ராஜமார்த்தாண்டன் கவிதைகள்** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



கொண்டு பணத்தை கிளியம்மாள் வாங்கிக் கொண்டாள்.

எங்கியும் போகவேணான்டா நீ. இந்த பாக்டரி கட்டட வேலையை பாத்துணு இரு. கிளியம்மாள நம்ம ஊட்டு வேலைக்கு அனுப்பிச்சுடு.

ஜலால் பாய்க்கு எந்த பதிலையும் வெள்ளையனால் சொல்ல முடியவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் இருந்த போது பட்டணத்துல எங்க அண்ண வீட்டுக்குப் போயிடலாம் என்று கிளியம்மாள் சொல்லிவிட்டாள். மாடுகளையும் விற்றுவிட்டாள். ஏய் கிளியம்மா என்று அவன் அதட்டியதை சட்டை செய்ய வில்லை. செத்த சும்மா கெடக்கிறியா? இந்த மாடுங்கள ஓட்டினு போயி பட்டணத்துல உழுவ போறியா? நான் மட்டும் இதெல்லாத் தையும் சாவுறத்துக்கா செய்யிறேன் என்று வாயடைத்து விட்டாள். மூட்டை முடிச்சுகளுடன் கிளியம்மாவுடன் சென்னை போய்விட்டான் வெள்ளையன்.

தோல் பதனிடும் தொழிற்சாலையின் வாசலிலே காத்துக் கொண்டிருந்தான் வெள்ளையன். சின்னராஜ் போய்விட்ட பின்பு எஜமானின் சாவைக் குறித்தே நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த வன் மெதுவாக எழுந்து வந்து சேர்ந்தான் இங்கே. முதலில் அக்கம்பெனியை கண்டுபிடிக்கச் சிரமப்பட்டு விட்டான். அவன் கைபட்டு செழித்துக் குலுங்கிக் கொண்டிருந்த நிலமா இது? எவ்வளவு மாற்றம். சாலையை ஒட்டினாற்போல நிலம் முழுவதையும் வளைத்து பிரம்மாண்டய் சுற்றுச்சுவர் எழுப்பியிருந்தது. ஒரு சின்ன மரம் கூட உள்ளிருந்து எட்டிப் பார்க்கவில்லை. அங்கே கிளம்பி எழும் நாற்றம் அவனால் சகிக்க இயலாததாய் இருந்தது.

யாரு - என்ற காவலாளியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை வெள்ளை யனுக்கு. அவன் வாயிற் கதவோரமாக உட்கார வைக்கப்பட்ட தொழிற்சாலையின் உள்ளிருந்து இயந்திரங்கள் இடைவிடாமல் இயங்கும் ஓசை கேட்டபடியே இருந்தது. விலங்குகளின் தோல்களைப் பதப்படுத்தி நீளநீளமான கொட்டில்களில் தொங்க விட்டிருந்தனர். கவிச்சி நாற்றமும் வேதிப்பொருட் களின் நாற்றமும் குமட்டின. பச்சைத் தோல்களின் குவியல் ஒரு பக்கம் கிடந்ததைக் கண்ட போது தன் மாடுகளின் நினைவும் வந்துபோனது அவனுக்கு. வாசலின் எதிரில் ஒரு கார் வந்து நின்றதும் வெள்ளையன் எழுவதற்கு

## தொகை

இரண்டு சொற்களுக்கு இடையே இயல்பாக அமைய வேண்டிய வேற்றுமை உருபு முதலானவை வெளிப்படையாக அமையாமல் தொக்கி (மறைந்து) வருவது தொகை எனப்படும்.

**1. வேற்றுமைத் தொகை**

இரு சொற்களுக்கிடையில் வேற்றுமை உருபுகள் மறைந்துவரின் வேற்றுமைத் தொகை என்கிறோம்.

வேற்றுமை உருபுகளுக்குப் பின், ஒரு விளக்கச் சொல் வருமேயானால், அதை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என்கிறோம். வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டிருப்பின் வேற்றுமை விரி என்கிறோம்.

***அ) இரண்டாம் வேற்றுமை***

எ.டு. சட்டை தைத்தான் – வேற்றுமைத் தொகை

சட்டையைத் தைத்தான் – வேற்றுமை விரி

மோர்ப்பானை (மோரை உடைய பானை) – வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முயற்சித்தான். யாருய்யா நீ. உசிரெடுக் கிறியே. மொதலாளி காரு வந்தா சொல்றேன் ஒக்கா ருய்யா என்ற காவலாளியின் அதட்டலில் உட்கார்ந்து கொண்டான்.

துப்புக்கெட்ட மனுசா ஒரு எடத்துல ஒழுங்கா நின்னு வேல செய்ய உனக்குத் தருவசி இல்லையா? அவனுங்களும் எத்தினி இடத்துல சேத்து வுடுவானுங்க?

கிளியம்மாள் திட்டத் திட்ட வெள்ளையன் உம்மென இருந்தான். சென்னைக்கு வந்து சில வருடங்கள் ஓடிவிட்டன. பெயருக்குத்தான் சென்னை. ஆனால் இருப்பதோ நகரை விட்டு வெகு தொலைவில். இந்த ஊரின் பெயர்கூட இன்னும் சரியாய்ப் பதியவில்லை வெள்ளையனுக்கு. கிளியம்மாவின் அண்ணன் பிள்ளைகளோ அத்தை, மாமா என்று நன்றாகத்தான் கவனித்துக் கொண்டனர். ஜலால்பாய் தந்த பணத்திலே அண்ணன் மகனுக்கு மகளைக் கொடுத்துச் சிக்கனமாய் முடித்து விட்டாள் கிளியம்மாள். பையன்களுக்கும் கூடக் கல்யாணம் காட்சி என்று ஆகிவிட்டது. வெள்ளையனுக்குத் தான் ஒரு வேலையும் கிட்டாமல் அந்த ஊரும் பொருந்திப் போகாமல் இருந்தது.

முதலில் ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் வெள்ளையன் சேர்த்துவிடப்பட்டான். கத்தியும் கடப்பாரையுமாகப் போய் அந்த வயல்களில் நின்று மரங்களை வெட்டுகிறபோதும் மனை அளவுகள் போட்ட இடங்களில் கற்களை நாட்ட மண்ணைத் தோண்டும்போதும் பழைய நினைவுகள் வெள்ளையனைச் சூழும். தோண்டிப் போட்ட மண் அவன் நிலத்து மண்போலச் சிரிக்கும். ஒவ்வொரு மரம் சாய்க்கும்போதும் வலி. விளைந்து கொண்டோ, இளைப்பாறியபடியோ இருக்கும் இந்நிலங்களில் மனிதக் கூட்டம் வந்துவிடும். அவனுக்கு இவை சகிக்கவில்லை.

பின்பு வேலைக்குப் போனது பூச்சிக்கொல்லி தயாரிக்கும் தொழிற்கூடம் என்பது மெதுவாய்த்தான் அவனுக்கு தெரிய வந்தது. மருந்துகளை கலக்கும்போதும், பிற வேலைகளுக்கும் கையுறை தந்தார்கள். மருந்து

***ஆ) மூன்றாம் வேற்றுமை***

எ.டு. கத்தி குத்தினான் – வேற்றுமைத்தொகை

கத்தியால் குத்தினான் – வேற்றுமை விரி

கதர்ச்சட்டை – வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை(கதரால் நெய்த சட்டை)

***இ) நான்காம் வேற்றுமை***

எ.டு. கூலிப்படை– வேற்றுமைத்தொகை

கூலிக்குப் படை – வேற்றுமை விரி

கோழித்தீவனம் (கோழிக்குப் போடும் தீவனம்) – 4 ஆம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

***ஈ) ஐந்தாம் வேற்றுமை***

எ.டு. மலையருவி – வேற்றுமைத்தொகை

மலையின் வீழ் அருவி – வேற்றுமை விரி

வாய்ச்சொல் (வாயிலிருந்து வரும் சொல்) – 5 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

***உ) ஆறாம் வேற்றுமை***

எ.டு. குருவிக்கூடு– வேற்றுமைத்தொகை

குருவியினது கூடு – வேற்றுமை விரி

– உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை வருவது இல்லை

**ஊ) ஏழாம் வேற்றுமை**

எ.டு. குடிப்பிறந்தார் – வேற்றுமைத்தொகை

குடியின்கண் பிறந்தார் – வேற்றுமை விரி

விழிப்புனல் (விழியின் கண் இருந்து வரும் புனல்) – 7ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

**2) வினைத்தொகை**

காலம் மறைந்து வருகிற பெயரெச்சம் வினைத்தொகையாகும்.

எ.டு. ஓடுகால், ஊறுகாய், சுடுகாடு, தேய்பிறை, வளர்பிறை, மூடுபனி, வெடிகுண்டு, குடிநீர், சுடுசோறு, நடுகல்

ஓடுகால்:

ஓடிய கால் – இறந்தகாலம்

ஓடுகின்ற கால் – நிகழ்காலம்

ஓடும் கால் – எதிர்காலம்

ஆகிய மூன்று காலத்தையும் குறிக்கும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**3) பண்புத்தொகை**

இரு சொற்களுக்கிடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும். முதல் சொல் பண்பைக் குறிப்பதாக இருக்கும். இரண்டாம் சொல் அப்பண்பைப் பெற்ற சொல்லாக இருக்கும்.

எ.டு. வெண்டாமரை, செந்தாமரை, செம்பொன்

இருபெயரொட்டுப் பண்புத்தொகை:

இரு சொற்களில், முதல் சொல் சிறப்புப் பெயராகவும் அடுத்துள்ள சொல் பொதுப் பெயராகவும் இருக்குமாயின் அச்சொல் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

எ.டு. மார்கழித் திங்கள், பசிப்பிணி, குமரிப்பெண்

**4) உவமைத்தொகை**

இரு சொற்களுக்கிடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

எ.டு. குவளைக்கண், தாமரைக்கை

குவளை போன்ற கண் – போல, போன்ற என்ற உவம உருபுகள் மறைந்து வரும்.

உருவகத்தொடர்

உவமையின் தன்மையைப் பொருளின் மேல் ஏற்றி, உவமையைப் பொருளாக்கிக் கூறுவது உருவகத்தொடர் எனப்படும். பொருள் முன்னும் உவமை பின்னும் வரும்.

எ.டு. கண்குவளை, கைத்தாமரை

**5) உம்மைத்தொகை**

இரு சொற்களுக்கிடையில் 'உம்' என்பது மறைந்து வருவது உம்மைத்தொகை எனப்படும்.

எ.டு. வெற்றிலைபாக்கு (வெற்றிலையும் பாக்கும்)

கபில பரணர் (கபிலரும் பரணரும்)

**6) அன்மொழித்தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே வேறு சொற்கள் மறைந்து வருவது அன்மொழித்தொகை எனப்படும்.

நெடி விஷக் கூடத்தில் நிற்பதுபோல மருட்டியது. ஒரு மணி நேரத்துக்குக்கூட ஒரு ரப்பர் உறை தாங்காமல் கிழிந்து போகிறது. இதைத்தெளித்தால் பயிர்கள் என்ன வாகும்... பயிர் நினைப்பு பிடித்து உலுக்கியதும் அடுத்த வேலைக்கு ஓடினான்.

ஒரு பண்ணை வீட்டில் தோட்டக்காரனாக குப்பை கொட்டினான். அனுமதியின்றி புல்லைகூடப் பறிக்கக்கூடாது. கட்டாந்தரை நிலம்; தொட்டிச்செடிகள். வந்துவிட்டான்.

"ஊரு, ஊரு, உங்க ஊருக்கே போய் மவரா சனா பொளச்சிக்கைய்யா" கிளியம்மாள் சொல்லியதே சாக்கு. வண்டி ஏறிவிட்டான் வெள்ளையன்.

நான்கைந்து பீடிகளைப் புகைத்திருப்பான். முதலாளி கார் வந்தது. பல வருடங்களுக்குமுன் குனிந்தது போலவே அனிச்சையாய் அவன் உடல் குனிந்து கொண்டது இப்போதும்.

வணக்கம் வருது சின்னெஜமான். தான் பார்த்து வளர்ந்த பையன் என்னமாய் ஆகிவிட்டான். வெள்ளைய னுக்குப் பெருமிதம் பொங்கியது. காரிலிருந்து இறங்கிய வனுக்கு வெள்ளையன் முகம் பிடிபட நேரமானது.

ஓ... வெள்ளையனா? எப்படி கீற? எங்க ஆளே காணும்?

எம் பொண்டாட்டி பேச்ச கேட்டுனு பட்டணம் போயிட் டேன் எஜமான். அங்க ஒடம்பு தங்கல. ஓங்க நெழல்லயே இருந்திடலாம்னு வந்துட்டேன்.

சட்டைப் பையில் தேடிப் பத்து ரூபாயை நீட்டினான் அவன். வெள்ளையன் அவசரமாய் மறுத்து, எஜமான் ஒரு வேலை என்றான். பவ்யமாய் முதலாளியைப் பின்தொடர்ந்த வனுக்கு கொஞ்ச நேரத்தில் ஒரு எல்பர் வேலை கிடைத்து விட்டது.

சொந்த ஊரிலேயே, புழங்கிக் கொண்டிருந்த மண்ணி லேயே ஒரு வேலை வெள்ளையனுக்கு வாய்த்துவிட்டது. உப்பிலே ஊற வைக்கப்பட்ட தோல் குவியலிலிருந்து சில தோல்களை தூக்கிச் சுமந்து கொண்டு கூன் வளைய



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஓடியவனுக்கு அவனைப் பார்த்து அந்த மண் சிரிப்பதுபோல் தெரிந்தது. உப்பும் வேதிப் பொருட் களும், சுண்ணாம்பும், சாயங்களும் என என்ன வெல்லாமோ கலந்து உருமாறிப்போய் பரிதாபமாய் தெரிந்த அவன் காலடி மண்ணை நினைத்ததும் வெள்ளையனுக்கு கண்ணீர் பொத்துக் கொண்டது.

**– அழகிய பெரியவன்**

1. **வேற்றுமைத்தொகை**: வேற்றுமை உருபு மறைந்து வரும்.
2. **வினைத்தொகை**: காலம் மறைந்து வரும்.
3. **பண்புத்தொகை:** பண்புருபு மறைந்து வரும்.
4. **உவமைத்தொகை:** போன்ற என்பனபோன்ற உவமஉருபு மறைந்து வரும்.
5. **உம்மைத்தொகை:** உம் என்ற சொல் மறைந்து வரும்.
6. **அன்மொழித்தொகை:** ஒன்றுக்கு மேற்பட்ட பல சொற்கள் மறைந்து வரும்.

## அழகிய பெரியவன்



இவரது இயற்பெயர் அரவிந்தன். 1968 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்தில் மேற்கு மலைத்தொடர்கள் சூழ்ந்த பேரணாம்பட்டு என்ற ஊரில் பிறந்தார். இன்றைய முன்னணி எழுத்தாளர்களில் ஒருவர். 'தகப்பன் கொடி' என்ற நாவலுக்கு 2003 ஆம் ஆண்டின் தமிழக அரசின் விருதைப் பெற்றவர். இவரது முதல் கதைத் தொகுப்பாகிய **தீட்டு** என்ற நூலிலிருந்து இச்சிறுகதை எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- காலம் தோறும் தமிழ் இலக்கியங்கள் அடைந்து வரும் மாற்றங்கள் குறித்து ஒரு திறனாய்வுக் கட்டுரை தயார் செய்க.
- சேரத் தமிழ் இதழில் வெளியிடுவதற்காக ஏதேனும் ஒரு சமூகப்பிரச்சினையை முன்வைத்து ஒரு புதுக்கவிதை எழுதுக.
- ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகத் தலித் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன என்பது பற்றிக் குழுவாக விவாதித்துக் குறிப்பு தயார் செய்க.
- சர்வதேசப் பெண்கள் தின விழாவில் உரையாற்றுவதற்காக, பெண்ணியப் பிரச்சினைகள் எனும் தலைப்பில் ஒரு சொற்பொழிவு தயாரிக்க.
- ஏதேனும் ஒரு சமூகப் பிரச்சினையை முன்வத்து உங்கள் வட்டாரத்தில் வழங்கப்படும் மொழிநடையில் ஒரு சிறுகதை எழுதுக.

- தற்குறிப்பேற்ற அணிக்கு விளக்கம் தருக.
- வேற்றுமைத்தொகைக்கு விளக்கம் தருக.
- பண்புத்தொகைக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
- இவ்வலகில் உள்ள பெயரடை, வினை அடைகளைத் தொகுத்து வரிசைப்படுத்துக..
- உவமைக்கும் உருவகத்திற்கும் உள்ள வேறுபாட்டினைக் குறிப்பிடுக.
- ஏதேனும் ஓர் உவமையைத் தந்து உருவகமாக மாற்றுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## அலகு 4

# வாழ்வு நலமாக...

மனிதரால் படைக்கப்படாத பொருட்களும் உயிர்களும் இயற்கை எனப் படும். இயற்கையை உற்றுநோக்கிச் சுவைப்போருக்கே அதன் நுண்ணிய பேராற்றல் புலப்படும். இயற்கையின் பேராற்றலை உணராத மனிதர்கள் அதனை அழித்து வருகின்றனர். கவின்மிக்க இயற்கை, மனிதரின் முறையற்ற செயல்பாடுகளால் வறட்சி அடைவதோடு அழியவும் செய்கிறது. எனவே எதிர்பாராத இயற்கைச் சீற்றங்கள் உலகில் நிகழ்கின்றன. இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு நலிந்துவரும் சூழலில் இயற்கை அழகை நுகர்வதுடன் இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மிகமுக்கியம். அதற்கேற்ப இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

### கற்றல் அடைவுகள்

- இயற்கையைப் பாதுகாக்கும் நடத்தைகளை மேற்கொள்ளல்.
- சுற்றுப்புற மாசடைதலுக்குரிய காரணங்களை எடுத்துரைத்தல்.
- மொழிநடை அடிப்படையில் படைப்புகளை ஒப்பிடுதல்.
- காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் வருணனை செய்தல்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# தமிழ் இலக்கியம் காட்டும் இயற்கை



கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பே இயற்கையழகு. இவ்வியற்கை தரும் காட்சியின்பம் கண்ணையும் மனத்தையும் கவரும் மாட்சிமிக்க இன்பம். இயற்கைக் காட்சியை முளையிளஞ் செஞ்ஞாயிற்றின் கிளர் ஒளியிலும், வெண்மதியின் தண்ணிலவிலும், அலைவீசி ஆடிவரும் ஆற்றிலும், நுரை எழுப்பி ஓடிவிழும் மலையருவியிலும் காணலாம். நீண்டு அடர்ந்த காட்டிலும் புதரிடை நிமிர்ந்து நிற்கும் மரக்கோட்டிலும், பாடிவரும் காற்றிலும், ஆடிவரும் கடலலையிலும் காணலாம். பூத்திருக்கும் வண்ணப் பூக்களிலும், தேன் உண்ணக் காத்திருக்கும் வரிவண்டிலும், மின்னொளிக் காட்டிப் பறக்கும் வண்ணப்பூச்சியிலும், மண்ணுள்ளிருந்து தொண்டு செய்யும் எண்ணற்ற புழுவிலும் காணலாம்.

இயற்கை என்ற சொல்லிற்கு ஒரு குறிப்பிட்ட விளக்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பலரும் பல்வேறு பொருள்களைச் சொல்லுகின்றனர். பழந்தமிழ் நூல்களாகிய தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும், இயற்கை என்ற சொல் "இயல்பு" என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்ப் பேரகராதி, சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை செயற்கைக்கு எதிரானது என்ற பல பொருள்களைத் தருகின்றது. இறைவனின் படைப்பே இயற்கை. மனிதனால் உருவாக்கப் படாத, உருவாக்க இயலாத அனைத்தையும் இயற்கை என்று சொல்லலாம்.



ஐம்பூதங்கள் என்று சொல்லப்படுகின்ற நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவை கலந்த ஒரு மயக்கமே இயற்கை என்று கொள்ளப்படுகிறது. ஆனால் அறிஞர் பிளேட்டோ ஆகாயம் ஒழிய ஏனைய நான்கினையுமே இயற்கை என்று பேசுகிறார். ஐம்பூதங்களுடன் பொருளும் சேர்ந்தாலே இயற்கை என்ற சொல்லிற்கு முழு உருவம் கிடைக்க முடியும் என்கிறார் வைட்பீல்டு. இவரது கருத்துப் படி மனிதனும் இயற்கையினுள் அடங்குவான். ஆனால் தனிநாயக அடிகளார் இதனை மறுக்கிறார். "மனிதனோ அவன் படைப்போ அல்ல இயற்கை" என்பது அவர் கருத்து.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



இயற்கை தனி ஆற்றலுடையது. காலச் சுழற்சியில் அதன் ஆற்றல் பொலிகிறது. வளமும் வளர்ச்சியும் ஆற்றலும் மிக்க இவ்வியற்கையின் உயிர்த்துடிப்பால் அதன் வடிவமும் வண்ணமும் மாறிக்கொண்டே இருக் கின்றன என்று 'பரிபாடலில் இயற்கை' என்ற நூல் குறிப் பிடுகின்றது. இதனால் இவ்வியற்கையை வாழ்க்கை யைப் போன்று வடிவற்றது என்றும் கூறுவார்கள்.

மனிதன் இயற்கையைக் காணும்போது அதனைத் தன்னை மறந்து இரசிக்கிறான். அந்த இரசிப்பின் கார ணமாக அவன் தன் கவலைகளை மறந்து மன அமைதி பெறுகிறான். மனிதனின் அனைத்து உணர்வுகளையும் தோற்றுவிக்கும் ஒரு கருவியாக விளங்குகின்றது இயற் கை. இயற்கை மாபெரும் கவிஞர்களை உருவாக்குகிறது. அவர்கள் தங்கள் உணர்வுகளையும் விருப்புக்களையும் அனு பவத்தையும் இயற்கை வாயிலாக வெளிப்படுத்துகின்றனர்.

இயற்கையை இறைவனது ஆடையாகக் காண்கிறார். 'கெதெ' என்பவர். இயற்கையை ஆடையாக நம் புரட்சிக்கவி ஞர் பாரதிதாசனும் குறிப்பிடுகின்றார்.

ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர், வேட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் போன்ற கவிஞர்கள் ஒவ்வொரு வகையில் இயற்கையைப் பயன்படுத்தியுள்ளதைக் காண்கிறோம். தமிழ்க் கவிஞர்கள் இயற் கையை ஐந்துவகைகளில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்.




1. இயற்கை அளிக்கும் காட்சியில் ஈடுபட்டுச் சித்திரிப்பது.
2. இயற்கையை உவமையில் பயன்படுத்துவது.
3. இயற்கையைப் பயன்படுத்திக் குறிப்பாகக் கருத்தைத் தெரிவிப்பது.
4. இயற்கையை மானிட வாழ்வுடன் இணைத்துக் காட்டுவது.
5. இயற்கையின் வாயிலாக அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் தெரிவிப்பது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



தமிழ் இலக்கிய வானத்தில் மங்காது மறையாது திகழ்ந்து வரும் கம்பனது இராமகாதையில் இயற்கைக் காட்சிகள் தனித்துவத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. அயோத்தியா காண்டத்தில் இராமபிரான் சீதைக்குக் காட்டும் காட்சி இயற்கை வனப்பை வெளிப்படுத்துவதாக அமைகிறது. காட்டிலே ஆண்யானையும் பெண்யானையும் செல்கின்றன. பெண்யானை சூலுற்றிருக்கிறது. சூலுற்றிருக்கும் அப்பிடிக்குத் தேன் மிகவும் விருப்பமானது. பிடியின் மீது அன்பு கொண்ட ஆண் யானை, வழியில் உள்ள குகையில் தேன்கூடு இருக்கக் காண்கிறது. தேன்கூட்டிற்கு நேராகத் துதிக்கையை நீட்டி விட்டால் தேனீக்கள் கடுமையாகக் கொட்டி வேதனைப்படுத்திவிடும் என்பது ஆண்யானைக்குத் தெரியும். ஆதலால், அது தன் அருகிருக்கும் மரத்தினின்று சிறுகிளையை ஒடித்து அதன் தழையால் தேனீக்களை அடித்துத் தட்டி ஓட்டித் தேன் கூட்டை எடுத்துப் பிழிந்து பிடியின் வாயில் ஊட்டுகிறது. இக்காட்சி இயற்கையளிக்கும் ஒரு சிறந்த விருந்து.

சமயப் பாடல்களிலும் இயற்கைக்கெனத் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவசமயக் குரவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர் திருவையாற்றின் காட்சியை,

“மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாய செழுங்கமல
மொட்டலரும் திருவையாறே”

என்றும், திருக்குற்றாலத்தின் இயற்கை நலத்தை,

“மலையார் சாரல் மகவுடன் வந்தமட மந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்”

என்றும் தமது தேவாரத் திருப்பாக்களில் சொல்லோவியம் தீட்டியிருப்பதைக் காணலாம்.



இனிக் கவிஞர்கள் இயற்கையை உவமையாகப் பயன்படுத்தியிருப்பதைப் பார்ப்போம். சங்க இலக்கியம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## நிலவே!

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்
கோல முழுதும் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்!
சொக்க வெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!
காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!
அந்தி யிருளாற் கருகும் உலகு கண்டேன்!
அவ்வாறே வான் கண்டேன்; திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள் தான் சிரித்ததுண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளி முத்தோ நிலவே நீ தான்!
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ!"

– பாரதிதாசன்

### பாரதிதாசன் (1891–1964)



புதுச்சேரியில் பிறந்தவர். கனக சுப்புரத்தினம் என்ற இயற் பெயர் கொண்டவர். பாரதி யார்மீதுகொண்ட பற்றினால் தன் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டவர். இவரது கவிதைகள் பாரதிதாசன் படைப்புகள் என்ற பெயரில் தொகுக்கப் பட்டுள்ளன. இவரது 'அழகின் சிரிப்பு' எனும் கவிதைநூல் இயற்கை குறித்த தனிச்சிறந்த நூலாகும். இவர் தமிழ்ப்பற்று, தமிழியக்கம், சமுதாய மறுமலர்ச்சி, பகுத்தறிவுக் கண்ணோட்டம், இந்தி எதிர்ப்பு, பெண் விடுதலை, விதவைமறுமணம், தொழிலாளர் இயக்கம் முதலிய புரட்சிகரமான சிந்தனைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். இவரது பிசிராந்தை யார் என்ற நாடகநூல் சாகித்திய அகாடமி பரிசு பெற்றது.

இத்தகைய உவமைகளை எண்ணற்ற முறையில் நமக்கு எடுத்தியம்புகின்றது.

நக்கீரர் தனது திருமுருகாற்றுப்படையில் முருகனது திருமேனியின் ஒளியை வர்ணிக்கும்போது, அதனை

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங்கு அவிர்ஒளி"

என்று காலையில் கடலிற்காணும் இளஞ் செஞ்ஞா யிற்றை உவமைகாட்டிப் புலப்படுத்தினார்.

இலக்கியங்களில் இயற்கையைப் பயன்படுத்திக் கருத்தைக் குறிப்பாகத் தெரிவிப்பது மற்றொரு வகை யாகும். இவ்வாறு செய்வதில் கவிஞர் இடத்துக்கு ஏற்றவாறு கருத்தைக் குறிப்பிட வாய்ப்புண்டாகிறது. கருத்தைக் குறிப்பாக உணர்த்தும் தன்மையை, உள்ளுறை என்றும் சொல்லுவர். அகத்திணை இலக் கியங்களில் இம்முறை அமையும். "தலைவனே நீ நள்ளிரவில் வந்து தலைவியைக் காணாதே. உன் உயி ருக்குத் தீங்குண்டானால் தலைவி இறந்துபடுவாள்" என்னும் குறிப்பமைப்புடன் இயற்கையை வர்ணிக்கும் வகையில், ஒரு குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

நான்காவது வகை, இயற்கையை மானிட வாழ்வு டன் இணைத்துக் கூறுவது. இந்த முறையில் அமை கின்ற சங்கப்பாடல்கள் பல. கவிஞர்கள் நீதியைக் கூறு வதற்கும் அரிய உண்மைகளைப் புகட்டுவதற்கும் இயற் கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இவ்வகை யில் நம் தமிழ்க் கவிஞர்கள் தலைசிறந்து விளங்கு கிறார் கள். செந்தமிழ்க் காப்பியமான சிந்தாமணியை இயற் றிய திருத்தக்கத் தேவர், பின் வந்தவர்களுக்குக் கலங் கரை விளக்கமாய் இலங்கியவர். அவர் நெற்கதிர் தோன் றித் தலைநிமர்ந்து நிற்பதையும் அது முற்றித் தலை சாய்ந்திருப்பதையும் வருணிக்க விரும்பி,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"சொல்லருஞ்சூற் பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித்தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

என்று பாடினார். இப்பாடலில் அற்பர்கள் செருக்கால் தலைநிமர்ந்து இருப்பதுபோல் கதிர்கள் நிமிர்ந்திருந்தன என்றும், கல்வியில் தேர்ந்து ஆன்றவிந்தடங்கிய சான்றோர் போல் அக்கதிர்கள் முற்றியபின் வணங்கிக் கிடந்தன என்றும் கூறி மக்களுக்கு நீதியைப் புகட்டியுள்ளார்.

பண்டைத் தமிழர்களது வாழ்வு இயற்கை யோடு நெருங்கிய தொடர்புடையதாக அமைந்தி ருந்தது. அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் இயற்கையோடு பின்னிப் பிணைந்து காணப்பட்டது. அவர்கள் வாழ்ந்திருந்த நிலப்பிரி வுகளும் இயற்கையின் அடிப்படையில் எழுந்த வையே. இயற்கையைப் புலவர்கள் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். சங்க இலக்கியங்களில் அமைந்ததைவிட மிகுதி யாகப் பிற்கால இலக்கியங்களில் இயற்கை வழங்கி வந்துள்ளது.

சங்க இலக்கியத்தில் இயற்கை, பாடற் பின் னணியாக இடம் பெற்றதோடு உள்ளுறைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. உவமை வாயிலாகவும் இயற் கைப் பகுதிகள் பல கையாளப்பெற்றன. சங்க மர பிற்கே உரிய, இயற்கைப் பொருட்களை அமைத் துப் பேசும் பண்பு நிலையிலும் இயற்கை அங்குக் கையாளப்பட்டது. இம்முறைப்படி சிலம்பிலும் கையாளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ வடிகள் படைத்துள்ள "அந்திமாலைச் சிறப்பு செய்காதை" இயற்கை வருணனையின் உன்னத நிலையை உறுதிப்படுத்துகிறது. வளம் பாடுவதில் கம்பனுக்கு இணையாவோர் வேறு யாரும் இல்லை யென்பர்.

## காமர் மந்தி

கருங்கட் தாக்கலை பெரும் பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக காமர் மந்தி,
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே

குறுந்தொகை: 69

– கடுந்தோட் கரவீரனார்

## தூண்டில்

சிலம்பின் வெதிரத்து கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென இலஞ்சி
மீனெறி தூண்டிலின் நிவக்குநாடன்
உற்றோர் மறவா நோய் தந்து
கண்டோர் தண்டா நலங்கொண்டனனே!

ஐங்குறுநூறு: 278



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதோடு தொடர்புடைய பிறிதொரு பொருளைக் குறித்து வருவது ஆகுபெயராகும்.

### பொருளாகுபெயர், முதலாகுபெயர்

"தாமரை பூத்தது" இத்தொடரிலுள்ள தாமரை என்ற சொல், தண்டு முதலானவற்றைக் குறிக்காமல் தாமரை மலரை மட்டுமே குறிக்கிறது. எனவே தாமரை என்பது முதலாகுபெயர்.

### இடவாகுபெயர்

ஊர் சிரித்தது. ஊர் என்பது இடத்தைக் குறிக்காமல் ஊரிலுள்ள மக்களைக் குறிப்பதால் இடவாகு பெயராயிற்று.

### காலவாகுபெயர்

கார் அறுத்தான். இச்சொல்லில் கார் என்பது காலப்பெயர். கார் காலத்தைக் குறிக்காமல் கார் காலத்தில் விளைந்த நெல்லைக் குறிப்பதால் காலவாகுபெயராகும்.

### சினையாகுபெயர்

வெற்றிலை நட்டான். வெற்றிலை என்னும் சொல் இலையைக் குறிக்காமல் அதன் முதற்பொருளாகிய கொடியை உணர்த்தியது. எனவே இது சினையாகுபெயராகும்.

### பண்பாகுபெயர்

வெள்ளை அடித்தான். வெள்ளை என்னும் பண்பின் பெயர், அந்நிறத்தையுடைய சுண்ணாம்பைக் குறிப்பதால் பண்பாகு பெயராயிற்று.

### தொழிலாகுபெயர்

வற்றல் உண்டான். வற்றல் என்ற தொழிற்பெயர் வற்றுதல் அடைந்த பொருளாகிய உணவைக் குறிப்பதால் தொழிலாகுபெயராயிற்று.

"தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந்தாங்கக்
கொண்டல்கள் முழவினேங்கக் குவளை கண்
விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ"

இப்பாடல் கம்பனுக்கு இயற்கையின் மீதிருந்த ஈடுபாட்டை விளக்கவல்லதாக அமைந்துள்ளது.

இறையோடு இயற்கையைத் தொடர்புபடுத்திப் பாடுதல் பக்திக் காலத்தில் நிலவிய ஒன்று. இயற்கை வழியாக இறைவனை வழிபடவும் செய்தனர். மாணிக்கவாசகர், இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் சக்தியும் சிவமும் நிறைந்து நிற்பதைக் கண்டார். ஆண்டாளது திருப்பாவைப் பாடல்களிலும் இயற்கை வர்ணனைக்குப் பஞ்சமேயில்லை.

பிற்காலத்தில் இயற்கையை வரிவடிவமாகப் புனைந்தளித்தவர்களில் பாரதியாரும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவந்த பாரதிதாசனும் அவர்களுக்கு ஈடுகொடுத்துப் பாடியுள்ளார். அவரது அழகின் சிரிப்பு, இயற்கைக் காட்சிகளுக்கே ஓர் இருப்பிடமாக விளங்குகின்றது.

என்றும் மாறாத அழியாத இயற்கையைப் படைக்கும் நிலையில் பல மாறுபாடுகள் அமைகின்றன. இக்காலத்தில் இயற்கையை, ஆங்கிலக் கவிஞர்களைப் போல், மறுமலர்ச்சிக் கவிஞர்களும் தங்கள் பாடல்களில் இயற்றித் தமிழன்னைக்கு நல்லணி பூட்டி வருகிறார்கள். இயற்கையைப் பாடுகின்ற தன்மை, காலத்திற்குக் காலம், இயற்கை வகை, பொருள், இவற்றிற்கு ஏற்றமுறையில் மாறுபட்டுக் கொண்டே செல்லுகிறது.

**– மு. செ. ஆயிஷா பேகம்**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## செயல்பாடுகள்

- ‘இயற்கை நலனே! மனித நலன்!’ எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க.
- சங்ககால மக்களின் வாழ்வு இயற்கையோடு இயைந்த வாழ்வு எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவதற்கு உரிய உரைக் குறிப்புகளைக் குழுவாகக் கலந்துரையாடித் தயார்செய்க.
- பழந்தமிழரின் திணை அடிப்படையிலான பாகுபாட்டைச் சூழலோடு ஒப்பிட்டுக் குறிப்புகள் தயாரிக்க.
- இயற்கை உள்ளுறையாக அமைந்து விளக்கம் தருவதைச் சங்கப்பாடல் வழிநின்று விளக்குக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# புனலும் மணலும்

இடவப்பாதி மழைக்காலம்.

கிழக்கு மலைகளின் சரிவுகளில் விடாது கொட்டிக் கொண்டிருக்கும் மழை. கருக்கொண்டு, இருண்டு, திரண்டு ஏறிவரும் கருமேகக் கூட்டம் கணநேரத்தில் மலைமுகட்டில் உதிர்ந்து, சோவென்று கொட்டி அதிருகிறது.

மூக்குன்னி மலைச்சரிவின் கண்ணிற்குத் தெரியாத ஏதோ பள்ளத்திலிருந்து கோட்டை ஆறு, மலை வெள்ளத்தில் நுரைத்துச் சிலிர்த்து, இறக்கத்தில் வேகமாகக் கொட்டி, சமவெளியில் இரைத்துக் கொண்டு ஓடி வருகிறது.

மலை அடிவாரக் குற்றிக் காடுகளிடையே, வேய் மூங்கில் புதர்களையும், முனம்புல் கூட்டத்தையும் தாண்டி வெள்ளம், நுரை சிலிர்த்து ஓடி வரும்போது, அங்கிங்கான நாட்டுப் புறங்களில் செம்மண் திட்டுகளையும், சரல்மண் பகுதிகளையும் கரைத்து, தவழ்ந்து வந்து ஊர்களை வளமுள்ளதாக்குகிறது.

கோட்டையாறு, மழையின் வெள்ள வேகத்தில் தவழ்ந்து தவழ்ந்து ஓடையாகி, சிற்றாறாகி, புளிய மரங்களும் காஞ்சிரவும் மஞ்சனத்தியும் பெருமரங்களுமாக அடர்ந்த குண்டன் பாகம் எனும் ஏலாவெளி ஊரில் வரும்போது, பருவமடைந்த நங்கை போல ஆறு என்ற முழுமையை அடைகிறது.



குண்டன்பாகம் நாட்டு வெளியில் வெறும் மரச்சீனிக் கிழங்குத் தோட்டங்கள், செம்மண் வெளித்திட்டுகள், பச்சைக் காடுகள் நிறைந்து கிடப்பதனால் நெல் வயல்களே இல்லை. வேரில் காய் தள்ளிய பலா மரங்களும் கொத்தாகக் காய்கள் காய்க்கும் மாமரங்களும் கமுக மரக்கூட்டமும் ஆற்றின் வளத்தில் செழித்துக் கிடக்கின்றன. வெறும் செம்மண் வெள்ளமாக ஓடிவரும் ஆற்றின் கன்னித் தன்மை குண்டான் கடவில் வரும்போது வேலி கட்டி நிறுத்தப்படுகிறது. பக்கவாட்டில் குலசேகரம், கொன்னி, ஊர்களின் வயல்களுக்கு ஆற்று வண்டலும் வெள்ளமும் அத்தியாவசியமாகி



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

விடுகின்றன. அதன் பயனாக ஆற்றில் துள்ளலுக்கு மருதன்குழிப் பாலம் அணை கட்டுகிறது. ஓடி வந்த வேகத்தையெல்லாம் சீப்பு கட்டிய அணைக்குழியில் நிறைத்துவிட்டு இரும்புத் தடுப்புகளின் மேல் பொங்கிய ஆறு அய்யோவென்று அருவியாகக் கொட்டு கிறது.

கீழ்வெளிப் பள்ளமெங்கும், குட்டி யானைகள் போலப் பர விக் கிடக்கும் பாறைகளில் முட்டி மோதிக் கொண்டு நுரை சிரித்த வாறு ஆறு பின்னும் ஓடுகிறது. ஒரு மைல் தொலைவில் ஜகதி வரையில் அமைதியாக வளைந்து ஒழுகி, பாறைச்சிறை எனு மிடத்தில் வந்தவுடன், வில்வட்டமாக ஒருமுறை சுழன்று, பிறகு நெட்டுக்கு ஓடி வருகிறது.

ஆற்றின் இத்தனை தூரப் பயணத்தில் மருதன்குழி அணைவட்டத்தைவிடப் பாறைச் சிறை, வில்வட்ட சந்தி முக்கியத் துவம் பெறுகிறது. எவ்வளவு மனோகரமான ஆற்றின் சுற்றம்! அதிக ஆழமில்லாமல், அலை ஓய்ந்த கடல் வெளிபோல, இருமருங்கும் சிமிண்டு கரைகட்டி வண்ணான் சலவைத் துறை. கரை வெளியில், நெடுங்கண், அயணி மரங்களும் தூங்கு மூஞ்சி பச்சை மரங்களும் தோகையாக வளர்ந்த மஞ்சள் மூங்கில் கூட்டமும் அங்கிங்காக முளைத்த ரத்தப்பூ கொத்துக் காட்டும் தெற்றிப்பூச் செடிகளும் கீழ மேட்டில் ஓலை வீடுகளாக வண்ணார் குடிசைகளும், குடியானவர் வீடுகளும் ஒற்றை வீட்டு அம்பலமாக முடிப்புரை தேவி கோயிலும் கோயில் பக்கவாட்டில் கரும்பு வயல்களும் சர்க்கரை வள்ளிக் கிழங்கு வயல்களுமாகப் பாறைச்சிறை ஆற்றுப்படுகை அழகுக் கோலம் பூண்டிருக்கிறது.

வண்ணார் படித்துறையில் மழைக்கால கலக்கில் வெள்ளம் இல்லாதபோது, சந்தைமேடு போலச் சலவையாளர்கள், பெண்டு களும் பிள்ளைகளுமாகத் திமிலோகப்படும், ஈரமில்லாத கரை மேட்டில் விரித்திருக்கும் வெள்ளைத்துணியில், துவைத்து முறுக்கிய உருப்படிகளை அச்சோ சத்தத்துடன் வீசியெறிவார்கள். அந்த உருப்படிக் குவியலின் ஓரத்தில் இன்னொரு சலவையாளர் குடும்பத் தினர், குண்டானும் சோற்று வாளியுமாக அமர்ந்திருந்து சோறு தின்பார்கள். படித்துறையில் குளித்துக் கும்மாளமிட வரும் வாண்டுகள், குடும்பத்தின் திறந்த வெளி விருந்தை எட்டிப் பார்த் துக்கொண்டு நிற்கும், அட போங்க, சின்ன அய்யாமாருகளே... போய்க் குளிங்க. நாங்க சித்த கஞ்சியைக் குடிச்சிக்கிடட்டும். வேல கெடக்கு... என்று, பாம்படம் கன்னங்களில் மோத, யாராவது வண்

## பெயரடை

ஒரு பெயரைச் சிறப்பித்து வரும் சொல் பெயரடை எனப்படும்.

எ.டு. **நல்ல** பையன்,
**அழகு** மலர்,
**இனிய** மொழி

## வினையடை

ஒரு வினையைச் சிறப்பித்து வரும் சொல் வினையடை எனப்படும்.

எ.டு. **வேகமாக** ஓடினான்,
**நன்றாகப்** பாடினான்,
**இயல்பாகப்** பேசினார்

## உருவகம்

உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாதவாறு பொருளினிடத்து உவமையின் தன்மையை ஏற்றிப் பொருளை உவமையாகவே உருவகிப்பது உருவகம்.

எ.டு. **மதிமுகம்**

மதி போன்ற முகம் – உவமை

**முகமதி**

முகமாகிய மதி – உருவகம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ணாத்திக் கிழவி விரட்டுவாள். புல்மேட்டில் கழுதைகள் அழுக்குச் சுமைகளை இறக்கிவிட்டு, மிடாமேளத்தில் சங்கீதக் கத்தலாக அரற்றிக் கொண்டிருக்கும்.

குளியல் துறையில், வாண்டுகள் கிளைவெட்டிய வாழைத் தண்டுகளை மிதப்பன் படகுகளாக இட்டு வள்ளமேறி விளையாட்டு நடத்தும் களேபரம் நுரைகட்டும். பாறைகளின் மேலிருந்து ஆற்றுவெள்ளத்தில் கரணமடித்துக் குதித்து, நீச்சலடித்து மறிவதில் பிள்ளைகளின் குஷி அலாதி. வெயில் காலத்து நீரில்லாத ஆற்றில், தண்ணீரைக் கலக்கியடித்துக் குதிக்கும் சிறுவர்களைச் சலவை ஆசாமிகள் வசவுமொழிகளால் விரட்டுவார்கள். அட, எங்க பொழைப்பிலெ மண்ணைப் போடாதீங்க ராசாமாருகளே. தண்ணி கலங்குது, சொல்லக் கேக்குதா? என்று சினப்படுவார்கள்.

பாறைச்சிறை வெளியின் களேபரக் கூத்தை வணங்கிவிட்டு ஆறு நெட்டோட்டமாக இன்னும் இரண்டு கல் ஓடி, தொலைவில் வரும்போதே பெரிய சாலைக் கடவு கண்ணிற்கெட்டுகிறது.



பெரியசாலைக் கடவு ஆற்றின் முகத்திற்கு மூக்கணி போன்றது. கடவிற்கு மேலே கப்பிமண் பாதையேறி தெற்குப் பகுதியில், சவிஸ்தாரமாக விரித்துக் கிடப்பது சின்னவூர் சுடுகாடு. நகரத்தின் நாலைந்து மைல் சுற்றுவட்டத்து சாக்காலை அடக்கமெல்லாம் இங்கேதான். கருமாதி காரியங்களுக்கும், தலை முழுக்கிற்கும் பெரியசாலைக் கடவுத் துறை வெள்ளமிட்டிருக்கிறது. ஆறு இந்தப் பகுதியில் நீண்டு பரந்த குளிப்புத் துறையுடன் அமைந்திருக்கிறது. பெரியசாலை அக்ரஹார பிராமணர்களுக்கு ஆறு ஒரு வரப்பிரசாதம். விடியற்காலை மூன்று மணியிலிருந்தே படித்துறை களைகட்டிவிடும். மேட்டுவெளியில் சிவன்கோவில் இருப்பது அத்தனைக்கும் பெரிய முத்திரை. விடியாக் கருக்கலில் பெண்கள் துறைக்குக் குளிக்க வரும் நாரீமணிகளை, மீசை வைத்த நாயன்மார்கள் கணக்குப் பண்ண வருவதும் உண்டு. என்ன இருந்தாலும் ஆற்றுத் துறையில் பிராமணருக்கு மற்ற ஜாதியினருக்கும் சண்டை நமைச்சல் இல்லை. ஆறு பேதமற்றதாயிற்றே!

பெரியசாலைக் கடவை நிறைத்துவிட்டு பிரியாவிடைபெற்று வரும் மணப்பெண்ணைப் போல, ஆறு நகர்ந்து தவழ்ந்து வரு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கிறது. கப்பி ரோடு கிள்ளிப்பாலத்தைத் தாண்டி புத்தன்கோட்டையின் வெள்ளைப் பாறைகளின் ஊடே புகுந்து வல்லமேட்டிற்கு வரும்போது ஆற்றுக்குத் தலைவட்டத்திலிருந்து துணை வந்து கலக்கிறது. பெருமனை ஆறு. வல்லமேட்டில்தான் ஆற்றின் சவிஸ்தாரமான சரித்திர வாழ்க்கை நடைபெறுகிறது.

**- ஆ. மாதவன்**

### ஆ. மாதவன்

இவர் திருவனந்தபுரத்தில் 1934 இல் பிறந்தவர். குறிப்பிடத்தக்க சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர். இவர் மலையாள மொழியும் நன்கறிந்தவர். நீண்ட வருடங்களாகக் கதை எழுதி வருபவர். மண் மணம் கமழும் கதைகள் இவருடையவை. திருவனந்தபுரம் சாலைக் கடைத்தெருவை மையமாகக்கொண்டு இவர் **கடைத்தெருக் கதைகள்** என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். **மோகபல்லவி, ஆனைச் சந்தம், மாதவன் கதைகள், அரேபியக் குதிரை** போன்றவை இவரது பிற சிறுகதைத் தொகுப்புகளாகும். சிறுகதையைப் போன்று நாவலிலும் சாதனை படைத்துள்ளார். **கிருஷ்ணப் பருந்து** முக்கியமான ஒரு நாவல். இவரது **புனலும் மணலும்** என்ற நாவலிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.



## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை மையப்படுத்தி இயற்கை வருணனை தயார் செய்க.
- பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்களின் இயற்கை பற்றிய கவிதைகளைத் தொகுக்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# மூன்றாம் உலகப்போர்

அன்றொரு நாள்...

அதிகாலை அழகை வழிபட வந்தவள் கடற்கரையிலேயே உறைந்து போனாள் கற்சிலையாக.

நேற்றுப் பார்த்த மணல் வெளியா இது? நிறம் மாறி இருந் தது. காற்றின் பாடலுக்கு நடனமாடிய நாணற்புதரா அது...? தரை யோடு தரையாய்க் கிடந்தது. வெள்ளிமணல் வெளியெங்கும் தாறுமாறாய்த் தார் ஊற்றியது போல் ஒரு கரும்படலம்.

இது என்ன இயற்கைக்குப் புறம்பாய்...? இது மெக்சிகோ வளைகுடாதானா? லூசியானா கடற்கரைதானா? இடம்மாறி வந்து விட்டேனா? தலை சுற்றியது அவளுக்கு.



கடலோசையில் கேட்டது ஓர் அவலத்தின் சுரம்; நிமிர்ந்து நின்றவள் திடுக்கிட்டாள். அலை யின் நிறம் வெள்ளை அல்லவா? பிறகு ஏன் இரு ளின் திரவ வடிவமாய் அலை பொங்கி அடிக்கி றது கருங்கருப்பாய்?

பயந்து நடந்தாள்; காலணிகள் தாண்டிக் கால் களில் ஏறியது ஏதோ பிசுக்கு. ஒரு கால் ஊன்றி மறுகால் உதறினாள் எமிலி. காலணி கழன்றதன் றிக் கறுப்புச் சாயம் போகவில்லை.

அண்ணாந்து பார்த்தாள். காலைப் பறவை ஏதும் காண வில்லை வானத்தில். இன்னும் தரையிறங்கவில்லை வெளிச் சத்தின் விழுதுகள். தூரக்கடலில் தொடுவானத்தில் செம்பிழம்பு தெரிந்தது. கடல் எரியுமா? எரிகிறதே...

கடல்பரப்பில் சிவந்து எழுந்து நின்றது தீத்தூண் ஒன்று. அதை மண்டி நின்றது புகை மண்டலம். எரிமலை வெடித்திருக் குமோ கடலுக்குள்...?

அவள் உடல் நடுங்கியது. தங்கச் சாயமிட்ட பட்டு நூல் கற்றைகளாய் அவள் வெள்ளிக் கழுத்தில் பொன்முடிகள் படபடத்தன; காற்றில் ஆடியது காது வளையம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வெளிச்சம் பரவிப் பரவித் தூரத்து இருளைத் துடைத்துக் கொண்டே வந்தது. லூசியானா கடற்கரையின் பதினாறுமைல் நீளத் திற்கும் ஒரே கறுப்புக் காட்சிதானா? ஏதோ ஒன்று நேர்ந்திருக்கிறது பூமியின் இருப்புக்கு விரோதமாய்.

தூரத்தில் என்னவோ குவியல் குவியலாய்..? ஓடிப்போய்ப் பார்த்தாள்.

“ஓ ஜீசஸ்!”

கொத்துக் கொத்தாய்ச் செத்துக் கிடந்தன பெலிகான் பறவை கள். அவற்றின் ‘பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன’ கூரிய அலகுகள் பல திறந்தே கிடந்தன; சில சிறகுகள் காட்டின ஜீவ னின் கடைசி அசைவுகளை.



இன்னொரு பக்கம் பார்த்தாள் எமிலி; இழுத்த மூச்சை வெளி யிட மறந்தாள். அலைகள் தூக்கியெறிந்த படகுகள் ஒன்றன் மேல் ஒன்றேறி ஒழுங்கற்றுக் கிடப்பது போல் கூட்டம் கூட்டமாய் இறந்து கிடந்தன நூற்றுக்கணக்கான டால்ஃபின்கள்.

இழுத்த மூச்சை இப்போது விட்டதில் ஏறி இறங்கியது எமிலியின் மார்பு.

இன்னொரு புறம் - நெடுஞ்சாலை வாரியில் கொட்டிச் சித றிய தானியங்களாய் ஆயிரக்கணக்கான மீன்வகைகள் இறந்து கிடந்தன, இறந்தும் இறவாமலும். சில மீன்களின் உயிர்கள் வெளி யேறிக் கொண்டிருப்பது தெரிந்தது வால்களின் துடிதுடிப்பில்.

என்ன கொடுமை இது! யுகம்யுகமாய் உயிர்கள் படைத்த இயற்கை ஒரே நாளில் அழிக்கப் பார்க்கிறதா? மிச்சமிருக்கப் போகும் ஒரே பிராணி மனிதன்தானா? மனிதர்கள் இல்லாத உல கத்தில் விலங்குகளும் பறவைகளும் வாழ முடியும். ஆனால் மனி தரால் வாழ முடியுமா விலங்குகளும் பறவைகளுமற்ற உலகத்தில்?

இந்தப் பக்கம் மொத்தமாய்ச் செத்துக் கிடந்தன ஹெரான் பற வைகள். அவற்றின் பேருடல்களுக்குப் பொருத்தமில்லாத குச்சிக் கால்கள் பின்னிக் கிடந்தன ஒன்றோடொன்று.

“செத்த பறவைகளில் ஒன்றுதான் நேற்று என் கேமராவில் மீன் பிடித்ததா?”

பறவைகளின் சிநேகிதியாய்ப் பிறந்து சுற்றுச்சூழல் பட்டதாரி யாய் வளர்ந்த எமிலியின் நீலக்கண்கள் நீரூறின.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கர்ப்பிணி போல் வயிறு பெருத்த கடல் ஆமைகள் இறந்து கரை ஒதுங்கினவா கரை ஒதுங்கி இறந்தனவா தெரியவில்லை. மெக்சிகோ விழிக்கவில்லை. மிசிசிப்பியின் கரைகளுக்கு எட்டவில்லை சேதி இன்னும்.

எமிலி தெளிந்தாள். தோள்களைக் குலுக்கித் துணிச்சலை அழைத்துக் கொண்டாள். ஓடி ஓடிப் படம் எடுத்தாள். எல்லா உடல்களிலும் எண்ணெய்ப் பிசுக்கு மட்டும் இருப்பது கண்டாள். சில அதிகாரிகளும் வீரர்களும் கடலுக்குள் விரைந்துகொண்டிருந்தார்கள் அவசரங்களின் முதுகில் ஏறி.

என்னவாயிற்று?

லூய்சியானா கடற்கரையிலிருந்து நாற்பத்தோராவது மைலில் மெக்சிகோ வளைகுடாவுக்குள் அது நிகழ்ந்தது.

எண்ணெய்க் கிணறு குடைந்த ஆழ்துளைக் கருவிகள் தம் சக்தியினை மொத்தம் திரட்டி ஆழத்தில் ஒரு முட்டு முட்டிய போது வெடித்து வெளியேறியது பூமிஜாடியில் பூட்டப்பட்டுக் கிடந்த மீத்தேன் பூதம். அது வெளிப்பட்ட வேகத்தில் பட்டென்று திறந்து கொண்டது பெட்ரோல் ஊற்றின் பெருங்கண்.

மீத்தேனும் பெட்ரோலும் முட்டிக்கொண்டதில் பற்றிக் கொண்டது வளைகுடா; கடல் நீராலும் அதை அணைக்க முடியவில்லை. கடற்பரப்பில் இரண்டங்குலம் படர்ந்த பெட்ரோல் போகப் போகப் பத்தங்குலமாய்க் கெட்டிப்பட்டது. கடல் எங்கும் கசிவுதான்; 580 சதுர மைலுக்கு எண்ணெய்ப் போர்வை தான். எண்ணெய்யைச் சுவாசிக்கத் தெரியாத தண்ணீர் ஜீவிகளில் செத்துச் செத்து மிதந்தவை பல; கரை ஒதுங்கியவை சில. எரிகிறது கடல்; கறுப்பாடை கட்டுகிறது பூமி.

இந்த மனிதர்கள் பூமியின் முகத்தில் அறைவதையும், முதுகில் குத்துவதையும், வயிறு கீறுவதையும், கருவறையில் கம்பி நுழைப்பதையும் ஓசோன் கூரை ஓட்டை வழி எட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஓர் அழுக்கு மேகத்தை இழுத்து முகம் பொத்திக் கொண்டது சூரியன்.

**- வைரமுத்து**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**வைரமுத்து**

1953இல் தமிழ்நாடு, தேனி மாவட்டம் வடுகப்பட்டியில் பிறந்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றவர். சிறந்த கவிஞர். மற்றும் திரைப்படப் பாடலாசிரியர். ஆறு முறை சிறந்த பாடலாசிரியருக்கான ஜனாதிபதி விருது, பத்மஸ்ரீ, கலைமாமணி, சாகித்ய அக்காதமி போன்ற விருதுகளைப் பெற்றவர். வைகறை மேகங்கள், இதுவரை நான், பெய்யெனப் பெய்யும் மழை, கள்ளிக்காட்டு இதிகாசம், மூன்றாம் உலகப்போர் போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார். இப்பகுதி **மூன்றாம் உலகப்போர்** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ‘மனிதர்கள் இல்லாத உலகத்தில் விலங்குகளும் பறவைகளும் வாழமுடியும். ஆனால் மனிதரால் வாழமுடியுமா விலங்குகளும் பறவைகளும் இல்லாத உலகத்தில்’ - விவாதம் செய்க.
- இயற்கை அழகை மையப்படுத்திக் கவிதைகள் எழுதி, அதனடிப்படையில் ஒரு கவியரங்கம் நிகழ்த்துக.
- பாடப்பகுதியில் வரும் பெயரடை, வினையடைச் சொற்களைத் தொகுத்து எழுதுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# நீலகிரி நிலச்சரிவு யார் காரணம்?

## இயற்கை ஓங்கும் சீற்றங்கள்

அலைக்கழிக்கும் ரசாயனக் கலவைகள்
கலங்க வைக்கும் கழிவுநீர் சாக்கடைகள்
நெஞ்சை நடுக்கிடும் ஞெகிழிக் குப்பைகள்
மூச்சை இறுக்கும் மாமிசக் கழிவுகளாம்
ஆற்றின் சுவாச நுரையீரல் திணறிட
சினத்தால் சலசலத்து குதித்தெழுந்து
சுழிபல சூடி எல்லாம் சுருட்டியடித்து
செடி கொடிகளை வேரொடு பிடுங்கி
வயல் வரப்புகளை அழிக்கின்றனவோ?
கடல் அலைகளைத் தூண்டி விட்டு
தூண்டில் காரர்களைத் தொலைத்துக் கட்டி
கொள்முதல்காரர்கள் முதலை அழித்து
ஊழிப் பேரலைகளாய் உருவை
மாற்றி ஊரையே சிதைத்து
ஆட்களைக் கொல்லுமோ?

சிறிய பெரிய வாகனங்கள் வெளிவிடும்
கரியமில வாயு புகை மண்டலங்கள்
தொழில் சாலைகள்தள்ளும் கரும்புகைகள்
தீய்ந்த குப்பைக் கூளங்கள் அழுகி
வெளிவரும் விஷம் கலந்த வாயு
உள்ளில் இழுத்து உறுப்புகள் உலைய
மூச்சுக் குழல் இறுகி நோய் தாக்கிய
காற்று வெம்பி விரைந்து சீற்றமடைந்து
புயலாய்த் தாக்கிடப் பெருமரங்களே சாயும்
ஏழைக் கூரைகள் ஓடுகள் பறக்கும்!

நீலகிரி மாவட்டத்தின் கேத்தி எனும் இடத்தில் வரலாறு காணாத வகையில் 24 மணிநேரத்தில் 820 மில்லி மீட்டர் மழை பெய்தது. சென்னை உயர்நீதி மன்றம் அண்மையில் அளித்த உத்தரவில் “நீலகிரி மாவட்டத்தில் சட்டத்திற்குப் புறம்பாக மரங் களை வெட்டவோ, மணல் மற்றும் கல்குவாரி தோண்டவோ கூடாது” எனக் கூறியுள்ளது.

இந்த இரு நிகழ்வுகளும் வெவ்வேறானவை போன்று தெரி யலாம். ஆனால், நீலகிரி மாவட்டத்தில் நடந்துள்ள கேடுகளுக் கும், இது எதிர்கொள்ள இருக்கும் சிக்கல்களுக்கும் இந்த நிகழ் வுகளுடன் நெருக்கமான தொடர்பு உண்டு!

நீலகிரியில் நவம்பர் மாதத்தின் இரண்டு நாட்களில் 543 நிலச்சரிவுகள் நிகழ்ந்தன. 816 வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. 600 எக்டேர் பயிர்கள் நாசமாகின. 145 இடங்களில் சாலைகள் சேதமடைந்தன. 43 உயிர்கள் பலியாயின. 1100 பேர் வீடிழந்த னர். புகழ்பெற்ற நீலகிரி மலை தொடர்வண்டிப் பாதை மோச மாகப் பாதிப்படைந்தது. இவை எல்லாம் இயற்கைச் சீற்றத்தின் விளைவு என்று பேசப்பட்டது.

ஆனால், உண்மை அதுவல்ல. மனிதர்கள் செய்த தவறு கள் குற்றங்கள்தான் இந்த நிலைக்கு உண்மையான காரணம். இயற்கை மனிதர்களைத் தண்டிக்கவில்லை. பேராசையின் விளைவால், மனிதர்கள் தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்ட கேடுதான் நீலகிரியில் நேர்ந்த சோகம்!

இயற்கையை நாம் நியாயமான சக்தியாக மதிப்பிட முடி யாது. ஏனெனில், மனிதன் செய்த தவறுகளுக்குத் தண்டனை யாகத்தான் இயற்கைச் சீற்றம் திருப்பி அடிக்கிறது என்று எடுத் துக்கொண்டாலும் அது குற்றவாளிகளை விட்டுவிட்டு அப்பா விகளைத் தண்டிக்கிறது. நீலகிரியின் நிலச்சரிவில் பாதிக்கப்பட் டோரில் பெரும்பாலானவர்கள் ஏழைகள். நீலகிரியின் சுற்றுச் சூழலைக் கெடுத்தவர்கள் அவர்கள் அல்ல!



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**காரணம் என்ன?**

நீலகிரி மாவட்டத்தில் நேர்ந்துள்ள நிலச்சரிவு மற்றும் அது தொடர்பான விளைவுகளுக்கு மூன்று முதன்மையான காரணங்களைக் கூறமுடியும். 1. புவிவெப்பம் அதிகமாவது. 2. சுற்றுச்சூழல் சீர்கேடு, 3. முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லாதது ஆகியனவே காரணமாகும்.

வழக்கத்தைவிட அதிகமான மழை, அதிக வேகத்தில் புயல், வரலாறு காணாத வறட்சி போன்று இயற்கைச் சீற்றங்களின் வேகமும் அளவும் அதிகரிப்பதற்குப் புவி வெப்பமடைவதுதான் காரணம் என அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இத்தகைய 'வழக்கத்திற்கு மாறான' அல்லது 'வரலாறு காணாத' இயற்கைச் சீற்றங்கள் உலகம் முழுவதுமே அதிகமாகிவிட்டன. அந்த வகையில் நீலகிரியில் வரலாறு காணாத மழைப் பொழிவுக்குப் புவி வெப்பமடைதல்தான் காரணம் எனக் கூறலாம்.



புவி வெப்பமடையும் நிகழ்வு என்பது எரிபொருள் பயன்பாட்டின் விளைவாக நேருகிறது. கூடவே, காடழிக்கப்படுவதும் இதற்கு ஒரு காரணமாகும். பூமியில் வெப்பம் இருப்பதற்குக் கரியமில வாயுதான் முதன்மையான காரணம். சூரியனிலிருந்து பூமியில் விழும் வெப்ப சக்தி மீண்டும் அப்படியே வான்வெளிக்குத் திரும்பிச் செல்லாதவாறு – கணிசமான வெப்பத்தைக் கரியமில வாயு பிடித்து வைத்துக்கொள்கிறது. வளி மண்டலத்தில் கரியமில வாயுவும் இன்னும் சில பசுமையில்ல வாயுக்களும்(Green house gases) இல்லாமல் போனால் பூமி கடும் குளிரில் உறைந்து போயிருக்கும்.

பூமியின் வளிமண்டலத்தின் மேற்பரப்பில் காலாகாலமாக ஒரே அளவான கரியமில வாயுதான் இருந்து வந்தது. அதற்கேற்ப பூமியின் தட்பவெப்ப நிலையும் ஒரே அளவாகத்தான் இருந்தது. கால நிலையில் பெரிய மாற்றம் எதுவும் பல ஆயிரம் ஆண்டுகளாக இல்லை.

ஆனால் கடந்த 300 ஆண்டுகளாக நிலக்கரி, டீசல், பெட்ரோல், எரிவாயு போன்ற – பூமியின் அடி ஆழத்தில் புதைந்து கிடந்த புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்தி வந்ததின் விளைவாக வளிமண்டலத்தின் கரியமில வாயு அடர்த்தி அதிக



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அன்னை பூமியின் அழகிய நெஞ்சில்
ஆயுதம் பாய்ச்சி குத்திக் கீறிக் கிழித்துக்
கல்லும் சிமிண்ட் கலவையும் நிரப்பி
நாடி நரம்புகளில் துர்நீர் பாய்ச்சிக்
குப்பைக் கூளங்கள் குழிகளில்மூடிக்
களிமண் கரிமணல் தோண்டியெடுக்கப்
பொறுத்துப் பார்த்துப் பொறுமை இழந்து
அல்லும் பகலும் ஆழமாய் அல்லலுற்று
வெந்து நொந்து வேதனையுற்று
நெஞ்சம் அதிர்ந்து நடுங்கி விரக்தியுற்றுக்
குருதியும் தசையும் நீரும் போல்
வெடித்துச் சிதறி விரிசல்கள் வழியே
கல்லும் மணலும் நீரும் நெருப்பும்
வெளியேறுவதே எரிமலைச் சீற்றமும்
நில அதிர்வெனும் பூமி குலுக்கமும்!

**– திருவேணி**

**திருவேணி**

இவர் 1954இல் தமிழ்நாடு ஒட்டன் சத்திரத்தில் பிறந்தவர். தஞ்சையில் பயின்றார்; தமிழாசிரியர். இவரது கவிதைகள் பல்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளன. 'நீரில் எரியும் நெருப்புகள்' என்ற கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது இக்கவிதை.

மாகிவிட்டது. கடந்த 300 ஆண்டுகளுக்கு முன்பு 275 ppm அளவாக இருந்த கரியமில வாயு அடர்த்தி இப்போது 390 ppm அளவாக அதிகமாகிவிட்டது. (ஒரு ppm என்பது பத்து லட்சத்தில் ஒரு பகுதி) இதற்கு ஏற்ப பூமியின் சராசரி மேற்பரப்பு வெப்பநிலையும் கடந்த நூறாண்டுகளில் 0.8 டிகிரி செல்சியஸ் அளவு அதிகமாகிவிட்டது.

## சுற்றுச்சூழல் சீர்கேடு

புவி வெப்பம் அதிகமாவதும் அதன் விளைவாகக் குறுகிய காலத்தில் அதிக அளவு மழை பொழிவதும் நீலகிரி மாவட்டத்தின் பாதிப்புகளுக்கு ஒரு காரணம். எனினும், அதுவே முதன்மையான காரணம் அல்ல. மாறாக, சுற்றுச்சூழல் சீர்கேடு தான் எல்லாவற்றை விடவும் மிக முக்கியமான காரணம் ஆகும். குறிப்பாக, காடழிப்பு, கல் குவாரிகள், வரைமுறையற்ற கட்டுமானங்கள்தான் நிலச்சரிவுக்கு அடிப்படை ஆகும். அதாவது, நீலகிரிப் பகுதியில் மனிதர்களால் செய்யப்பட்ட தவறுகள்தான் பாதிப்புகளுக்குக் காரணமாகும்.

நீலகிரி மலைப்பகுதி என்பது பொதுவாகச் சுற்றுலாவுக்கான இடமாகவும், தேயிலை போன்ற பயிர்களைப் பயிரிடும் பகுதியாகவும் தான் பார்க்கப்படுகிறது. ஆனால், அது தென்னிந்தியாவின் ஒரு மிகப் பெரிய இயற்கை வளம் என்கிற உண்மை கண்டுகொள்ளப்படுவது இல்லை.

நீலகிரி மலைப்பகுதி வெறும் மலையாகத் தெரிந்தாலும் அது உண்மையில் தென்னிந்தியாவின் நீர்த்தேக்கம். இங்கு ஓர் ஆண்டில் சுமார் 400 டி.எம்.சி. அளவுக்கு மழை பொழிவதாகக் கூறுகிறார்கள். இவ்வாறு கிடைக்கும் மழைநீரைக் காடும், பசுமைப்பரப்பும், மலையும் சேமித்து ஆறுகளுக்குத் தருகின்றன. 24 கிளை ஆறுகளைக் கொண்ட மோயாறு வடிநிலப்பகுதி, 26 கிளை ஆறுகளைக் கொண்ட பவானி வடிநிலப்பகுதி இவையிரண்டும் நீலகிரி மலையிலிருந்துதான் நீரைப் பெற்றுக் காவிரிக்குத் தருகின்றன. காவிரியின் கிளையான கபினி வடிநிலப்பகுதியும் அதன் 5 கிளையாறுகளும் நீலகிரியில்தான் நீரைப் பெறுகின்றன. கேரளாவுக்கு நீரைத்தரும் சாலியாறு வடி நிலப்பகுதியும் அதன் 6 கிளையாறுகளும்கூட நீலகிரியை நம்பித்தான் இருக்கின்றன. – இவ்வாறாகத் தமிழ்நாடு, கேரளா, கருநாடக மாநிலங்களுக்கு ஆண்டுக்கு 400 டி.எம்சி. தண்ணீர் தரும் அணைக்கட்டு போன்று நீலகிரி இருந்து வருகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மலைப்பகுதியில் காடுகளும், புல்வெளியும் இருந்தவரை, எவ்வளவு மழை பெய்தாலும் அதனைத் தாங்கி ஆறுகளுக்கும், அதன் மூலம் சமவெளிப்பகுதிகளுக்கும் நீரைத்தரும் வரமாக இருந்து வந்தது நீலகிரி. ஆனால் – இயற்கை அமைப்பில் மிகப்பெரிய சேதங்களைச் செய்த பிறகு அதே மழையும் நீரும் கேடாக மாறிவிட்டது.

### கட்டடங்கள்

கட்டடங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகியவற்றில் விதிமுறைகள் மீறப்பட்டதே நிலச்சரிவுக்கு முக்கியமான காரணமாகும். நீலகிரி மாவட்ட முழுமைத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டு ஆணையம் எனப் பலவிதமான விதிமுறைகள் கட்டடங்கள் கட்டுவதில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தாலும், அவை எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன. 30 விழுக்காடு சரிவுக்கு மேல் கட்டடங்களைக் கட்டக் கூடாது என்கிற விதிமுறைகள் இருப்பினும், 70 விழுக்காடு சரிவுவரைகூடக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.



### வடிகால்

குறுகிய காலத்தில் அதிக அளவாக மழை பொழியும் போது அது வழிந்தோட வடிகால் அவசியம். சமவெளிகளிலேயே வடிகால் அவசியமாக இருக்கும்போது மலைப்பகுதியில் இது இன்றியமையாதது. எல்லா மலைப்பகுதிகளிலும் வடிகால்கள் இயற்கையாக அமைந்துள்ளன. மரமும், காடும், புல்வெளியும் பிடித்து வைப்பதை விட அதிகமாக மழை பொழியும் போது அவைதானாகவே வழிந்தோட இயற்கை வழி செய்துள்ளது. ஆனால், நீலகிரிப் பகுதியில் பெரும்பாலான வடிகால்களை மறித்துக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### கல்குவாரி

காடுகளை அழிப்பதும், கட்டடங்கள் கட்டுவதும் சட்டத்திற்குப் புறம்பாக நடப்பது போன்று – இயற்கைக்கு எதிராகக் கல்குவாரிகள், மணல் குவாரிகள் நீலகிரிப் பகுதியில் உருவாக்கப்பட்டு மொத்தத்தில் மனிதனின் பேராசைக்கு நீலகிரி மாவட்டம் பலியாக்கப்பட்டுள்ளது. எல்லாவிதமான சுற்றுச்சூழல் சீர்கேடுகளும் நிகழ்த்தப்பட்டதன் விளைவாக நீலகிரி மாவட்டம் நிலச்சரிவுக்குப் பலியிடப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

இயற்கைச் சீற்றங்களின் அளவும் தாக்கமும் இனி தொடர்ந்து அதிகமாகும் என்பது அறிவியலாளர்களின் உறுதியான கருத்தாகும். வளிமண்டல கரியமில வாயு அதிகரிப்பதன் விளைவாகப் புவியின் வெப்பநிலையில் 0.8 டிகிரி செல்சியஸ் வெப்பம் உயர்ந்துள்ளது. இது தொடர்ந்து தன்னிச்சையாக 1.5 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாகும் என ஐ.நா. காலநிலை அமைப்பு கூறுகிறது. இது மேலும் அதிகமாகி 2 டிகிரி செல்சியசைக் கடந்தால் பூமியில் மனித இனமே வாழ இயலாது என்பதால் – அதனைத் தடுக்க ஐ.நா. காலநிலை மாற்ற மாநாடு ஒன்று டென்மார்க்கின் கோபன்ஹெகன் நகரில் நடத்தியது.

அதாவது, இதுவரை அதிகமாகியுள்ள 0.8 டிகிரி செல்சியஸ் கூடுதல் வெப்பத்தால் ஏற்பட்டுள்ள இயற்கை பேரழிவுகளே நம்மை அச்சுறுத்துகின்றன. இந்நிலையில் இது தொடர்ந்து 1.5 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாவது நிச்சயம் என்பதால் – மாறிவரும் புதிய சூழலுக்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்வது அவசியமாகும்.

மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப – இயற்கைச் சீற்றங்களைச் சமாளிக்கும் வகையில் முன்கூட்டியே திட்டமிட வேண்டும் என்பது உலகின் எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்ட கொள்கை.

நீலகிரிப் பகுதியை ஒரு சுற்றுலாப் பகுதியாக மட்டுமே பார்ப்பதை நிறுத்த வேண்டும். அது ஒரு இயற்கை வளம்; தென்னிந்தியாவின் நீர்த்தேக்கம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் அனைத்து வகையான சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் உடனடியாகத் தடுத்து நிறுத்துவது உடனடியாகச் செய்ய வேண்டியதாகும். அந்த வகையில், 1997ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட முழுமைத் திட்டத்தை (Master Plan) மீண்டும் மக்கள் பங்கேற்புடன் மறு ஆய்வு செய்து – புதிதாக நிறைவேற்ற வேண்டும். அது சுற்றுச்சூழல் பாதிப்புகளைச் சீரமைப்பதாக அமைய வேண்டும்.

**– இர. அருள்**

இக்கட்டுரை 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியான பசுமைத்தாயகம் சுற்றுச்சூழல் குறித்த இதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## செயல்பாடுகள்

- மலைகளில் ஏற்படும் நிலச்சரிவுகளுக்கான காரணங்களைக் குழுவில் விவாதித்துக் குறிப்புத் தயாரிக்க.
- மலைகளில் மரங்களை வெட்டுதல் நிலச்சரிவிற்குக் காரணமா? இல்லயா? என்பது குறித்துப் பட்டிமன்றம் நடத்துக.
- ''இயற்கை ஓங்கும் சீற்றங்கள்'' - கவிதை பற்றிய விமரிசனக்குறிப்பு எழுதுக.

## கண்டல் மரங்களல்ல; கரங்கள்!

**ச**துப்பு நிலக் காடுகளை வளர்ப்பதில் நாம் அக்கறை காட்டினால் இயற்கைப் பேரிடர்களிலிருந்து நாம் தப்பிக்கலாம். இந்த விழிப்புணர்வு கடலோர மாவட்டங்கள் முழுவதும் கடந்த (ஜூலை 26) வாரம் எதிரொலித்தது. கண்டல் மரங்களை வளர்ப்பதின் அவசியம் குறித்துச் சிதம்பரம், பரங்கிப்பேட்டையில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின உயராய்வு மைய உதவிப் பேராசிரியர் முனைவர் டி. ராமநாதனிடம் பேசினோம்.



"சுனாமி பேரழிவின் போது பெரும்பாலான உயிர் சேதத்தைத் தடுத்து, பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காத்த பெருமையோடு கடல் நீரின் மேல் கூட்டமாய்க் கரம் கோர்த்து நிற்பவை கண்டல் மரங்கள், அலையாத்தி காடுகள் என்றழைக்கப்படும் இவை கடலும் ஆறும் கலக்கும் உவர் நீர் நிலைகளில் வளரும் தன்மை கொண்டவை.

கடல் அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவை யாதலால் அலையாத்திக் காடுகள் என்ற காரணப்பெயரோடு விளங்குகின்றன.

உலகின் மிகப் பெரிய சதுப்பு நிலக் காடுகள் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனக் காடுகளாகும். இவை தவிர, இந்தியாவில் குஜராத், அந்தமான், நிக்கோபார், ஆந்திரா, ஒரிசா, மகாராஷ்டிரா, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி பகுதிகளில் இக்காடுகள் பரவியுள்ளன.

தமிழ்நாட்டில் சிதம்பரம் அருகே வங்கக் கடலை ஒட்டிய பகுதியான பிச்சாவரத்தில் 2800 ஏக்கரில் அலையாத்தி காடுகள் உள்ளன. மேலும் தமிழகத்தில் முத்துப்பேட்டை, கோடியக்கரை, பள்ளிக்கரணை, பழவேற்காடு பகுதிகளிலும் இக்காடுகளைக் காணலாம்.

கழுதை முள்ளி, நரிக்கண்டல், வெண்கண்டல், பன்னுக்குத்தி, கருங்கண்டல், சிறுகண்டல், தில்லை, திப்பரந்தை, நெட்டை, சுரபுன்னை, குட்டை சுரபுன்னை, மலட்டு சுரபுன்னை, சோமுந்திரி உள்ளிட்ட மரங்கள் இக்காடுகளில் அதிகமாக உள்ளன.

இவை செப்டம்பர் முதல் நவம்பர் வரை பூக்கும் தன்மை கொண்டவை. இம் மரங்களின் மருத்துவப் பயன்கள் உலகிற்கு இன்னுமோர் அதிசயமாகத் திகழ்கின்றன. எய்ட்ஸ், தொழுநோய் உள்ளிட்ட உயிர்க்கொல்லி நோய்களையும் கட்டுப்படுத்தும் வல்லமை கொண்ட வேதிப்பொருள்களை (Secondary Metabolites) உள்ளடக்கியவை இவை.

கண்டல் மரங்களின் இலை, நுனி, காம்புகள் முதல் வேர் வரை மருத்துவத்திற்காகப் பயன்படுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தின் இயக்குநர் முனைவர் பேராசிரியர் சு. கதிரேசன், சதுப்பு நிலக்காடுகளின் பரப்பளவை அதிகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இக்காடுகளை வளர்க்கப் பல்வேறு உத்திகளை இம்மையம் கண்டறிந்துள்ளது. நிகழ்காலத்தில் நாம் வளர்க்கும் சதுப்பு நில மரங்கள் எதிர்காலத்தில் நம் உயிர் காக்கும் கரங்கள் என உணர்ந்து கடலோரப் பகுதிகளில் கண்டல் மரங்களை வளர்த்து வருங்காலச் சந்ததியினருக்கு வளமான பூமியைப் பரிசளிப்போம் என்றார் டி. ராமநாதன்.

**- ஜி. சுந்தர்ராஜன்**

இப் பத்திரிகைச் செய்தி 4-8-2013 இல் வெளிவந்த தினமணி, ஞாயிறு கொண்டாட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## செயல்பாடுகள்

- மனித இனம் எதிர்காலத்தில் சந்திக்கப்போகும் இயற்கைப் பேரிடர்கள் பற்றிக் குழுக் கலந்துரையாடல் நிகழ்த்துக.
- ஆழிப்பேரலை அழிவு (சுனாமி) நிகழ்ந்த ஏதாவதொரு ஊருக்குச் சென்று அனுபவங் களைக் குறிப்பு வடிவில் தருக.
- இயற்கைப் பேரிடர் தடுப்பு மையத்திற்குச் சென்று இயற்கைச் சீற்றங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி அறிந்து அறிவியல் இதழில் எழுவதற்கான கட்டுரை ஒன்றைத் தயார் செய்க.
- இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நபரை நேர்காணல் நடத்துவதற்குரிய வினா நிரல் தயாரிக்க.
- ‘சுற்றுச்சூழல் பாதுகாப்பு’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றினை நடத்துவதற்கான ஏற்பாடு செய்க.
- அண்மையில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நிகழ்ந்த நிலச்சரிவுகளைக் கண்டறிந்து அவற்றிற்கான காரணங்களை இணையம் மூலம் தேடித் தொகுக்க.

- நூலகத்திற்குச் சென்று ஆகுபெயர்களைத் தொகுத்து அவற்றைக் காலவாகுபெயர், பண்பாகுபெயர், தொழிலாகு பெயர் என்று வகைப்படுத்தித் **தமிழில் ஆகுபெயர்கள்** என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# அலகு 5

# பட்டறிவுப் பெட்டகம்

புதிதாகப் புலரும் ஒவ்வொரு பொழுதிலிருந்தும் மனிதன் பெறும் அனுபவங்கள் பல. அவை மனிதனுக்குப் பல்வேறு பாடங்களைக் கற்றுத் தருகின்றன. அனுபவங்களே மிகச் சிறந்த ஆசிரியன் என்னும் சொற்றொடர் இதனை அடியொற்றி உருவானதாக இருக்கலாம். இவ்வகையில், தான் பெறும் அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கில் பல்வேறு இலக்கிய வடிவங்களில் அவற்றைப் பதிவுசெய்கிறான் அவன். பயண இலக்கியங்கள், நாட்குறிப்புகள் வாழ்க்கை வரலாறு என அமைந்த இப்பதிவுகள் வாசகனுக்குப் பல சூழல்களிலும் வழிகாட்டியாக அமைகிறது. பலவகைப் புதிய அனுபவங்களைப் பெறும் வகையில் பயணக் கட்டுரை, நாட்குறிப்பு, வாழ்க்கை வரலாறு முதலான செய்தி வடிவங்கள் இவ்வலகில் அமைந்துள்ளன.

## கற்றல் அடைவுகள்

- வெளியீட்டு உத்திகளைப் பல்வேறு படைப்புகளின் வாயிலாக அறிந்து அவற்றைத் தங்கள் படைப்புகள் மூலம் வெளியிடுதல்.
- வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், நாட்குறிப்பு போன்ற படைப்புகளிலிருந்து சமூக விழிப்புணர்வைப் பெறுவதுடன், சமூகப் பொறுப்புகளை உணர்ந்து செயல்படுதல்.
- சுய படைப்புகளில் ஈடுபடுதல்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# சிம்லாவில் மூன்று நாள்

ஆறாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து வந்திருக்கும் அரசப் பிரதிநிதி, ஆறாயிரம் அடி உயரத்துக்கு மேலிருந்து இந்திய நாட்டை ஆட்சி செய்கிறார். இந்த இடத்திற்குப் பெயர்தான் சிம்லா. இது கோடைகாலத்துத் தலைநகரம்.

டில்லியிலிருந்து சிம்லா சுமார் இருநூற்றிருபது மைல். இரவு பத்து மணிக்கு டில்லியிலிருந்து புறப்பட்டால் மறுநாள் காலை ஐந்து மணிக்கெல்லாம் கால்கா என்னுமிடத்தில் சேர்வோம். கால்கா, டில்லி யிலிருந்து இரண்டாயிரம் அடி உயரம்.



கால்காவிலிருந்து சிம்லாவுக்கு அறுபது மைல். இதற்குச் சிறிய மலை ரயில் அமைத்திருக்கிறார்கள். இந்த மலை ரயிலில் அறுபது மைல் செல்ல ஆறு மணி நேரத்துக்கு மேலாகும். சுமார் ஐம்பது பேர் ஏறக்கூடிய ரெயில். மோட்டார்கள் நான்கு மணி நேரத்தில் சிம்லாவை அடைந்துவிடுகின்றன. இவற்றில் பிரயாணம் செய்ய முதலாவது வகுப்பு டிக்கட் வாங்குவதோடு, இடம் ரிசர்வ் செய்வதற்கு ஐந்து ரூபாய் வரை பணம் கொடுக்க வேண்டும்.

கால்காவிலிருந்து சிம்லாவுக்கு நல்ல அருமையான ரோடு அமைத்திருக்கிறார்கள். நான்கு பேர் ஏறக்கூடிய சௌகரியமான வாடகை மோட்டார்கள் ஓடுகின்றன. மோட்டாரில் பிரயாணம் செய்தால் மூன்று மணி நேரத்தில் சிம்லாவை அடையலாம்.

## ஒரு மறியல்

அயோவா சிடி, டிசம்பர் 8, 1973.

உறைபனி பெய்து பாளம் பாளமாக உறைந்து கிடந்தது. நடைபாதையில் சில இடங்களில் உறைபனியை வாரித் தள்ளியிருந்தார்கள். அதுவும் சாலை நடுவே மோட்டார் கார்கள் செல்லும் போது சிதறி விழுந்து உறைபனியும் சேர்ந்து குவிந்து கிடந்தன. கனத்த கோட்டுகளும் கைக்கு உறைகளும் அணிந்து கொண்டு மக்கள் அந்தக் குளிரிலும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மூச்சு விடும்போதும் பேசும்போதும் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் வெளியேறிய காற்றின் நீர்ப்பசை உடனே குளிர்ந்து புகை போல உருக்கொண்டது. நாற்சந்திகளில் சாலைப் போக்குவரத்து மின்விளக்குகள் வழக்கம்போலப் பச்சையும் சிவப்பும் மாறி மாறிக் காட்டிக் கொண்டிருந்தன. உறை பனி காரணமாக வண்டிப் போக்குவரத்து, சிறிது வேகம் குறைந்ததாகக் காணப்பட்டது. பல பாதசாரிகள் 'நடக்காதே' சிவப்பு விளக்கை அசட்டை செய்த வண்ணம் சாலையைக் கடந்தார்கள்.

அந்தக் குறுகலான நடைபாதையிலும் ஒரு வட்டம் அமைத்துக் கொண்டு சில இளைஞர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்கள். "ஃபேரா பான்ட்களைப் பகிஷ்கரியுங்கள்" என்ற கோஷம் கொண்ட அட்டைகளைச் சுமந்த வண்ணம் வளைய வளைய வந்தார்கள். அவர்களைச் சேர்ந்த ஓர் இளைஞன் வருவோர் போவோரிடம் துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்துக் கொண்டிருந்தான்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

டெக்ஸாஸ், நியூ மெக்ஸிகோ மாநிலங்களில் தொழிற்சாலைகள் உள்ள ஃபேரா நிறுவனம் ஆண், பெண், குழந்தைகளுக்கான பான்ட்களைத் தயாரிக்கிறது. இந்தப் பேன்ட்கள் அமெரிக்காவின் எல்லா மாநிலங்களிலும் உள்ள துணிக்கடைகளில் விற்கப்படுகின்றன. பொதுவாக அமெரிக்காவில் 'ரெடிமேட்' உடுப்புகள்தாம் பெருமளவு விற்கப்படுகின்றன. ஒருவர் தனியாகத் துணி வாங்கி உடைதைத்துக் கொள்வது மிக அபூர்வம். இது மிகப் பெரிய பணக்காரர்களுக்குத் தான் சாத்தியம். எப்படிப்பட்ட உடலமைப்பு இருப்பவர்களுக்கும் ரெடிமேட் உடுப்புகள் கிடைத்துவிடும். ஃபேரா பான்ட்கள் துணியின் தரத்துக்கும் தையல் மேன்மைக்கும் பெயர் போனவை.

வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை உள்ளது போல வேலைக்கு மறுஆள் வைத்துக்கொள்ளும் உரிமையும், அமெரிக்காவில் சில மாநிலங்களில் உண்டு. ஆதலால் ஃபேரா தொழிற்சாலைகள் பலவற்றில் வேலை நிறுத்தம் நடந்தாலும் ஓரளவு உற்பத்தியும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. சட்டம் அதற்குரிய நிதான வேகத்தில் வேலை நிறுத்த வழக்கை ஆராய்ந்து வருகிறது. ஃபேரா பான்ட் தொழிற்சாலைகளில் பணிபுரிவோரில் பலர் கறுப்பர்களும் ஸ்பானிய இந்தியர்களுமாவார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கு மேல் பெண்கள். இந்தத் தொழிற்சாலைகள் அயோவா சிடியிலிருந்து ஆயிரத்தைந்நூறு மைல்களுக்கு அப்பால் உள்ளன.

அயோவா சிடியின் 50000 மக்களுக்குச் சுமார் நாற்பது கடைகளில் உடுப்புகள் கிடைக்கும். இதில் மூன்று கடைகள் ஃபேரா பான்ட்களை விற்பனை செய்கின்றன. அந்தக் கடைகளின் முன்புதான் மறியல்.

ரெயில் பிரயாணத்தைவிட மோட்டார் பிரயாணம் தான் மிகவும் சௌகரியமானது.

சிம்லா மலைப்பிரதேசம்: பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தது. சிம்லாவுக்குச் செல்லும் வழியிலும் சிம்லாவுக்குப் பக்கத்திலுமாக சுமார் முப்பது சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. இவைகளில் பெரும்பாலான சமஸ்தானங்கள் அளவிலும் வருமானத்திலும் மிகச் சிறியவை.

சிம்லா ஒரு முனிசிபாலிட்டி. கோடைக் காலத்தில் இதன் ஜனத்தொகை அதிகம்: குளிர்காலத்தில் மிகக் குறைவு.



உறைபனி நிறைந்த குளிர் காலத்திலும்கூட, சில அரசாங்கக் காரியாலயங்கள் சிம்லாவிலேயே இருக்கின்றன.

ஜப்பானியர் பர்மாவைக் கைப்பற்றியதும் பர்மா அரசாங்கத்தார், குறிப்பிட்ட சில பர்மிய அதிகாரிகளுடன் இந்தியாவில் வந்து குடியேறினர்.

பர்மா அரசாங்கம் சிம்லாவில் குடியேறியது முதல் அவ்வூரில் வாடகைக்கு வீடுகள் கிடைப்பதே கஷ்டமாகி விட்டது. உணவுச் சாமான்கள் விலை அதிகமானதோடு, கிடைப்பதும் அரிதாகிவிட்டது. சிம்லாவுக்கு அருகிலுள்ள சில சுதேச சமஸ்தானங்களில் நெல் விளைவு உண்டு. ஆனால் அரிசியின் விலை மிக அதிகமாய் இருப்பதால், பல ஏழை மக்கள் தங்கள் அரிசியை மற்றவர்களிடம் அதிக விலைக்கு விற்றுவிட்டு, ரொட்டியை மட்டுமே சாப்பிட்டு வருகிறார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சிம்லாவில் நேச தேசங்களைச் சேர்ந்தவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள். அமெரிக்கர், ஆங்கிலேயரைவிடப் பல மடங்கு சௌகரியமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். ஒரு பிரிட்டிஷ் சோல்ஜரைக் காட்டிலும், ஒரு அமெரிக்க சோல்ஜர் அதிகமான சம்பளம் பெறுவதே இதற்குக் காரணமாகும். பட்டாளத்தார் வாழ்க்கை மிகவும் இன்பமானது. நல்ல சீதோஷ்ண நிலை; அருமையான சாப்பாடு; உற்சாகமான பொழுதுபோக்கு. சிம்லாவில் இருப்பவர்களுக்கு யுத்தம் என்பதாக ஒன்று நடைபெறுவதே தெரியுமா என்பது சந்தேகந்தான்.

மாலை நேரங்களில் பகட்டான உடையணிந்த பல பெண்கள் உலாவுவதையும், 'காபி ஹவுஸு'க்குச் செல்வதையும் பார்க்கலாம். வட நாட்டார் எல்லோரும் தேயிலைதான் சாப்பிடுவார்கள். காபி சாப்பிடுபவர்கள் அரிது; சிலர் காபியை மருந்தைப் போலச் சாப்பிடுவார்கள். காபியின் விரோதிகள் நிறைந்த வட நாட்டில், முக்கிய நகரங்களில் எல்லாம் 'இந்திய காபி ஹவுஸ்' கிளைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் காபி ஹவுஸ்களில் காபியைத் தவிர எந்த விதமான பானமும் கிடைக்காது. இப்பொழுது வட நாட்டிலுள்ள காபி ஹவுஸ்கள் வெறும் காபி கிளப்புக்களாக மட்டுமல்லை; பலரையும் சந்திக்கும் பொது இடமாகவும் மாறிவிட்டன.

சிம்லாவில் மூன்று சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன. சில நாட்களில் நான்கு காட்சிகள் உண்டு. பெரும்பாலும் ஆங்கிலப் படங்கள்தான் காட்டுகிறார்கள். ஆங்கிலப் படங்கள் பார்க்கக் குறைந்த கட்டணம் ஒரு ரூபாய் இரண்டணா.

சினிமாவுக்கு மட்டுமல்ல;' ரிக்ஷாவுக்கும்கூட, குறைந்த கட்டணம் ஒரு ரூபாய் இரண்டணா. சிம்லா ரிக்ஷாக்கள் நமது ஊர் ரிக்ஷாக்களைப் போலல்ல. முன்னே இரண்டு பேர் பிடித்திழுக்க, பின்னே இருந்து இரண்டு பேர் தள்ள, நாம் பிரயாணம் செய்யவேண்டும். சில சமயங்களில் ரிக்ஷாவில் உட்கார்ந்திருப்பவரைக் காட்டிலும், ரிக்ஷா இழுப்பவர்கள் நல்ல உடை அணிந்திருப்பார்கள்.

தண்ணீர் கட்டியாக உறையும் அந்தக்
குளிரிலும் அந்தப் பத்துப்
பதினைந்து இளைஞர்கள் மறியல்
அட்டைகளைச் சுமந்து கொண்டு
நாளெல்லாம் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.
சிறிது வெயில் வெளிச்சம் வந்தபோது
ஒரு பெண் அவர்களைப் பல
கோணங்களில் புகைப்படம்
எடுத்தாள். அன்றிரவு மீண்டும்
கடுமையாக உறைபனி விழுந்தது.

– அசோகமித்திரன்

**அசோகமித்திரன்**



1931இல் ஆந்திர மாநிலம் செகந்தராபாத்தில் பிறந்த இவரது இயற்பெயர் தியாகராஜன் என்பதாகும். கணையாழி மாத இதழின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவரின் படைப்புலகம் சிறுகதை, குறுநாவல், நாவல், விமர்சனம், சுய அனுபவப் பதிவுகள் எனப் பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. அப்பாவின் சிநேகிதர் என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவர். அயவோ பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர்களுக்கான பயிலரங்கில் கலந்து கொண்டவர். இப்பகுதி **அசோகமித்திரன் கட்டுரைகள்** நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குதிரை சவாரி செய்பவர்களுக்குச் சிம்லா ஏற்ற இடம். ஒரு ரூபாய்க்கு ஒரு மணி நேரம் குதிரை சவாரி செய்யலாம்.நான்கு ரூபாய்க்கு நாள் முழுவதும் குதிரை சவாரி செய்யலாம்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட தென்னிந்தியர்கள் சிம்லாவில் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் அரசாங்க வேலைக்காரர்கள். 'சவுத் இந்தியா கிளப்' என்னும் சங்கமொன் றிருக்கிறது. இதில் நானூறு அங்கத்தினர்களுக்கு மேல் இருக் கிறார்கள். தென்னிந்திய உணவுச் சாலை ஒன்றையும் இச்சங் கத்தார் நடத்துகிறார்கள்.

சிம்லா, பணம் நிறைந்த இடம். எனவே பாங்குகளும் வியாபார நிலையங்களும் இங்கு அதிகம். சாமான்களின் விலையைப் பார்த்தால், சாமான் வாங்கும் ஆசையே பலருக்குப் போய்விடும்.

**– ஏ. கே. செட்டியார்**

### ஏ. கே. செட்டியார் (1911–1983)



இவர் தமிழ்நாடு கோட்டையூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் கருப்பன். தமிழின் பயண இலக்கிய முன்னோடி எனச் சிறப்பிக்கப் படுபவர். பிற நாடுகள் சென்று தங்கள் அனுபவங்களை நூலாக்கித் தந்தவர்களுள் இவரும் ஒருவர். இவரது நூல்கள் வெளிநாடு செல்பவர்களுக்கு வழிகாட்டியாகவும் செல்ல வாய்ப்பில்லாதவர்களுக்கு விளக்க நூலாகவும் அமைபவை. இவர் அமெரிக்க நாட்டில், கரிபியன் கடலும் கயானாவும், மலேயா முதல் கனடா வரை போன்ற பயண நூற்களையும் எழுதியுள்ளார். இக்கட்டுரை **உலகம் சுற்றும் தமிழன்** என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- சிம்லாவின் இயற்கை அழகைக் கவிதையாகப் படைக்க.
- பயணத்தின் போது கவனிக்க வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்துக் குழுவாகக் கலந்துரையாடல் நிகழ்த்துக.
- நீ சென்று வந்த பயண அனுபவத்தின் அடிப்படையில் இயற்கை வருணனை ஒன்று தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# வாழ்க்கை வரலாறு

தமிழ் இலக்கியங்கள் உலக அரங்கில் இன்று பெரும் புகழ்பெற்று விளங்குவ தற்குக் காரணமாக இருந்த அறிஞர்கள் பலர். அவர்களுள் மிகவும் முக்கியமானவர் கள் ஒரு சிலர். அந்த ஒருசிலருள் குறிப்பிடத்தக்கவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. உ.வே.சா. பேசப்பட்ட அளவிற்குத் தமிழர்களால் பேசப்படாதவர் சி.வை. தாமோத ரம் பிள்ளை. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். எது எப்படியாயினும் தமிழர்க ளால் மறக்கப்படாமல், மறுக்கப்படாமல் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர், சி.வை.தா.

தமிழ்த் தொண்டு புரிந்த யாழ்ப்பாண அறிஞர்கள் பலருள் குறிப்பிடத்தக்க ஒருவர் சி. வை. தாமோதரம் பிள்ளை. ஏராளமான நூற்களை முறையாகப் பதிப்பித்துத் தமிழ் மொழியை வளப்ப டுத்தியவர். தமிழ் மொழியில் மட்டுமல் லாமல் அறிவியல் துறைகளிலும் புலமை மிக்கவராக இருந்தவர்.

ஏடுகளில் இருந்த பிரதிகளை அச்சுப் பிரதிகளாக மாற்றி வரலாற்றில் இடம்பெற வைத்தவர்களுள் சி.வை. தா.வும் ஒருவர். அவரது வாழ்வும் பணியும் வரலாற்றில் அழிக்க முடியாதவை. பல்துறைப்புலமை உடையவராக விளங்கியவர் சி.வை.தா. அவையாவற்றிலும் உயரியது அவரின் தமிழ்ப்பணி.

இந்தியாவின் வரைபடத்தை நோக்குகிறபோது அதன் தென்பகுதியில் சிறிய தீவாகக் காட்சி அளிப்பது இலங்கை. தாயின் அருகில் அமர்ந்திருக்கும் சேயைப் போன்று இந்தியாவை ஒட்டி இலங்கை அமைந்துள்ளது. இன்றைய நிலையில் போராட்டப் பூமியாகக் காட்சி அளிக் கும் இலங்கை ஒரு காலத்தில் அமைதிப் பூங்காவாக அமைந்திருந்தது.

இயற்கை அதிசயங்களுள் ஈடு இணையற்றதாக விளங்கும் ஆழியின் நடுவில் அழகு எழில் கொஞ்சும் பூமியாக விளங்குவது இலங்கை. ஸ்ரீலங்கா என்று அழைக் கப்படும் இலங்கைத் தீவில் தமிழர்கள் வாழும் பகுதி யாழ்ப்பாணம் என்னும் நகரம். அதனருகே புத்தூர் என்னும் ஊர் அமைந்துள்ளது. அதனைச் சார்ந்த சிற்றூர் சிறுப் பிட்டி என்பதாகும். இந்தச் சிற்றூரில் வாழ்ந்து வந்த வைரவநாதர் என்பவருக்கும் ஏழாலை ஊரைச் சேர்ந்த பெருந்தேவியார் என்பவருக்கும் மூத்த மகனாகச் சி.வை. தாமோதரம் பிள்ளை பிறந்தார். 12.9.1832 ஆம் ஆண்டு பிறந்த இவருக்குப்பின் ஆறு தம்பியர் பிறந்தனர்.

சி.வை.தா.வின் தந்தை தமிழ்ப்புலமை மிக்கவர்; ஆசி ரியராக விளங்கியவர். தொடக்கக் கல்வியைத் தம் தந்தை யாரிடமே சி.வை.தா. கற்றார். அக்கால வழக்கப்படி, அற நூல்கள், சொற்பொருள்கூறும் நிகண்டு நூல்கள் ஆகிய வற்றைக் கற்ற பின்னர், மேலும் சில தமிழ் நூல்களை சி. வை.தா. கற்க விரும்பினார். சிறுப்பிட்டிக்கு அருகிலமைந்த சுன்னாகம் என்னும் ஊரிலுள்ள முத்துக் குமாரக் கவிராய





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ரிடம் இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றார். ஆங்கிலமும் கற்கும் ஆர்வ முடையவராய்த் தெல்லியம்பதி அமெரிக்க மிசன் கலாசாலையில் ஆங்கிலம் கற்றார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண வட்டுக்கோட்டைப் பல்கலைக்கல்லூ ரியில் பயின்று கணிதம், தத்துவம், வானவியல் முதலானவற்றிலும் தேர்ந்தார். அதன் பிறகு யாழ்ப்பாணப் பல்கலைக் கல்லூரியில் எட்டு ஆண்டுகள் பயின் று தம் இருபதாம் வயதில் சிறந்த கல்வித் தேர்ச்சி பெற்றார். இவரின் புலமை யைக் கண்ட தமிழாசிரியராகிய நெவின்சு என்பவர் சி.வை.தா.வைப் 'பண்டிதர்' என்று போற்றினார். பல்துறை அறிவு பெற்றிருந்த சி.வை.தா. தமிழில் அதிகப் புலமை மிக்கவராக விளங்கினார்.அதன் பிறகு 1857 ஆம் ஆண்டு சென்னைப் பல்கைக்கழகம் தொடங்கப் பெற்றவுடன் நடத்தப்பெற்ற பி.ஏ. பட்டத்திற்குரிய தேர் வில் முதல் மாணவராகத் தேறினார்.

பி.ஏ. பட்டம் பெற்ற சி.வை.தா. சட்டக்கல்வி பயின்று 1871 ஆம் ஆண்டு பி.எல் தேர்வில் வெற்றி பெற்றார். இவையாவும் சி.வை.தா. பட்டத்திற்காகப் படித்த படிப்புகள். ஆனால் அவர் வாழ்நாள் முழுவதும் தமிழ் இலக்கணங்களையும், இலக்கியங்களையும், பயின்றும் ஆராய்ந்தும் வந்தார். சைவராகப் பிறந்த சி.வை.தா. கல்விக்காக, கிறித்துவ மதம் மாறினார். மேலை நாட்டுக் கல்வி கற்க விரும்பிய போது அவர் காலத்தில் கிறித்தவர்களுக்கே மேலை நாட்டு ஆங்கிலக் கல்வி கற்பிக்கப் பெற்ற நிலை இருந்து வந்தது. அதனால், தாமும் கிறித்தவராக மதம் மாறி, மேலைக்கல்வியைப் பெற்றார். ஆயினும் சைவசமயக் காவலரான ஆறுமுக நாவலரின் தொடர்பு ஏற்பட்டவுடன் சி.வை.தா. கிறித்தவச் சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கே மாறி, இறுதிவரையிலும் அச்சமயத்தையே சார்ந்திருந்தார். கிறித்த வராக மாறியபோது சி.எல்.டபுள்யூ. கிங்க்ஸ்பரி (C.L.W. Kingsbury) என்ற பெயரில் கல்வி பயின்றார். ஆறுமுகநாவலர் செல்வாக்கால் மீண்டும் சைவராக மாறியபிறகு சி.வை.தாமோதரம் பிள்ளை என்ற பெயரையே தாங்கி இருந்தார்.

சி.வை.தா. தம் இருபதாம் வயதில் கல்வி ஓரளவு முடிந்தவுடனே யாழ்ப்பாணக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகும் வாய்ப்பினைப் பெற்றார். அவர்தம் புலமையையும், திறமையையும் கேள்விப்பட்ட பெர்சிவல் பாதிரியார் தாம் நடத்திவந்த 'தினவர்த்தமானி' என்ற வார இதழுக்குத் துணையாசிரியராக இருக்குமாறு விரும்பி வேண்டினார். அவர் விரும்பியவாறே சி.வை.தாவும் அவ் விதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். தினவர்த்தமானி வாரந் தோறும் வியாழக்கிழமையில் வெளிவந்தது. சமுதாயச் செய்திகள், இலக்கியம், அறிவியல் முதலிய செய்திகள் அவ் இதழில் இடம்பெற்றன. பெர்சிவல் திருத் தந்தை, ஆறுமுக நாவலரைக் கொண்டு கிறித்தவத் திருமறையாம் விவிலியத்தை மொழியாக்கம் செய்தவர். அவர் அவ்விதழிலிருந்து ஓய்வு பெறும்போது சி.வை.தா. வை அவ்விதழின் ஆசிரியராகப் பணித்தார். அதனால் சி.வை.தாவின் அறிவையும் எழுத்தாற்றலையும் உலகம் அறிந்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இதழாசிரியர் பணியும், கல்வி கற்பிக்கும் ஆசிரியப் பணியையும் சி.வை.தா ஒருங்கே ஆற்றி வந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்ல அவர், பேராசிரியர் பர்னல். சர் வல்டர் எலியட், லூசிங்டன் முதலாய ஆங்கிலப் பெருமக்களுக்குத் தமிழ் கற்பித்து வந்தார். இச்செய்தி அரசுக்கு எட்டியது. அதனால் அரசு இவரைச் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழாசிரியராகப் பணியமர்த்தியது. அதன்பிறகு அவருக்குக் கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரித் தமிழாசிரியராகும் வாய்ப்புக் கிடைத்தது. அக்கல்லூரியில் சி.வை.தா திறம்படப் பணியாற்றினார். ஆகவே, சென்னை அரசாங்க வரவு செலவு கணக்குத் துறையில் அலுவலராகும் பணி கிடைத்தது. அப்போது ஒரு நாள் அவ் அலுவலகத் தலைவர் விரைந்து முடிக்க வேண்டிய ஒரு கணக்கைத் தாமோதரம் பிள்ளையிடம் கொடுத்தார். "இதனை யானே முடிப்பதாயின் ஏழு நாட்களாகும். நீர் பத்து நாள்களில் முடித்துத் தருவி ரென நம்புகிறேன்" என்றார். அப்பணியை ஏற்றுக் கொண்ட சி.வை.தா நான்கே நாளில் முடித்துத் தந்தார். அலுவலகத் தலைவர் சி.வை.தாவைப் பாராட்டியதுடன் பதவி உயர்வும் வழங்கினார். அப்பதவியை வகித்துக் கொண்டே சட்டக்கல்வி பயின்று 1871 ஆம் ஆண்டு சட்டத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றார். அதன்பின் னர் 1882 ஆம் ஆண்டு தம் ஐம்பதாம் வயதில் அரசு அலுவலிலிருந்து ஓய்வு பெற்று உதவித்தொகை பெற்று வந்தார்.

அதன்பிறகு புதுக்கோட்டை அரசின் அமைச்சராக விளங்கிய சேசையர் என்பவர் சி.வை.தா. வுக்குக் கலித்தொகையைப் பதிப்பிக்கப் பொருள் உதவியது மட்டுமன்றி, சி.வை.தாவிடம் பேரன்பு பூண்டு அந்த ஆண்டே புதுக்கோட்டை முறைமன்ற நடுவர்களில் ஒருவராகச் சி.வைதாவை நியமித்து மகிழ்ந்தார். அப் பொறுப்பினை நான்காண்டுகள் செவ்வனே ஏற்று, 1880 இல் அப்பொறுப்பினின்றும் விலகினார். அதன்பின், சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழுவின் உறுப்பினராகவும், தேர்வுத் திட்டம் வகுக்கும் குழுவிற்குத் தலைவராகவும் விளங் கினார். அப்போது, அவர் பணியாற்றிய திறம் குறித்தும் இவர்தம் சிறப்பினைக் குறித்தும் சான்றோர் பாராட்டினர்.

தாமோதரம் பிள்ளையின் பணிகள், தொடக்கநிலை ஆசிரியர், தமிழாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், உயர் அலுவலர், பாடநூல் குழுவின் தலைவர், முறை மன்ற நடுவர் எனப் பல்வேறுபட்டதாக அமைந்திருந்தன.

சி.வை.தா அழியும் நிலையையடைந்த அரிய பண்டைத் தமிழிலக்கிய இலக் கண நூல்களை அச்சிலேற்றி, பதிப்புரைகளை எழுதிப் பதிப்பித்தார். தம் வாழ் நாள் முழுவதும், தாம் ஆற்றிய பல்வேறு பணிகளுக்கிடையேயும் தமிழ்ப் பணி யைத் தவறாமல் ஆற்றி வந்தார்.

சி.வை.தாமோதரர் செய்து வந்த தமிழ்த் தொண்டு, கல்வித்தொண்டு, முறை மன்றத் தொண்டு ஆகியவற்றை நன்கறிந்த அரசு அவரைச் சிறப்பிக்கக் கருதி 'இராவ் பகதூர்' என்னும் மதிப்புறு விருதினை 1885 ஆம் ஆண்டு வழங்கியது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அதனை அறிந்த மைசூர் அரசு தாமோதரரை அழைத்துப் பாராட்டெடுத்துப் பரிசு வழங்கியது. ஆங்கிலப் பெருமக்கள், செல்வர்கள், திருமடத் தலைவர்கள் ஆகியோரெல்லாம் தாமோதரர் பெற்ற சிறப்பினை வரவேற்றுப் பாராட்டினர்.

## சி.வை.தாவின் தமிழ்ப்பணி

சி.வை.தா அழியும் நிலையையடைந்த பண்டைத் தமிழிலக்கிய இலக்கண நூல்களை அச்சிலேற்றி, அரிய பதிப்புரைகளை எழுதிப் பதிப்பித்தார். தமது சொந்த வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்தித்த சி.வை.தா துன்பங்களுக்கிடையிலும் அதிசயிக்கத்தக்க வகைகளில் தமிழ்ப்பணி செய்துள்ளார். தாமே சொந்தமாகப் பல நூல்களை எழுதியும் பல நூல்களைப் பதிப்பித்தும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாக விளங்கினார்.

சி.வை.தாவின் பதிப்புகள் இருவகைப்படும். அவைகளில் ஒன்று இலக்கணப் பதிப்புகள். மற்றொன்று இலக்கியப் பதிப்புகள் ஆகும். தொல்காப்பியம் – சொல்லதிகாரம் சேனாவரையர் உரை (1868), வீரசோழியம் – மூலமும் பெருந்தேவனார் உரையும் (1881), இறையனாரகப் பொருள் – நக்கீரர் உரை (1883), தொல்காப்பியம் – பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை (1885) (3 பகுதிகள்), இலக்கண விளக்கம் (1889), தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை (1891), தொல்காப்பியம் – சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை (1892) போன்ற நூற்கள் இலக்கணப் பதிப்புகளாகும்.

நீதிநெறி விளக்கம் (1854), தணிகைப் புராணம் (1883), கலித்தொகை – நச்சினார்க்கினியர் உரை (1887), சூளாமணி – மூலம் மட்டும் (1889) போன்ற நூற்கள் இலக்கியப் பதிப்புகளாகும்.

**– மு. சற்குணவதி**

**மு. சற்குணவதி**



இவர் 1961 இல் தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தில் பிறந்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல், சங்க இலக்கியம் என பல்துறைகளிலும் ஆய்வுகளை நிகழ்த்தி பல நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது **'சி. வை.தாமோதரம் பிள்ளை வாழ்வும் பணியும்'** என்ற நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## செயல்பாடுகள்

- சி.வை. தாமோதரம் பிள்ளையின் தமிழ்ப் பணி குறித்த சொற்பொழிவுக்கான குறிப்பு ஒன்று தயார் செய்க.
- பழந்தமிழ் நூற்களைப் பதிப்பிப்பதற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த சில தமிழறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்பைத் திரட்டுக.
- பிறநாட்டுத் தமிழறிஞர்களையும் அவர்களது சாதனைகளையும் திரட்டி மலர் ஒன்று தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ஒரு கிராமத்து நதி

எங்கிருந்து வருகிறது
இந்த நதி?
மலைகளின்
மௌனம் உடைந்தா?
முகில்களின்
ஆடை கிழிந்தா?
வனங்கள் பேசிய
இரகசியங்கள் கசிந்தா?

இல்லை ...
என்னிலிருந்து ...
என் அந்தரங்கங்களின்
ஊற்றுக்கண் திறந்து
என் மார்புகள்
புல்லரித்து
என் ரத்தக் குழாய்களில்
புல்லும் பூவும் மணந்து
என்னை முழுக்காட்டி
என்னையே கரைத்துக் கொண்டு ...
அங்கிருந்து வருகிறது
இந்த நதி.

ஓடும் பாம்பை மிதித்துக் கொண்டும்
புல்லாங்குழல்கள் ஊதிக் கொண்டும்
ஆடித்திரியும் சின்னக் கண்ணன்கள்
இங்கும் உண்டு ...
இது என் யமுனை

அலுத்துப் படுக்க
அரிச்சந்திர மயானமும்
நெருப்பில் குளித்த மிச்சங்களை
பனிக்குடத்தில்
பவித்திரமாய் ஏந்தும்
ஈரக் கருப்பையும் இதனிடம் உண்டு
இது என் கங்கை...

### வஞ்சப்புகழ்ச்சி அணி

ஒன்றைப் புகழ்வதுபோலப் பழித்தும், பழிப்பது போலப் புகழ்ந்தும் கூறுவது வஞ்சப்புகழ்ச்சி அணியாகும்.

எ.டு. பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே.

**விளக்கம்**

புலவர் யாவரும், வரையாது வழங்கும் மாரியொன்றிருக்கப் பாரி பாரி என்றே புகழ்வது எவ்வளவு அறியாமை என்று பாரியைப் பழிப்பது போலப் புகழ்தலின் இது வஞ்சப்புகழ்ச்சி அணியாகும்.

“தேவரனையர் கயவர் அவரும் தாம்
மேவன செய்தொழுக லான்”

இக்குறட்பா புகழ்வது போல பழித்தலுக்கு எடுத்துக்காட்டாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அண்டை மாநிலத்துக்குச்
சண்டைகள் போடாமல்
போகிறது
இது என் காவிரி...
உப்பாறு இதனுள் சங்கமிக்கும்
பாலாறும் கூட.
இது என் உதிரத்தின் உப்பு
இது என் தாய்ப்பால்

படிக்காத இதிகாசங்களும்
எழுதி முடிக்காத சரித்திரங்களும்
இதன் கரையில்...

பாறைகளைச்
சிற்பமாக்குகிற பழக்கம்
இதன் அலை நுணுக்கம்
பகல்களில் நகரும் ஓவியம்
இரவுகளில் தொலைதூரக் காற்றின்





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நாதசுரத்துக்கு அசையும்
பாதசரம்.

தானும் உணவாகி
மீனும் உணவாகும்
இந்த நதிக்கு
நானும் உணவாவேன்
இது
நான் தவழ்ந்த கோரைப்பாய்
முகம் பார்த்த கண்ணாடி
என் காதலின் வீணை
ஏகாந்தங்களின் பள்ளியறை
பெருமூச்சுகளின் பந்தய மைதானம்

பாரங்கள் தாங்காது வழியும்
பெரிய கண்ணீர்த் துளி

நினைவுகளைப் பொதிந்துவைத்த
வெள்ளித் தாள்

துயரங்களின் கால்வாய்
சந்தோஷங்களின் சமுத்திரம்
என் நீல ரத்தம்
என் ஆதிக் கவிதைகளின்
தொப்புள் கொடி
அந்திமச் சாசனத்தின்
ஏட்டுச் சுவடி

காலங்களின் தோளில்
பவனிவரும் இந்த மகாகவிதையில்
எழுத்துக்களுக்கு இடையே
தேங்கும் மௌனம்
நான்.

**சிற்பி**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**சிற்பி**



இவர் 1936 இல் கோவை மாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சியில் பிறந்தார். இவரது இயற்பெயர் பாலசுப்பிரமணியம். கேரளத்தில் பள்ளிக் கல்வியை முடித்தவர். பாரதியார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். இவரது முதல் கவிதைத் தொகுதி நிலவுப்பூ. சில மலையாளக் கவிதைகளையும் உரைநடை நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ்க் கவிதையில் தடம் பதித்த வானம்பாடி இயக்கத்தை வழிநடத்திய படைப்பாளர்களில் ஒருவர். இப்பாடப்பகுதி சாகித்திய அகாடமி பரிசு பெற்ற **ஒரு கிராமத்து நதி** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ‘கவிஞர்களின் பார்வையில் நதி’ எனும் பொருண்மையில்’ நதிகள் பற்றிய கவிதைகளைத் தொகுக்க.
- மேனிலைப்பள்ளியில் உங்களது முதல் நாள் அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- வஞ்சப்புகழ்ச்சி அணியை விளக்கி, எடுத்துக்காட்டு தருக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# அகர முதலி

அகழ் - தோண்டு
அந்தி - மாலை
அலர்ந்தவர் - துன்பமுற்றவர்
அல்லல் - துன்பம்
ஆளி - ஒரு வகை நீர்வாழ் உயிரினம்
இடவப்பாதி - ஆண்டுதோறும் வைகாசியில் தொடங்கிக் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் விடாமல் பொழியும் மாரிக்காலத்தைக் குறிப்பது
உடுப்பு - ஆடை, சட்டை
உற்றுழி - தகுந்த சமயத்தில்
எண்பேராயம் - எட்டு உறுப்பினர்கள் அடங்கிய அவை
எழினி - திரை
ஏடு - ஓலைச்சுவடி
ஐம்பெருங் குழு - ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய அவை
ஔஷதம் - மருந்து
கவிச்சி - மாமிசம்
களேபரம் - கூச்சலும் குழப்பமும் நிறைந்த நிலை
கார் - கார்காலம் (மழைக்காலம்)
குடி - குடும்பம்
குமஸ்தா - எழுத்தர்
கேளிர் - உறவினர்
கொண்டல் - மேகம்
சிம்மாசனம் - அரசு இருக்கை
சுரம் - பாலை நிலம்
செறிவு - நெருக்கம்
செற்றம் - சினம், கோபம்
சொஸ்தம் - குணம்
ஞாலம் - உலகம்
தணிதல் - குறைதல்
தமியர் - தனியாக இருப்பவர்
தரவாடு - பாரம்பரியம்
தழல் - நெருப்பு
திங்கள் - மாதம், சந்திரன்
நோதல் - வருந்துதல்
பகிஷ்கரி - புறக்கணி
பரிச்சயம் - பழக்கம்
பவித்திரம் - புனிதம்
பாஷாணம் - நஞ்சு
பிசுக்கு - அழுக்கு
பிணி - நோய்
புசி - உண்
பேதை - விவரம் தெரியாதவர்
பொலம் பாலிகா பாலிகை) - பொன்னாலான (பொலம் +
பொறை - பொறுமை
மகவு - குழந்தை
மந்தி - பெண் குரங்கு
மீத்தேன் - மீத்தேன் என்னும் வேதிப்பொருள்
லங்கணம் - பட்டினி
வசவு - திட்டு
வயோதிக - முதுமையான



Downloaded from https:// www.studiestoday.com